உ

சிவமயம்

# சைவநீதி

SAIVANEETHI

மலர் 22 | விளம்பி ஆடி - பங்குனி | 18 July-19 March | இதழ் 4-12





பட்டமளிப்பு விழா சிறப்பு மலர்

ரூபா.50/-

## திருவாவடுதுறை ஆதீன தம்பிரான் சுவாமிகள்


# திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள்

2017 –2018 சைவசித்தாந்த, சைவத்திருமுறை பயிலுநர்களுக்கான பட்டமளிக்கும் விழா 27.01.2019











உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# சைவநீதி

மலர் ௨௨ விளம்பி ஆடி - பஙகுனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் ௪-௰௨

**தொடக்குநர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார் M.A.**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

**திருக்கயிலாய பரம்பரை - திருவாவடுதுறை ஆதீனம்**
**சைவசித்தாந்த, சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமையம்.**
**இணுவில் - கொழும்பு**
**சித்தாந்தரத்தினம் - திருமுறைநெறிச்செல்வர்**
**பட்டமளிப்பு விழா சிறப்புமலர்**

## இதழின் உள்ளே

01. தொல்காப்பியத்தில் மெய்யியற் கருத்துக்கள்- 2
02. திருவைந்தெழுத்து - 5
03. சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு - 8
04. சப்தவிடங்கர் - 12
05. இடர் திர வழி என்ன? - 15
06. சிவராத்திரி இன்றைய நிலைமை - 19
07. பக்தனிடம் சென்ற பரமன் - 21
08 சைவமும் சைவநெறியும் - 23
09. முதலாவது மலேசிய ஆன்மிகப் பயணம்- 27
10. திருக்குறட் கதை - ஊழ்வினை - 31
11. பெரியபுராணத் தொடர். அமர்நீதி நாயனார்- 33
12. ஆறுமுகமான பொருளும் ஒன்றே - 35
13. பயிற்சிமைய பயிலுநர்கள் விபரம் - 38
14. திருத்தல யாத்திரை தொகுப்பு - 42
15. அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் - 47
13. சைவசமயம் மாணவர் அறிவுப் பெட்டகம் - 53
17. யாப்பிலக்கணம் (வினா-விடை) - 57
18. பட்டமளிப்பு விழா அழைப்பிதழ் - 62
19. நினைவிற் கொள்வதற்குரிய நாட்கள்

உ
சிவமயம்

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்
# விளம்பி வருடம் பங்குனி மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01. | 15.03.2019 | வெள்ளி | மாதப்பிறப்பு |
| 04. | 18.03.2019 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 06. | 20.03.2019 | புதன் | பூரணை விரதம் |
| 07. | 21.03.2019 | வியாழன் | பங்குனி உத்தரம் |
| 10. | 24.03.2019 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி விரதம்<br>காரைக்காலம்மையார் குருபூசை |
| 19. | 02.04.2019 | செவ்வாய் | பிரதோஷ விரதம்<br>தண்டியடிகள் நாயனார் குருபூசை |
| 22. | 05.04.2019 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| 25. | 08.04.2019 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 26. | 09.04.2019 | செவ்வாய் | சதுர்த்தி விரதம்<br>நேசநாயனார் குருபூசை |
| 27. | 10.04.2019 | புதன் | ஷஷ்டி விரதம் |
| 28. | 11.04.2019 | வியாழன் | கணநாத நாயனார் குருபூசை |
| 30. | 13.04.2019 | சனி | முனையடுவார் நாயனார் குருபூசை |

உ
சிவமயம்

# தொல்காப்பியத்தில் மெய்யியற் கருத்துக்கள்

சித்தாந்தரத்தினம் சி. குமாராஜக்குருக்கள்

மேலைத்தேய அடிப்படையில் ஆயும் இந்திய மெய்யியலாளர்தம் ஆராய்ச்சியின் முடிவுகளாகச் சொன்ன கருத்துக்களைத் தொல்காப்பியத்தில் எடுத்துக்காட்டும் பார்வையிற் சில.

கி.மு. 469 - 399 இல் வாழ்ந்த கிரேக்க மெய்யியல் அறிஞர் சோக்கிரட்டிஸ் மேற்கு உலக நாடுகளில் மெய்யியற் கருத்துகளுக்கு வித்திட்டார். இந்திய மெய் இயல் அறிவின் சுவடுகள் தொல்காப்பியத்தில் இருப்பதை உணரலாம். தொல்காப்பியர் கி.மு. 3000 ஆண்டளவில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல் உலகில் வாழ்ந்தவர். அவருக்கு முன்பும் மெய் அறிஞர் தமிழகத்தில் வாழ்ந்துள்ளதாக ஆராய்ச்சி கூறும். கடல் கோள்களால் அவை அள்ளுண்டு சென்றன. ஆயினும் அக்கால அறிவுச் செல்வங்கள், தகவல்களைப் பாக்கள் சிலவற்றால் அறியலாம்.

ஏரணம் (தர்க்கம்), உருவம், யேகம், இசை, கணக்கு, இரதம் (தேர்) சாலம் (அரண்), தாரணம் (கடல்), முறம் (போர்), சந்தம் (பாவண்ணம்), தம்பம் (கவசம்), நீர், நிலம், உலோகம், மாரணம் (மந்திரக்கோல்) பொருள் என்றினையனவான நூல்கள்யாவும் வாரி வாரணம் கொண்ட தற்கோர் வழிவழிப் பெயரும் என அப்பாடல் கூறுகின்றது.

தொல்காப்பியரின் மெய்யியல் அறிவு பின்னர் கடைச்சங்கப் புலவர்கள் திருவள்ளுவர், திருமூலர் சித்தர், சந்தானகுரவர் முதலியோரிடம் விரிவு அடைந்து வருவதை ஆராய்ந்து அறியலாம். மெய்யியல் - இந்திய மெய்யியல், இந்து தத்துவம், சைவசித்தாந்தம் என்பன அரசியல் மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காகப் பொது நோக்கில் இந்தியாவுக்கு உரிய அல்லது இந்துக்களுக்கு உரிய ஒன்றாகப் பார்க்கப்பட்டாலும் அவை முறையே மேலைத்தேய அடிப்படை (வட இந்திய) பிரம்ம சூத்திரம், வேதாந்த மெனும் உபநிடதம், பகவத்கீதை என்பவற்றின் அடிப்படை. வேதத்தோடு ஆகமமும் சேர்ந்த தென்இந்திய அடிப்படையில் ஆனவை என்பது உணரப்படவெண்டும். பதி, பசு, பாசம் எனும் முப்பதார்த்தங்களின் உண்மை, அவற்றின் இலக்கணம், பயன் முதலியவை பற்றிய விரிந்த அறிவை வழங்குபவையாக இப்பதங்களைக் கொள்ளுதல் வேண்டும். பதார்த்தங்கள் எனும்போது இவர்கள் தத்தம் கருத்தில் கொண்ட பொருள்கள் சிலவே ஒற்றுமைப் படுகின்றன. (ஐரோப்பிய) மெய்யியல், உலக மக்களின் இகவாழ்வு நோக்கில் ஆராயப்படுவது. இந்து தத்துவம் சைவசித்தாந்தம் என்பன மக்களின் இகவாழ்வின் ஊடாகப் பரவாழ்வை ஆராய்வன.

தொல்காப்பிய அகத்திணையில், ஐந்திணைகளுக்கும் தனித்தனியே உரியனவாய் அமைந்த கருப்பொருள் வகையில் முதல்வருவது தெய்வம். கடவுள் என்பது பிரபஞ்சத்தைக் கடந்தும் அதனுள்ளுமாய் அமைந்தும் நீக்கமற எங்கும் நிறைந்த பரம்பொருளாகும். பிரபஞ்சச் சார்பின்றிக் கடந்து தன்வயத்தனாய் நிற்றல் அதன் சொருபநிலை. பிரபஞ்சத்தோடு கலந்தும் அதில் தோயாது அதை இயக்க அதனுள்ளாதல் அதன் தடத்த நிலை. தடத்தத்திலும் அது கண்காணாத அருவம், காணும் குறியாகிய அருஉருவம், மானுட தோற்றத்திற்கொப்ப (அம்மையப்பராய்) விளங்க உருவோடு பொருந்தல் தடத்தம். அந்நிலைகள் பிற்கால சைவசித்தாந்த நூல்களில் சிறப்புற

விபரிக்கப்பட்டதேயாயினும், தொல்காப்பியத்தில் இந்நிலைகள், வள்ளி, கந்தழி, கொடிநிலை என்பவற்றைச் சூக்குமமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

தெய்வம் என்பது பொதுவாகக் கடவுளைக் குறிப்பதாயினும், சிறப்பாக அச்சொல் அவ்வந்நில மக்கள் வழிபடு (கீழ்நிலை) தெய்வங்களைக் குறிக்குமென்பது நுண்ணிதின் நோக்கற்பாலது. அதனால் பரம்பொருளாகிய கடவுள் திணைகளுக்குரிய தெய்வங்களுக்கும் மேலாக உள்ளமையும் பண்டைய நூல்களில் இணையிலி என்ற பதத்தாற் கடவுள் சுட்டப்பட்டமையும் காண்க.

**"தாளியும் கொன்றையும் தழைத்தலின் முல்லையும்**
**பாந்தளும் தரக்கும் பயிறலின் குறிஞ்சியும்**
**முடைத்தல எரிபொடி உடைமையிற் பாலையும்**
**ஆமையும் சலமும் மேவலின் மருதமும்**
**கடுவும் சங்கமும் ஒளிர்தலின் நெய்தலும்**
**ஆகத் தனது பேரருள் மேனியில்**
**திணை ஐந்து அமைந்த இணையிலி நாயகன்."**

சைவசித்தாந்தம் அதன் அறிவின் உச்சியைத் தொடும் (சித் அந்தம்) சிறப்பு நோக்கிப் பொதுவில் சித்தாந்தமெனவே வழங்கப்படுகின்றது. நிராகரிக்கப்படாத இவ்வுண்மை மேனாட்டவராலும் ஒப்புதல் பெற்றமைபற்றி அவர்களின் (ஆங்கில) மொழிவாயிலாகவே இந்நூல்(1.4)இல் தரப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் வேதத்தைப் பொதுவிலும் ஆகமத்தை சிறப்பிலுங் கொண்டு யாராலும் எளிதில் விமர்சித்துப் பொய்யென நிராகரிக்கச் சிறிதும் இடம்தராத அசைக்கமுடியாதபடி உள்ள பதி, பசு, பாச உண்மைகள் முதலியவற்றைத் தெட்டத் தெளிவாக விளக்கும். அதனால் உயிர் உய்யும் மார்க்கத்தை உலகிற்கு உணர்த்தித் தாய்ச்சமயமென ஓங்கி நிற்றல் யாதும் புகழ்ச்சியல்ல.

இந்து தத்துவம் என்னும் சொல் சமயதத்துவ ரீதியில் வலுவுள்ள, வரைபுள்ள சொல்லல்ல. காரணம் இந்து என்பது, அச்சொட்டாகக் குறித்த வரைபுள்ள ஒரு (கடவுள்சார்ந்த) சமயக் கொள்கையைப் பிரதிபலிப்பதில்லை. அது இந்தியாவில் தோன்றிய வேதச்சார்பான மற்றும் சார்பற்ற பலவித வியாக்கியானங்களால் உந்தப்பட்டு மாறுபடும் பல கொள்கைகளின் கூட்டாகக் கொள்ளப்படவேண்டியது. இறை, உயிர், தளை அல்லது பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் உண்மை அவற்றின் இலக்கணம், பயன், சாதனை என்பன பற்றிய வரைவு செய்யப்பட்ட தகவல்கள், விளக்கங்கள் என்பன சைவசித்தாந்தத்தில் உள்ளது போல எதிலும் இல்லை. இந்துசமயம் எனப்படும் தொகுப்பாய் உள்ள சமயப்பிரிவுகளினிடையே முப்பொருள் செய்திகள் ஒத்திருப்பதில்லை.

ஆயினும் பிற்காலத்தே தோன்றிய பிறசமயங்களோடு உள்ள ஒப்பீட்டின் அடிப்படையில் பாரதத்திற்கே பொதுமையில் உரியதென பிறராற் கணிக்கபெறும் கடவுள் உண்மை (சிலவற்றில் பலவாயும், வேறு சிலவற்றில் ஒன்றின் சொரூப, தடத்தங்களாகவும் காணுதல்) உயிர் உண்மை (ஒன்றின் பரிணாமமாகவும், பலவாகவும் காணுதல்) மறுபிறவி, வினைக்கோட்பாடு, இயற்கையில் தெய்வாம்சத்தைக் காணல், முனிவர், ரிசிகள் பற்றிய மதிப்புக்கள், சாத்திரம் போன்ற கருத்துக்கள் இயன்றவரை பொதுவில் பொருந்துமாறு காண்டலால் தொகுப்பான பல இந்திய சமயங்கள் இந்து எனப்படுகின்றன. இந்திய தத்துவஞானிகள் வேத, உபநிடதக் கருத்துக்ளை ஏற்போர்,

ஏற்காதோர் என இரு பிரிவாகின்றனர். அதிலும், வேதத்தோடு ஆகமத்தையும், அவற்றுடன் முரண் இன்றிப் பொருந்தும் உபநிடதங்களையும் ஏற்போர் சைவசித்தாந்திகள். இந்திய தத்துவத்தில் சைவசித்தாந்திகள் சிறப்பாக சித்தாந்தம் என அடை ஏதும் இன்றி உயர்நிலையில் நின்று ஏனைக் கொள்கைகளையும் தாயென அரவணைக்கின்றது. இது பற்றி ஏலவே கூறப்பட்டது. பின்னணியில்(ஐரோப்பிய கல்விசார்) மெய்யியலாளர் கருத்தில் எடுக்கும் பதார்த்தங்கள் காணும் உளசார்பான மக்களின் இருப்பு இயக்கம் பற்றியவை, உலகத் தோற்றம், உயிர் இயல்பு, உயிர்களினதும் பொருள்களினதும் இருப்பியல், இயங்கியல் என விரிவன. பிரதானமாக அவர்கள் காணும் உயிர் விவகாரங்களான உணவு, உடை, உறையுள் பற்றிய மேம்பாடுகள், வசதி வாய்ப்புக்கள், அதுசார் மனம், புத்தி மற்றுமுள்ள குறித்த காரணிகள், மானிட ஒழுக்கங்கள், தொடர்பாடல் என்பவற்றை ஆராய்தல் என்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். சமூகம் சார் (உலக) நல்வாழ்விற்கு உதவலாம். ஒவ்வோர் உயிர்க்கும் உறுதி பயக்கும் நீண்ட நிரந்தர இன்பம் அளிக்கும் விஷயங்கள் இல்லையெனும்படி மிகக்குறைவே. அவர்களின் ஆராய்வுப் பிரமாணம் பொறிபுலன்களே.

இந்திய தத்துவங்கள் சிறப்பாக வைவசித்தாந்தம் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றினோடு பௌத்தம், சாங்கியம் கூறும் தர்க்க முறைகளையும் அனுசரித்துச் செல்கிறது. சித்தாந்தம், அவரவர் கொண்ட அளவு, பிரமாணங்கள் ஊடாகவே அவரவரை மறுதலித்து சிவஞானமுனிவரின் சிவஞானபோத மாபாடியம், அருணந்திசிவாசாரியரின் சிவஞானசித்தியார் பரபக்கம் என்பவற்றில் இனிதே சுவைபடவும், தர்க்க ரீதியிலும் தரப்பட்டு உள்ளதை அவற்றை முறையாகக் கற்றால் மட்டுமே புரியும்.

கீழை நாட்டவர் (தென்னாட்டவர்) சுருதி (வேத ஆகம நூல்கள் ரிஷிகளின் தரிசன ஏட்டில் உள்ள வாக்குகள்), யுக்தி (பொறி புலன்களுடன் மானிடப் பகுத்தறிவுச் சிந்தனையாற்றலால் வரும் தந்திரம், தமதும் தாம் கேட்டு அறிந்த பிறரினதும் கடந்தகால அனுபவங்கள், தர்க்க சிந்தனைகள்) போன்ற பலவற்றை அதற்குப் பொருத்தமான பிரமாண அளவையாகக் கொண்டனர். அப்பிரமாணங்களால் பதி, பசு, பாசம் பற்றிய பொய்கண்டு அகன்ற மெய்கண்டதேவன் சித்தாந்த புறச்சந்தான முதல்வர் ஆவார். அகச்சந்தானம் மேல்உலகில் தெட்ஷணாமூர்த்தியாரை முதல்வராக கொண்ட நால்வர் சைவசித்தாந்தம். அவன், அவள், அதுவெனும் முக்கூறுகளால் குறிக்கப்படும், இயங்கும் இயங்கா பிரபஞ்சம், தோற்றம், நிலைப்பு, அழிவு (ஒடுக்கம் எனும் மூவினைபடுதல்) பற்றியும், அதன் வினைவு பற்றியும் பேசுகின்றது. பசு எனப்படும் உயிர்களின் பாச வினைத் தொடர்பினால், அவை மீளமீளப் பிறந்து இறந்து உழலும் எனவும், மீளப்பிறக்கையில் அவற்றின் நல்ல தீய வினைகளுக்கு ஏற்ப அவற்றிக்குப் பாச சம்பந்த உடல் மற்றும் கருவிகளைக் கொடுக்க சிறந்த நீதிமான் ஒருவன் வேண்டும், அதுவே சிவன் அல்லது பரம்பொருளாகிய பதி எனவும் கூறுகின்றது. அதாவது பதி, பசு, பாசம் என்பனவே சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் அல்லது பதார்த்தங்கள் என்றாகின்றன. இவற்றுள் ஏனய யாவும் அடங்கும் என்பதும் கவனிக்கத் தகுந்ததே. பாசம் என்பது ஆணவம், கன்மம், வினைமாயை என முக்கூறுபடும். சைவ சித்தாந்தத்தில் இப்பதார்த்தக் கலப்புகள், ஆய்வுகள் யாவும் மக்களின் உலக வாழ்வின் நிலையாமையினையும் இறப்பின் பின் அல்லது அவ்வுடல் இருக்கும் போதே (சீவன்முத்தர் எனுப்படி) பேரின்பமெனும் நிறைவான, இனிப் பிறவா இன்பம் பெறுதல் பற்றியும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

சிவமயம்

# திருவைந்தெழுத்து

சைவப்புலவர் செல்வி வி.கி. வீரசிங்கம்.
(ஓய்வுநிலை அதிபர்)

பிறவிப் பெருங்கடலில் அல்லலுற்று அலைந்து தடுமாறும் உயிர்கள் உய்வடைய திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். ஐந்தெழுத்துக்களாலான இந்த மந்திரத்தை வடமொழியில் பஞ்சாட்சரம் என்பர்.

திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்னும் மூன்றும், சைவர்களின் முக்கியமான அணிகலன்களாகும். இவற்றுள் திருநீறு, உருத்திராக்கம் என்னும் இரண்டும் புறத்தில் அணிபவை. அகத்து அணிகலன் ஐந்தெழுத்தாகும். அது நாவினுக்கு அணிகலன்; மனத்திற்குகந்த அணிகலன்; தியானத்திற்கான அணிகலன்; உயிருக்கான அணிகலன் எனலாம்.

"நமசிவய" என்பது தூல பஞ்சாட்சரம். "சிவயநம" என்பது சூக்கும பஞ்சாட்சரம். இவற்றை உச்சரிக்கும்போது "நமசிவாய" "சிவாயநம" என்றும் கூறலாம்.

தூல பஞ்சாட்சரத்தை ஓதுவதால் உலகியல் நாட்டம் குறைந்து, இறையருள் நாட்டம் மேம்படும். சூக்கும பஞ்சாட்சரம் இறையருளை நோக்கி உயிரைச் செலுத்தும்.

ஐந்து எழுத்துக்களும் ஐந்து பதங்களைக் குறித்து நிற்கின்றன. அவையாவன

ந - திரோதான சக்தி.
ம - மலம்.
சி - சிவம்.
வ - திருவருட் சக்தி.
ய - ஆன்மா.

இந்த ஐந்து பதத்துள்ளும் மலமும் திரோதான சக்தியும் ஊன நடனமிடுவதும், திருவருட் சக்தியும் சிவமும் ஞான நடனமிடுவதும் சைவ சாத்திர நூல்களில் கூறப்படுகின்றன.

இவ்விரு நடனங்களுக்குமிடையே உயிர் உழன்று, ஈற்றில் ஞான நடனத்தின்பால் ஈர்க்கப்பட்டு, சிவஞானராகி, சிவனடிச் செல்வர் என்ற உண்மை ஐந்தெழுத்துள் அடங்கியுள்ளது.

ஆன்ம மலர்ச்சியின் படித்தரத்திற்கேற்ப, ஓதக்கூடிய வகையில் ஐந்தாக, ஐந்தெழுத்து வகுக்கப்பட்டுள்ளது.

1. தூல பஞ்சாக்கரம் 2. சூக்கும பஞ்சாக்கரம்
3. காரண பஞ்சாக்கரம் 4. மகா காரண பஞ்சாக்கரம்.
5. மகா மனு பஞ்சாக்கரம். என்பவையாகும்.

காரண பஞ்சாக்கரம் என்பது "சிவயசிவ" ஆகும். இங்கு நம அகன்று இருபக்கமும் அப்பனும் அம்மையும் தங்க நடுவில் ஆன்மா நிற்பதாகும். இதனை அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் கூறுவர்.

மகாகாரண பஞ்சாக்கரம் "சிவ" என்பதாகும். "ய" கரமாகிய ஆன்மா சிவத்துடன் ஒடுங்கிய நிலையை இது உணர்த்தி நிற்கின்றது.

மகாமனு பஞ்சாக்கரம் "சி" ஆகும். "வ" கரமாகிய சக்தி, 'சி" கரமாகிய சிவத்துள் ஒடுங்கி நிற்கும் நிலையை இது உணர்த்துகின்றது. இம் மகாமனுவை "நாயோட்டு மந்திரம்" என்றும் கூறுவர்.

இறைவனது திருமேனி மந்திரத் திருமேனி என்று கூறப்படுகின்றது. உயிர்களின் பிறவித்துயர் அறும்படி, ஐந்தெழுத்து மந்திரத்தால் அவன் ஆடுகின்றான் என, மனவாசகங்கடந்தார் "உண்மை விளக்கம்" என்ற நூலில் விளக்குகின்றார். அம்பலத்தானின்,

திருவடி - ந
திருவயிறு - ம
திருத்தோள் - சி
திருமுகம் - வ
திருமுடி - ய

என திருவடியிலிருந்து முடிவரை "பாதாதி கேசமாக"க் கூறப்படுகின்றது.

அவ்விதமே திருமுடியிலிருந்து திருவடி வரை "கேசாதிபாதமாக" கூத்தப்பிரானின் அவயவ அமைப்புப் பற்றிக் கூறப்படுகின்றது.

உடுக்கேந்திய திருக்கரம் - - - சி
தூக்கிய திருவடியைக் காட்டும் இடது திருக்கரம் - வ
அபயகரமான வலது திருக்கரம் - - - ய
தீ ஏந்திய திருக்கரம் - - - - ந
முயலகனை அழுத்தும் வலது திருக்கால் - - ம

திருவைந்தெழுத்து இறைவனின் ஐந்தொழிலையும் உணர்த்துகின்றன.

சி - படைத்தல்.
வ - அருளல்.
ய - காத்தல்.
ந - அழித்தல்.
ம - மறைத்தல்.

மேற்கூறிய ஐந்து நிலைகளும் அமைப்பும் ஐந்தொழிலைக் குறித்து நிற்கின்றன.

திருவைந்தெழுத்தின் பெருமையினை, சைவத்திருமுறைகளும் சாத்திரங்களும் மிகச் சிறப்பாக விளக்குகின்றன.

அருளாளர்கள் வாழ்விலும் ஐந்தெழுத்து மந்திரம் உயிரும் உடம்பும் போல, ஒன்றியிருந்ததை அவர்களது பாடல்கள் மூலம் அறியலாம். இதனை ஓதுவதால் கிடைக்கும் பயனையும், பெறக்கூடிய முத்திச் செல்வத்தினையும் பாடியருளியுள்ளார்கள்.

திருவைந்தெழுத்து, நான்கு வேதங்களுள்ளும் உண்மைப் பொருளாக இருப்பதுபற்றி, ஞனசம்பந்தப் பெருமான் பாடியுள்ளார்.

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே." (3.49.1)

"கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே." அப்பர் (4.11.1)

"நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே." சுந்தரர் (7.48.1)

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்."
மணிவாசகர் (8.38.10)

"அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டானை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து." சிவஞானபோதம் (9.3.59)

"அருள்வழி காட்டுவது அஞ்செழுத்தாமே." திருமந்திரம் (2705)

"அஞ்செழுத்துமே அம்மை அப்பர் தமைக்காட்டுதலால்."
திருக்களிற்றுப்படியார (42)

"ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க."
சிவஞானசித்தியார். (40)

"அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து அருளினாலே."
சிவப்பிரகாசம். (90)

இவையெல்லாம் அருளாளர் அஞ்செழுத்தின் மகிமையை உணர்ந்து பாடிய நிலைகளாகும்.

சம்பந்தர், அப்பர் போன்ற அருளாளர் வாழ்வில், திருவைந்தெழுத்து மந்திரத்தின் துணையால், அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

சைவர்களின் எல்லாவகையான வழிபாட்டிலும், திருவைந்தெழுத்து முதலிடம் பெறுகின்றது. ஞானவழிபாடாயினும், புறப் பூசையாகினும், குண்டலினி சக்தியை எழுப்பும் யோக வழிபாடாயினும் அஞ்செழுத்து துணையாகவே நிகழும்.

ஆகவே சைவர்கள் எல்லோரும் பஞ்சாட்சரம் ஓதவேண்டும். சமய தீட்சை பெறாதவர்கள் "சைவர்" என்று கூறத் தகுதியற்றவர்களாகும்.

தீட்சை பெற்று வழிபாடு செய்து பஞ்சாட்சரம் ஓதி இறைவனின் திருவருளைப் பெற ஒவ்வொரு உயிரும் வழி காணவேண்டும்.

"மேன்மை கொள் சைவநீதி ஓங்குக."

உ
சிவமயம்

சென்றஇதழின் தொடர்ச்சி

# சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு

சைவப்புலவர் சு. செல்லத்துரை

**40. எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப்பிறப்பு அருமையுடையது?**
பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தி இன்பம் பெறுதற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமையுடையது.

இதன் மூலத்தைச் சித்தியாரின் 181ஆம் பாடலில் காணலாம்.

**வாழ்வுஎனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பி**
**தாழ்வுஎனும் தன்மையோடும் சைவமாம் சமயம்சாரும்**
**ஊழ்பெறல் அரிதுசால உயர்சிவ ஞானத்தாலே**
**போழ்இள மதியினானைப் போற்றுவார் அருள்பெற்றாரே.**

**இதன் பொருள் :** உத்தம குலத்தில் பிறந்தாலும் இளமைக் கல்வி, செல்வம், அதிகாரம் என்பவற்றால் உண்டாகும் அகங்காரம் ஒழிந்தும் வறுமையால் செல்வார்பின் சென்று தாழ்ந்து நிற்கும் சிறுமை ஒழிந்தும், இருப்பது அரிது. பணிவு உடையவராய் சைவசமயத்தைச் சேரும் புண்ணியப்பேறு மிகவும் அரிது ஆகும். சைவசமயத்தில் பிறந்தும் உயர்ந்த சைவசித்தாந்த நெறியைப் பொருந்திச் சிவபெருமானை வழிபடல் பெறுவார் ஆணவத்தின் நின்றும் நீங்கி அவர் அருள் பெற்று முத்திப்பேறு அடைவர்.

இவ்வுண்மை மேலே விடையாகத்தரப்பட்டிருப்பதைக் காணலாம்.

## பாசஇயல்

**48. பாசமாவன யாவை?**
ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பவைகளாம்.

**49. பாசம் எத்தனை வகைப்படும்?**
ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என ஐந்துவகைப்படும்.

**50. ஆணவமாவது யாது?**
அநாதியே செம்பிற் களிம்பு போல உடன் கலந்து நிற்பதாய், அறிவை மறைத்து தம்கால எல்லையில் நீங்குவதாய் இருப்பது.

**57. மாயாகாரியங்கள் எவை?**
தனு, கரணம், புவனம், போகங்கள்.

இவற்றுக்குரிய மூலம் சிவப்பிரகாசம் 32ஆம் பாடலில் இருப்பதைக் காணலாம்.

**மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்**
**மூலஆ ணவமொன்று முயங்கி நின்று**
**பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று**
**பகர்மாயை ஒன்றுபடர் கன்ம மொன்று**
**தேகமுறு கரணமொடு புவன போகச்**
**செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்றென்(று)**
**ஆகமலம் ஐந்தென்பர் ஐயம் மாறா(து)**
**அருளென்ப தரிதென்பர் அறிந்து ளோரே.**

**இதன் பொருள் :** அறியாமை மிக உண்டாகும்படி ஆன்மாக்கள் தோறும் சகசமுமாய் அநாதியுமாய் இருக்கும் **ஆணவமலம்** ஒன்று, முயங்கி நின்று பாகம் மிக உதவும் **திரோதாயி** ஒன்று, **மாயை** ஒன்று, **கன்மம்** ஒன்று, கரண புவன போகங்களைத் தரும் **மாமாயை** என்று ஐந்துமாம்.

**51. கன்மமாவன யாவை?** ஆன்மாக்கள் மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலே செய்பவை புண்ணிய பாவங்கள். இவை எடுத்த பிறப்பிலே செய்யப் பட்ட போது ஆகாமியம் எனப் பொருள் பெறும். பிறவிதோறும் இப்படி ஈட்டப்பட்டு பக்குவப்படும் வரையும் புத்தித்தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்போது சஞ்சிதம் எனப்பெயர் பெறும். இச் சஞ்சித கன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை மேல் எடுக்கும் உடம்பையும், அது கொண்டு அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களையும் தந்து பயன்படும் பொழுது பிராரத்தம் எனப் பெயர் பெறும்.

இவ்வினாவிடைக்குரிய மூலத்தை சிவஞானசித்தியார் 102ஆம்பாடலில் காணலாம்.

**மேலைக்கு வித்தும் ஆகி விளைந்தவை உணவுமாகி**
**ஞாலத்து வருமாபோல நாம் செய்யும் வினைகள் எல்லாம்**
**ஏலத்தான் பலமாச் செய்யும் இதம் அதிதங்கட்கெல்லாம்**
**மூலத்ததாகி என்றும் வந்திடும் முறைமையோடே**

(வித்து - ஆகாமியம், விளைவு - பிராரத்தம், விளைவுவரை இருப்பது - சஞ்சிதம்.)

**சிவஞானசித்தியார் 102ஆம் பாடலின் பொருள் :**
உலகத்தில் உணவின் பொருட்டு விளைந்த பொருட்கள் உணவுமாய் மேலும் வித்துமாய் வருதல் போல, நாம் செய்தோம் என்னும் முனைப்பால் செய்யப்படும் முயற்சியும். எக்காலத்திலும் செயல்வகையால் வினைக்கு ஈடாய்வரும் அனுபவத்தைத் தரும். அந்த அனுபவத்தை வினையின் பயன் என்று கருதாது, நான் செய்தேன் என்னும் கருத்துவகையால் கருதிச் செய்கின்றபோது, நல்வினை தீவினை எனப்படும் ஆகாமிய வினையை அது உண்டாக்கும். வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியம் என்பது நல்வினை, தீவினை என்னும் முயற்சியைக் குறிக்கும். சஞ்சிதம் என்பது

அந்த முயற்சி பயனுக்கு வராமல் கட்டுப்பட்டு இருப்பதைக் குறிக்கும். கட்டுப்பட்டுக் கிடக்கும் இடம் செய்தவனது புத்திதத்துவமும் மாயையும் ஆகும். பிராரத்தம் என்பது அந்த முயற்சியின் பயனை அனுபவித்தலைக் குறிக்கும்.

52. **மாயை எத்தனை வகைப்படும்?** சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றுவகைப்படும். இவைகளுள்ளே சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டும் நித்தியம். பிரகிருதி மாயை அசுத்தமாயையினின்றும் தோன்றியதாதலால் அநித்தியம்.

53. **சுத்தமாயை யாவது எது?** நித்தியமாய் வியாபகமாய் அருவமாய்ச் சடமாய் சொல் வடிவமும் சுத்தமாகிய பொருள் வடிவும் தோன்றுதற்கு முதற்காரணமாய் மயக்கம் செய்யாததாய் இருப்பது.

54. **அசுத்தமாயை யாவது யாது?** நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய், பிரளய காலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய் ஆன்மாக்களுக்குச் சுத்தா சுத்தமும், அசுத்தமும் ஆகியன தனு கரண புவன போகங்கள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் மயக்கம் செய்வதாய் இருப்பது.

இவ்வினா விடைகளுக்கு மூலமாய் இருப்பது சிவஞான சித்தியார் 143ஆம் பாடல் இதோ.

**நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர்**
**வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் அமலனுக் கோர்**
**சத்தியாய் புவனபோகம் தனுகரணமும் உயிர்க்காய்**
**வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே.**

இப்பாடலின் கருத்து மாயையின் இலக்கணம் கூறுகின்றது.

உலகத்திற்கு முதற்காரணம் எனப்படும் அசுத்த மாயையின் இலக்கணம் என்ன என்றால், மாயை உற்பத்தி இல்லாதது ஆதலால் நித்தம் ஆனது. கண்ணுக்குத் தோன்றாமையால் அருவமானது, வித்து ஆதியும் அறிவும் இல்லாததால் சடம் ஆகியும், எந்த இடத்திலும் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுப்பதால் வியாபகமாயும், இறைவனின் வியாபகத்துக்குள் அடங்குவதால் அவனுக்கு ஒருவைப்புச் சக்தியாயும், புவனமும், போகமும், தனுவும், கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிவதால் ஒரு மலமாகவும், உயிர்க்கு விபரீத உணர்வினைச் செய்வதால் மயக்கமாகவும் உள்ள இலக்கணங்களை உடையது எனக் கூறப்படுவதில் இருந்து நாவலரின் விடையின் அருமைப்பாட்டைப் புரிந்து கொள்ளலாம்.

நாவலர் பெருமானின் இரண்டாம் சைவ வினாவிடையில் 418 வினாக்களும் விடைகளும் இருந்தபோதும் இக்கட்டுரையின் அளவு வரையறுக்கப்பட்டிருக்கும் காரணத்தால் அவற்றில் ஒரு சிலவற்றையே ஆய்வு செய்ய முடிந்துளது. அதுவும் சைவசித்தாந்தத்தின் மூலமாகிய பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையினை பதி இயல், பசு இயல், பாச இயல் எனும் மூன்று இயல்களில் நாவலர் பெருமான்

தந்துள்ள வினாவிடைகளில் முக்கியமானவைக்குரிய மூலங்கள் சைவசித்தாந்த சாத்திரங்களில் இருந்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய பாடல்களைத்தந்து அப்பாடல்களின் உட்கிடை வினாவிடையாக நாவலர் பெருமானின் இரண்டாம் சைவ வினாவிடையில் இடம் பெற்றிருப்பதனைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கை அறியமுடிகிறது. அத்துடன் மாணவர்களும் மற்றவர்களும் சைவசித்தாந்தத்தை இலகுவாகப் புரிந்து கொண்டு சைவ வாழ்வு வாழ்வதற்குச் சைவ வினாவிடையைப் படிக்க வேண்டும் என்பது உய்த்துணரவைக்கப்பட்டுள்ளது.

உசாத்துணை நூல்கள்:

1. மெய்கண்ட தேவர். 13ஆம் நூற்றாண்டு
   **சிவஞானபோதம்**
   சைவசித்தாந்தப் பெருமன்றப்பதிப்பு. 1994.

2. அருணந்தி சிவாசாரியார். 13ஆம் நூற்றாண்டு
   வைத்தியநாதன். கு.
   **சிவஞானசித்தியார் தெளிவுரை**
   திருவாவடுதுறை ஆதீனம். 1999.

3. உமாபதி சிவாசாரியார். 13ஆம் நூற்றாண்டு
   **சிவப்பிரகாசம்**
   சைவசித்தாந்தப் பெருமன்றப்பதிப்பு. 1994.

4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   **சைவவினாவிடை இரண்டாம் புத்தகம்**
   சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம். வெளியீடு 2005.

## பிள்ளையார் சுழி

எதையும் எழுதத்தொடங்குவதற்கு முன்பு பிள்ளையார்சுழி இட்டு எழுதும் வழக்கமும், எக் கருமத்தைச் செய்யத் தொடங்கும் முன்பும் பிள்ளையார் வழிபாடு செய்து தொடங்கும் வழக்கமும் தொன்று தொட்டு உள்ளன. “கணபதி பூசை கைமேற் பலன்” என்பது முது மொழி. சர்வவல்லவரான சிவபெருமானிடம் இருந்து முதன்முதல் எழுந்த ஒலி “ஓம்” என்பதே. இந்த ஒலியின் வரிவடிவம் விநாயகரின் திருவுருவமாகும். வேதம் பிரணவத்தை முதலாகக் கொண்டுள்ளது. பிரணவம் நாதம், விந்து, இகரம், உகரம், மகரம் ஆகிய ஐந்து உறுப்புகளையும் தன்ககத்தே அடக்கியுள்ளது. நாதம் தண்டவடிவம்; விந்து வட்டவடிவம். இவ்விரு உறுப்புக்களும் சேர்ந்த வடிவம் பிள்ளையார் சுழி. நாதவிந்துக்களின் வடிவமே பொது வழக்கில் நாம் இடும் “உ” குறி.

சித்தாந்தரத்தினம் பத்மினி ராஜேந்திரா

உ
சிவமயம்

# சப்த விடங்கர்

பண்டிதை மரகதா சிவலிங்கம்.

இந்திரன் தேவலோகத்தை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் வலன் என்ற அசுரன் அவனோடு போர்புரிந்து தேவலோகத்தைக் கைப்பற்றி இந்திரனைப் புறமுதுகிட்டு ஓடச்செய்தான். இதனால் வருத்தமுற்ற இந்திரன் தேவகுருவாகிய வியாழபகவானிடம் ஆலோசனை கேட்டபொழுது, "பூலோகத்தில் முசுகுந்தன் (முசு - குரங்கு) என்ற வல்லமை பொருந்திய அரசன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வருகின்றான். அவன் முற்பிறப்பில் குரங்காயிருந்து வில்வமரதளிரைப் பிடுங்கிச் சிந்திய பொழுது கீழேயிருந்த சிவலிங்கத் திருமேனிமேல் அவை அர்ச்சனையாக விழுந்த புண்ணியத்தால் தற்போது தவவலிமை பொருந்திய சோழச் சக்கரவர்த்தியாக விளங்குகின்றான். நீ அவனின் துணைகொண்டு அசுரனுடன் போர் புரிந்தால் வெற்றியடைவாய்" என்று கூறினார்.

இந்திரனும் முசுகுந்தச் சக்கரவர்த்தியின் துணையுடன் வலன் என்ற அசுரனைப் புறமுதுகிட்டோடச் செய்தான். முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரலோகத்தில் சிறிது காலம் இருந்துவிட்டு திருவாரூர் திரும்ப இந்திரனிடம் விடை கேட்டான். சோழச் சக்கரவர்த்தி செய்த உதவிக்குக் மைம்மாறாக அவர் கேட்கும் பொருளைத் தருவதாக இந்திரன் கூறினான். இந்திரன் திருமாலிடம் பெற்று, மார்பில் அணிந்து கொண்டிருக்கும் தியாகராஜ மூர்த்தியின் அழகில் மயங்கிய முசுகுந்தன் அதனைத் தனக்குத் தரும்படி கேட்டான்.

தியாகராஜ மூர்த்தம் திருமாலுக்கு எவ்வாறு கிடைத்தது என்பதைச் சிறிது நோக்குவோம். திருமால் தனக்குப் பிள்ளையில்லாத குறையைப் போக்கச் சிவனை வேண்டி நெடுந்தவம் புரிந்தார். தவத்தினால் மகிழ்ந்த உமாமகேஸ்வரன் "எல்லா உயிர்களையும் ஆளும் திறமை மிக்க அழகும், ஆற்றலுமுடைய புதல்வன் உனக்குக் கிடைப்பான்" என வரங்கொடுத்தார். சிவபெருமானை மட்டும் வழிபட்டதையறிந்த உமாதேவியார் கோபங்கொண்டு "அழகான ஆண்பிள்ளை பிறந்தாலும் யாருடைய அருளால் பிறந்தானோ அவராலேயே இறப்பான்" என சாபமிட்டார்.

திருமால் இதனால் வருந்தி உமையோடு கூடிய சோமாஸ்கந்த மூர்த்தத்தை வழிபட்டு வரலானார். இம்மூர்த்தம் சிவன், அம்மன், முருகன் மூவரும் சேர்ந்த மூர்த்தமாகும். இதனால் மகிழ்ந்த உமாதேவியார் "உன் மகன் சிவனுடைய நெற்றிக்கண்ணால் எரிந்து சாம்பலானாலும் அருபமாக விளங்குவான்" என சாபவிமோசனம் கொடுத்தார்.

அக்குழந்தையே மன்மதன் ஆவார். திருமால் தியாகராஜராகிய சோமஸ்கந்த மூர்த்தத்தைத் தனது மார்பில் அணிந்து வழிபட்டு வரலானார். இந்திரன் தனக்குப் பிள்ளைப் பாக்கியம் இன்றி தான் வருந்துவதாகத் திருமாலிடம் முறையிட்ட பொழுது

"எனக்கு மன்மதனைப் பிள்ளையாகத் தந்த இந்தத் தியாகேசரை உனக்குத் தருகின்றேன். நீ உள்ளன்போடு அவரை வழிபட்டு வா" எனக் கூறி தான் அணிந்திருந்த தியாகராஜரை இந்திரனிடம் கொடுத்தார். அவனும் அவரை மார்பில் அணிந்து அன்போடு பூஜித்து ஜயந்தன் என்ற மகனைப் பெற்றான். அந்தத் தியாகராஜரைத்தான் முசுகுந்தச் சக்கரவர்த்தி தனக்குத் தரும்படி கேட்டார்.

இந்திரனுக்கு அதனைக் கொடுக்க விருப்பமில்லாதபடியால் தியாகேசரைப் போன்ற ஆறு உருவங்களைச் செய்து அவற்றுள் எது வெண்டுமோ அதனை எடுத்துக்கொள் என்று கூற முசுகுந்தன் உண்மையான தியாகராஜமூர்த்தியை எடுத்தான். திகைப்படைந்த இந்திரன் ஏழு மூர்த்தங்களையும் முசுகுந்தனுக்கு கொடுத்து விடையளித்தான்.

அவற்றைப் பெற்றுக்கொண்டு மிகுந்த மகிழ்வோடு வந்த சோழ அரசன், மூலவரான தியாகராஜரைத் திருவாரூரில் ஸ்தாபித்தான். பிறக்க முத்தி தரும் தலமாகிய திருவாரூரில் இவருக்கு வீதிவிடங்கர் என்று பெயர். (விடங்கர் என்றால் உளியால் செதுக்கப்படாதவர்) வீதிவிடங்கரின் நடனம் **அஜபாநடனம்** எனப்படும். மகாவிஷ்ணுவின் இருதயத்தாமரையிலே சிவன் நடனமாடிக்கொண்டு இருக்கிறார். மகாவிஷ்ணு சுவாசிக்கும்பொழுது அவரது மார்பு மேலுங்கீழுமாக ஏறி இறங்கிவரும் அசைவு ஒரு நடனமாக அமைகிறது. அதுவே அஜபா நடனம் எனப்படுகிறது.

முசுகந்தன் இரண்டாவது, தியாகராஜ மூர்த்தியைத் திருநள்ளாறு என்னும் சிவஸ்தலத்தில் பிரதிட்டை செய்தான். பாடல் பெற்ற தலமிது. அத்தோடு சனிபகவான் வணங்கி அருள் பெற்ற தலமுமாகும். இங்குள்ள தியாகராஜர் நகவிடங்கர் என்று அழைக்கப்படுகிறார். இவரது நடனம் **உன்மத்த நடன**மாகும். பித்துப்பிடித்தவன் போல் முன்னம் பின்னும் மேலும் கீழும் குப்புறக் கவிழ்ந்தும் தலையைச் சுற்றி ஆடுவதனால் உன்மத்த நடனம் எனப்பட்டது.

மூன்றாவதான, தியாகராஜ மூர்த்தியைத் திருநாகைக் காரோகணத்தில் ஸ்தாபித்தான். இங்குள்ள தியாகராஜர் சுந்தர விடங்கர் என்று அழைக்கப்படுகின்றார். இவரது நடனம் **தரங்க** நடனமாகும். தரங்கம் என்றால் கடல். கடல்அலை மேலெழுந்து கீழிறங்கி வருவது போல் மேலுங் கீழுமெழுந்து ஆடுவதனால் தரங்க நடனம் எனப்பட்டது.

நான்காவது, தியாகராஜரை திருக்காறாயில் என்ற ஸ்தலத்தில் ஸ்தாபித்தான். இங்கு இவர் ஆதி விடங்கர் என அழைக்கப்பட்டார். இவரது நடனம் **குக்குட** நடனமாகும். (குக்குடம் - கோழி) கோழி அசைந்து தலையை மேலும் கீழும் ஆட்டிச் செல்வது போல் இந்த நடனம் விளங்குவதால் குக்குட நடனம் எனப் பெயர் பெற்றது.

ஐந்தாவது, தியாகராஜரை திருக்கோளிலி என்ற பாடல் பெற்ற ஆலயத்தில் பிரதிட்டை செய்தான். இங்கு இவர் அவனி விடங்கர் என அழைக்கப்பட்டார். இவரது நடனம் **பிருங்க** நடனம் (பிருங்கம் - வண்டு) வண்டானது மலரின்மேல் குடைந்து குடைந்து சுற்றி வருவது போல் ஆடுவது பிருங்க நடனமாகும்.

ஆறாவது, தியாகராஜரை திருவாய்மூரில் ஸ்தாபித்தான். இங்கு இவர் நீல விடங்கர் என அழைக்கப்பட்டார். திருமறைக்காட்டிற்கு வந்த அப்பரடிகள் "திருவாய்மூருக்கு வா" என அழைத்த பெருமையுடைய ஸ்தலம். இவரது நடனம் **கமல** நடனம் (கமலம் - தாமரை) நீரின் மேல் பூத்திருக்கும் தாமரைப்பூ நீரோட்ட அசைவிற்கேற்ப அசைவது போல் விளங்குவதால் கமல நடனம் எனப் பெயர் பெற்றது.

ஏழாவது, தியாகராஜரைத் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்தில் பிரதிட்டை செய்தான். இங்கு இவர் புவனி விடங்கர் என அழைக்கப்பட்டார். மூடிக்கிடந்த திருக்கதவை அப்பரடிகளும் ஆளுடைய பிள்ளையாரும் திறக்கவும் மூடவும் பாடிய பெருமை பொருந்திய ஆலயம் இதுவாகும். இவரது நடனம் **ஹம்ஸபாத** நடனமாகும். (ஹம்சம் - அன்னம்) அன்னத்தைப் போன்று மெல்ல அடி எடுத்து நடந்து வந்து ஆடுவது ஹம்ஸபாத நடனமாகும்.

இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட ஏழு ஸ்தலங்களும் "சப்தவிடங்கத் தலங்கள்" எனப் பெயர் பெற்றன. திருவாரூரில் புற்றிடங்கொண்டாருக்கு வலப்பக்கத்தில் தியாகராஜர் சந்நிதி உள்ளது. முசுகுந்த சக்கரவர்த்தி மாசி மாத கிருஷ்ணபட்ச சதுர்த்தியும் அத்த நட்சத்திரமும் கூடிய ஒரு நல்ல நாளில்தான் தியாகராஜரைத் திருவாரூரில் ஸ்தாபித்தான். அன்று முதல் பங்குனி உத்தரநாள் வரையான 27 நாட்கள் பெருவிழா நடைபெற்று வருகிறது. இப்பெருவிழா இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாசி மாத அத்த நட்சத்திரத்தில் கொடியேறி பங்குனி உத்தர நாளன்று தீர்த்தம் நடைபெறும். வீதி விடங்கராகிய மரகத சிவலிங்க மூர்த்திக்குத்தான் காலை மாலை அபிஷேகம் நடைபெறும். தியாகராஜரின் முகம் மட்டுமே தெரியும். மார்கழித் திருவாதிரையன்று இவரது இடப்பாதத்தையும், பங்குனி உத்தரத்தன்று வலப்பாதத்தையும் பக்தர்கள் தரிசிக்க முடியும். பிற அங்கங்கள். மூடி வைக்கப்பட்டிருக்கும்.

சப்த விடங்கத் தலங்கள் எவையென போற்றித் துதித்த ஒரு தொகைச் செய்யுள்,

**"சீரார் திருவாரூர் தென்னாகை நாளாறு**
**காரார் மறைக்காடு காறாயில் - பேரான**
**ஒத்ததிரு வாய்மூர் உகந்த திருக்கோளிலி**
**சத்தவி டங்கத் தலம்."**

4ஆம் பக்க தொடர்ச்சி...

பேசுகின்றது. இவ்வுயர்வானது, நீண்டதுமான வாழ்வின் நோக்கம் மேலை நாட்டு மெய்யியற் சிந்தனைகளில் இல்லை. இகபர வாழ்வு என்னும் இறைகளோடு இசைந்த இன்பவாழ்வு வாழ்தலைச் சித்தாந்தம் பேசும். ஆதலின் இப் பரம்பரைச் சொத்தாகிய வேத ஆகம சைவசித்தாந்த தத்துவ ஞானம் யாவராலும் வேண்டப்படுவதால், இது பொன்போற் பேணப்பட்டுக் கற்றுக் காத்துப் பின்பற்றப்படவேண்டும்.

உ
சிவமயம்

# இடர் தீர வழி என்ன

திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம்
திருமதி. அழகேஸ்வரி தியாகராஜா

வயிற்றுவலி வந்து துடிக்கிறவர்களைக் கண்டிருக்கிறீர்களா? வீதியெங்கும் கேட்கும்படி அலறி அழும்வண்ணம் அந்த வலி அவர்களைத் துன்புறுத்தும். வெறுந் தலைவலி வந்தாற்கூட "அம்மா! அம்மா!" என்று எத்தனை தடவை சொல்லிவிடுகிறோம்! நோய் வந்தவர்கள் முனகுவார்கள்; அந்த நோயின் கடுமை அதிகம் ஆகஆக முனகலோடு நிற்கமாட்டார்கள்; வாய்விட்டு அரற்றுவார்கள்; புலம்புவார்கள்; அலறுவார்கள்; இது மனிதர்களுக்கு இயல்புதானே.

குழந்தை தன் தாயைக் காணாவிட்டால் அழும். அங்கும் இங்கும் பார்த்து தாயைத் தேடி அழும்; நேரம் அதிகம் ஆகஆக யார் என்ன சமாதானம் சொல்லியும் கேளாமல் கதறி அரற்றும்.

மனிதர்களாகிய நாம் மேற்கூறிய இருவகை நிலைகளிலும் இருக்கிறோம். நோய்களுக்குள் பெரிய நோயாகிய **பிறவிப் பிணியினால்** நலிவு பெறுகிறோம். என்றும் எவ்விடத்தும் நமக்குத் தாயாக இருந்து அருள்புரியும் இறைவனைக் காணமுடியாமல் இருக்கிறோம். ஆனால் நாம் அரற்றுவதில்லை; அழுவதில்லை; முனகுவதுங்கூடக் கிடையாது.

நமக்கு நம்முடைய நோயினால் உண்டாகும் துன்பம் இன்னும் உறைக்கவில்லை. அதனால், "பிறவி வேதனையைத்" தாங்க முடியவில்லையே! என்று அழுவதற்குத் தெரியவில்லை. கை, கால் குறையோ, உடம்பில் நோயோ உடைய பிச்சைக்காரன் தனக்குள்ள அந்த நோயையே தனக்கு ஜீவனத்துக்குரிய கருவியாகக் கொண்டு, அதைக் காட்டிப் பிச்சை வாங்குகின்றான். அதைப்போலவே இப் பிறவி நோயினிடையே நாமும் வாழ்ந்து வருகிறோம். அழாமல் - புலம்பாமல் வாழ்கிறோம். இந்த வேதனையை யார் தீர்ப்பார்கள்?

'இறைவன் நம்முடைய தாய் போன்றவன்' என்ற உணர்ச்சியே எமக்கில்லை. அதனால் அவனைப் புரிந்து வாழ்வதனால் என்ன என்ன இன்பங்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன என்ற எண்ணமும் எமக்கு உண்டாவதில்லையே!

இந்த இரு வகையினாலும் நமக்குத் துன்பங்கள் பெருகுகின்றன. பிறந்து பிறந்து செத்துச் செத்து இடர்களிலே மூழ்கி வருந்துகிறோம். அந்த இடர் தீரவேண்டுமானால் நாம் பெற்றுள்ள தீரா நோயின் வேதனை எமக்கு உறைக்க வேண்டும். அந்த உறைப்பினால் நாம் "தாயைக் கைவிட்ட குழந்தைகளாக ஆகிவிட்டோமே என்ற துயரம் மேலிட" எமது துயர் துடைக்க யாரும் இல்லையா? என்று அரற்ற வேண்டும். அப்போதுதான் எமது நோய் தீரும்வழி எமக்குப் புலப்படும்; அந்நேரம் எமது அலறல் சத்தம் கேட்டு இறைவன் நம்மை அணைக்க ஓடிவருவான்.

மேற்படி உண்மையைத் தம்முடைய நெஞ்சுக்குக் கூறுபவரைப் போல **திருநாவுக்கரசு நாயனார் நமக்கு அறிவுறுத்துகிறார்.** இவ்வாறு நெஞ்சைப் பார்த்து, "**நெஞ்சமே!** உனக்கு உண்டாகியிருக்கும் இடர்களெல்லாம் தீரவேண்டுமானால் இங்கே வா; ஒன்று சொல்கிறேன் கேள்; நீ அலறவேண்டும், நமக்கெல்லாம் தாயாகிய இறைவனை நினைந்து அவனைக் கூவி அழைக்க வேண்டும்" என்று அவர் சொல்கிறார்.

**"இடர் கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே! நீவா!**
**..........................................அலறாநில்லே."**

என்று சொல்லுகிறார்.

எம்பெருமானை நினைந்து அலறக்கூட நமக்குத் தெரியாது. நம்முடைய வேதனைகளைச் சொல்லத் தெரியும்; அவற்றையும் முழுமையாகச் சொல்லத் தெரியாது. யாரிடம் முறையிட்டுக்கொள்ள எண்ணுகிறோமோ, அந்த இறைவனை எப்படி அழைத்து அவறுவது? என்பது நமக்குத் தெரியாது. இதை அப்பர் சுவாமிகள் சொல்லித் தருகிறார்.

"நெஞ்சே, நீவா" என்று தொடங்கினவர், இறைவனைப் பற்றிச் சொல்கிறார். "அதோ பார் இறைவன். அவனுடைய திருமுடியிலே உள்ள சடை தெரிகிறதா? செஞ்சடையாகிய அது ஒளிவிடுகிறது. அதில், நிலவும் இருப்பதால் ஒளி சேர்ந்த சடையாக இருக்கிறது. ஒளியென்ற மாத்திரத்தில் சூரியனைத்தானே நீ நினைக்கிறாய்? சூரியனிடம் ஒளி இருப்பது போலவே வெப்பமும் இருக்கிறது. அப்படி இந்தச் சடை சிவப்பாகத் தழல் போல ஒளிவிடுவதால் இதிலும் வெப்பம் இருக்குமென்று அஞ்சாதே. இது தன்னிடத்திலே தண்மையையுடைய கங்கையைத் தரித்த சடை. இறைவனுடைய புனிதத் தன்மையினால் புனிதமான கங்கை அது. உலகத்தில் மலப்பிணிப்பினால் மாசு ஏறிய உனக்கு இந்தப் புனிதன் அருள் கிடைத்தால் அந்த மாசெல்லாம் போய் விடும். ஆகையால் அந்தப் பெருமான் பெயரைச் சொல்லி அழைத்து அலறுவாயாக! நிறைந்த ஒளி சேர்ந்ததும் கங்கையை உடையதுமாகிய சடையையுடைய பெருமானே! என்று கூவிப் போற்றுவாயாக! என்கிறார் அப்பர்.

**"ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்"** (நெருங்கிய ஒளி சேர்ந்த, கங்கையை அணிந்த சடையை உடையவனே என்று கூறியும்) அப்பர் கூறுவது நோக்கத்தக்கது.

"இருள் நிறைந்த உலகில் உன் பார்வையில் ஒளி இல்லை. சூரியன் ஒளி தர நீ பார்க்கும் பார்வை புறப்பார்வை. காணும் காட்சியளவிலே ஒரு பொருளைத் தெரிந்துகொண்டதாக எண்ணி ஏமாறுகிறாய். புறத்தே ஒளி இருந்தும் அகத்தே இருள் படர்ந்தமையால் பொருள்களை உள்ளவாறு அறியாத மயக்கம் உன்பால் இருக்கிறது. அந்த இடர் கெடுமாறு நீ எண்ணினால் அகத்தேயுள்ள இருளைப் போக்கும் சுடரை நாடவேண்டும். இறைவன் சுடர்கின்ற ஒளிப்பிளம்பாக, அகத்தே விளங்கும் சோதியாக நிற்பவன். அவனைக் கூவியடைத்தால் அகவிருள் கெடும்; உள்முகப்பார்வையினால் பொருள்களின் உண்மையை உணரலாம்" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

மேலும், **சுடர்ஒளியாய் உள்விளங்கும் சோதி என்றும்,** (என்று கூறியும்) கூறுகிறார். "பொய்யான பொருள்களையெல்லாம் மெய்யான பொருள்களாக எண்ணி மயங்குகிறாய். இந்த இடர் கெடவேண்டுமானால் எந்தப் பெருமானைக் கண்ட மாத்திரத்திலே நிலையாமை புலப்படுமோ அவனிடத்தில் முறையிட்டுக்கொள்ள வேண்டும். சிவபெருமான் தன்னுடைய திருமேனியில் தூய வெண்ணீற்றை அணிந்திருக்கின்றான். அந்த நீறு உலகம் நிலையாதது என்பதைக் காட்டுகின்றது. 'நீறணிந்த திருத்தோளா' என்று அவனை அழைத்து அரற்ற வேண்டும்."

**தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்,** (என்று கூறியும்) என்றும் கூறுவதை நோக்குவோம்.

"நம்முடைய இடர்கெடும்படி புகல் புகவேண்டுமானால் எந்த இடருக்கும் அஞ்சாத ஒருவனிடம் புகவேண்டும். ஒருவனுக்குத் துன்பம் என்று ஒன்று வரும்போது உதவி செய்யும் ஒருவனை அவன் அடைகிறான். அவன்; பின்னும் பெரியதுன்பம் ஒன்று வரும்போது வேறு ஒருவனை அடைபவனாக இருந்தால், அது அவனுக்குப்பயன் இல்லை. அமரரிடம் புகல் புகுவோம் என்றால் அவர்களும் அஞ்சி நடுங்கும்படி இடர் வந்த காலத்தில் அவர்கள் ஒருவனிடம் புகல் புகுந்தார்கள். அமுதத்தின் பொருட்டுத் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால நஞ்சு எழுந்தது. அதற்கு அஞ்சி அரற்றினார்கள். சிவபெருமான் அந்தக் கடல் விஷத்தை எடுத்து நுகர்ந்தான். அவ்விஷத்தினுடைய காற்றுப்பட்டாலே பலர் இறந்துபோவார்கள். அத்தகைய நஞ்சை இறைவன், அமரர்களைக் காக்கவேண்டும் என்ற கருணையால் எடுத்து நுகர்ந்தான். அதனைத் தன் திருக்கழுத்திலே தங்கும்படி வைத்தான். அவனுடைய கண்டத்தில் இன்னும் அந்த நஞ்சு இருக்கிறது. அதனால் இறைவன் இருண்டகண்டனாக, நீலமணி மிடற்றுப் பெருமானாகக் காட்சியளிக்கிறான். ஆற்றலால் பெரியவர்களுக்கு வந்த இடரையே நீக்கும் பெருமான் அவன்; அவனைச் சரணடைந்தால் நின் இடர் தீரும் என்று எடுத்துச் சொல்லவா வேண்டும்? "

**கடல் விடமது உண்டு இருண்ட கண்டா என்றும்** (பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டு கருநிறம் பெற்ற திருக்கழுத்தை உடையவனே என்று கூறியும்) அவர் கூறுகின்றார்.

"அவன் தன் கையில் மான்கன்றை ஏந்தியிருக்கின்றான். மான் எப்போதும் துள்ளிக் குதிப்பது; எதைக் கண்டாலும் மருள்வது. அதைக் கையில் தாங்கி அதன் ஓட்டத்தையும் மருட்சியையும் மாற்றித் தன் திருக்கரத்திலே நிலையாக இருக்கும்படி செய்திருக்கின்றான். நெஞ்சமே! நீயும் எப்போதும் ஓரிடத்தில் நில்லாமல் உழன்று சுழன்று அதனால் இடர்ப்படுகின்றாய். யார் யாரையோ கண்டு மருளுகிறாய். இந்த அலைச்சலையும் மருட்சியையும் அவன் போக்கிவிடுவான். அவனை நினைந்து நீ முறையிடு."

**கலைமான் மறிஏந்து கையா என்றும்** (ஆண்மான் கன்றை ஏந்தியிருக்கும் திருக்கரத்தை உடையவனே என்று சொல்லியும்) கூறியிருக்கிறார்.

"தன்னை யார்யார் அழைக்கிறார்களோ அவர்களிடத்தில் போய் அருள்புரிய ஆயத்தமாக இருக்கிறான் இறைவன். அவன் தர்மத்தையே இடபமாக்கி அதன்மேல் ஏறி வருபவன். நினைத்த இடங்களுக்குப் போகத்தானே வாகனம் வேண்டும். அன்பர்கள் அலறி அழைக்கின்ற இடங்களுக்குப் போகும் பொருட்டே இறைவன் இடபத்தை வாகனமாகக் கொண்டிருக்கின்றான்."

"எத்தனையோ விதமான இன்ப நுகர்ச்சிகளை இவ்வுலகிலே நீ பெற்றிருப்பாய். ஆனால் அந்த இன்பங்கள்யாவும் இறுதியில் மரணத்திலே கொண்டுபோய் விடுகின்ற சிற்றின்பங்களே; இவை கொல்லும் நஞ்சைப் போன்றவை. இறைவனோ அமுதம் போன்றவன்; தெவிட்டாது இனிக்கும் அமுதம் அவன்; மரணமில்லாப் பெருவாழ்வை நல்கும் அமுதம்; அவனைப் போல வேறுயாரும் இல்லை. அவன்தான் எல்லாருக்கும் ஆதி ஆதலின் அவனை நினைந்து புலம்பு."

**அடல் விடையாய் ஆரமுதே ஆதீ என்றும்** (ஆற்றலையுடைய இடபவாகனத்தையுடையவனே தெவிட்டாத அமுதம் போன்றவனே. எப்பொருளுக்கும் மூலகாரணமான முதற் பொருளே என்று கூறியும்.) என்றும் இதுபற்றி விளக்கியுள்ளளார்.

"இப்படி இருக்கும் பெருமான் தன்னை உலகில் உள்ளவர் மறவாமல் இருக்கும்படி அவ்வப்போது சில இடங்களில் அருள் விளையாடல்களை நடத்திக்கொண்டிருக்கிறான். அவற்றை மக்கள் நினைத்து வழிபடும் பொருட்டுத் திருக்கோயில்களை அன்பர்கள் நிறுவ, அவற்றில் திவ்யமங்கள மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கின்றான். திருவாரூரில் தியாகேசனாகக் கோயில் கொண்டிருக்கின்றான். ஆரூரா என்று சொல்லிச் சொல்லி நீ அலறிக்கொண்டிரு. உன் இடர்கள் தீர்ந்துவிடும்.

**ஆரூரா என்றென்றே அலறா நில்லே.** (திருவாரூரில் எழுந்தருளியிருப்பவனே என்று சொல்லிச் சொல்லி அலறி நிற்பாயாக) என்றுபாடியிருப்பதே இதுபற்றியாகும்.

"கங்காதரா, சடாதரா, சோதி, நீறுபூசிய நின்மலா, நீலகண்டா, மிருகபாணி, இடபவாகனா, அமுதமே, ஆதியே, ஆரூரா என்று இடைவிடாது புலம்பினால் இடர்கெடும்" என்று உபதேசிக்கிறார் வாகீசர்.

இச்செய்திகளை அப்பர் பின்வரும் திருத்தாண்டகத்தில் சிறப்பாகத் தந்திருக்கிறார்.

**"இடர்கெடுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**ஈண்டொளிசேர் கங்கைச் சடையாய் என்றும்**
**சுடர்ஒளியாய் உள்விளங்கு சோதீ என்றும்**
**தூநீறு சேர்ந்திலங்கு தோளா என்றும்**
**கடல்விடமது உண்டுஇருண்ட கண்டா என்றும்**
**கலைமான் மறிஏந்து கையா என்றும்**
**அடல்விடையாய் ஆரமுதே ஆதீ என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே."**

உ
சிவமயம்

# சிவராத்திரி இன்றைய நிலைமை

சைவப்புலவர் திருமதி. இந்திராணி பொன்னுத்துரை

எமக்குச் சகல நன்மைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்ற இறைவனை வழிபாடு செய்வதற்கு உகந்த சாதனங்களில் முக்கியமாக விரதங்கள் விளங்குகின்றன. இவ் விரதங்களில் முதன்மையானது சிவராத்திரி விரதமாகும். நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி ஆகிய சிவராத்திரிகளில் பூசைசெய்து வழிபட்ட பலனை மகா சிவராத்திரி பூசையும், விரதமும் அளிக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் வருவது மகாசிவராத்திரியாகும். இந்த சதுர்த்தசி திதியின் நள்ளிரவில் சிவபெருமான் இலிங்கோற்பவ வடிவில் தோன்றி பிரமவிட்டுனுக்களுக்கு அநுக்கிரகம் செய்தார் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். ஆகவே தான் இந்த மகாசிவராத்திரி விசேட வழிபாட்டுக்குரிய இரவாகக் கருதப்படுகிறது. சிவராத்திரி புராணம், கந்தபுராணம், இலிங்க புராணம், சிவ மகா புராணம் போன்ற புராணங்கள் இதன் மகிமையை எடுத்துரைக்கின்றன.

சிவராத்திரி விரதம் தொடர்பான பல புராணக்கதைகள் நிலவி வருகின்ற போதிலும் அயன் அரி, அடி முடி தேடிய வரலாறுடன் தொடர்பான கதை முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருகாலத்தில் படைத்தற் கடவுளான பிரமனும், காத்தற் கடவுளான திருமாலும் தாம்தாம் பெரியவர் என்று கூறிக்கொண்டு போரிட்டனர். அவர்களது உள்ளம் அறியாமையில் மூழ்கிக்கிடந்தது. அவ்வேளை சகல உலகமும் இருண்டன. சிவபெருமான் சோதிப்பிழம்பாகக் காட்சியளித்து உலகை ஒளிமயமாக்கிய தினமே சிவராத்திரி தினமாகும். இதனைக் கச்சியப்ப சிவாசாரியார்,

“அரியும யனும் முன்தேடும் அவ்
அனற் கிரி அலன்
கிரி எனும் படி நின்ற தால்
அவ்வொளி கிளர்ந்தே
இரவதே சிவராத்திரி
யாயினது இறைவ
பரவி உய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும்.”

எனக் கந்தபுராணத்தில் குறிப்பிடுகின்றார்.

ஒரு காலத்தில் உமாதேவியார் சிவபெருமானின் கண்ணைக் கைகளால் பொத்தவும் உலகமனைத்தும் இருளடைந்தன. அக்காலமே சிவராத்திரி எனவும் கருதப்படுகின்றது. இதனை அப்பர் சுவாமிகள்,

"நலமலி மங்கைநங்கை விளையாடியோடி
நயனத் தலங்கள் கரமா
உலகினையேழுமுற்று மிருண்மூடமூட
விருளோட நெற்றி யொருகண்
அலர்தர வஞ்சிமற்றை நயனங்கைவிட்டு
மடவாளிறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதிபோல வலர்வித்தமுக்க
ணவனா நமக்கொர் சரணே." (4.14.8)

என்று தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்புமிகு விரதத்தை சைவசமயிகள் அனுட்டிப்பது ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும். சிவராத்திரி விரதம் அனுட்டிப்போர் முதல்நாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசம் இருத்தல் சிறந்தது. இரவு முழுவதும் விழித்திருந்து பஞ்சாக்கர செபம் செய்தும், திருமுறை பாடியும் நான்கு யாமப் பூசையிலும் கலந்து கொள்ளுவது நன்மை பயக்கும். இரவு முழுவதும் நித்திரை விழிக்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ காலம் வரை மட்டுமாவது விழித்திருந்து தரிசனமும் பூசையும் செய்வது பெரும் பயனளிக்கும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி சுவாமி தரிசனம் செய்து, அடியார்களுடன் பாரணை பண்ணுவது சிறப்பானதாகும். சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ பொழுதைக் கழிக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் நாம் சிவராத்திரி விரதத்தை நோக்குவோமானால் எப்படியாவது கண்விழித்தால் போதும் என்று வீணான பொழுது போக்குகளில் ஈடுபட்டு நேரத்தை அவமே கழிக்கின்றார்கள். கலைநிகழ்ச்சிகள், நாடகம், நடனம், சீட்டாடுதல், மது அருந்துதல் போன்ற பொழுது போக்குகளில் நேரத்தை வீணடிக்கின்றார்கள். இது குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளும் நிலையாகுமல்லவா? எனவே பொழுதைப் பூசை புனற்காரங்களிலும், தவம், ஜெபம், நாமஸ்மரணை, திருமுறை ஓதல் போன்ற செயல்களிலும் ஈடுபட்டு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது எமக்கு மிகுந்த பயனை அளிக்கும்.

எனவே முடிவாக இந்த உண்மையைக் கோயில் நிருவாகிகள், குருக்கள்மார், பக்தர்கள், சைவநிறுவனங்கள், தகவல் ஊடக பரிமாற்றங்களினூடாகப் பொதுமக்களுக்கு எடுத்தியம்பி அவர்களை நல்வழிப்படுத்திச் சைவசமயிகளாக வாழ வழிவகுக்கவேண்டியது தற்காலத்திற்கு அசியமும், அவசரமுமாகும் என்பது நிதர்சனமாகும்.



உ
சிவமயம்

# பக்தனிடம் சென்ற பரமன்

மருத்துவர் கைலாசம் சுப்ரமணியம், சென்னை-44.

பரம்பொருளை நாடிப் பக்தர்கள் செல்வது வழக்கம். ஆனால், பகவானே பக்தர்களைத் தேடிச்சென்ற வரலாறும் உள்ளது. அவைகளில் சிலவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

## சிதம்பரம்

சைவர்களுக்குக் கோயில் என்றால் அது சிதம்பரம் நடராஜர் கோயில்தான். அதுபோன்றே வைணவர்களுக்குக் கோயில் ஸ்ரீரங்கமாகும்.

சிதம்பரம் கோயிலில் பூஜை செய்பவர்கள் தீட்சிதர்கள். தில்லைவாழ் அந்தணர் வழியில் வந்தவர்கள். அம்மரபில் வந்தவர்களில் ஒருவர் உமாபதிசிவாசாரியார். சம்பு தீட்சிதருக்கும், கௌரி அம்மையாருக்கும் புதல்வராக அவதரித்தவர். தமது பதினான்காவது வயதில், ஆடல்வல்லானின் பூஜைக்குரிய அனைத்து மந்திரங்களையும் கற்று, ஸ்ரீ நடராஜருக்குப் பூஜை செய்துவந்தார்.

ஒரு தினம் பூஜை முடிந்து, பரிவாரங்களுடன் மங்கள வாத்தியம். தீவட்டியுடன் பல்லக்கில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் மறைஞானசம்பந்தன் என்ற மகான் இவரை ஆட்கொள்ள நினைத்தார். உமாபதிசிவத்தின் காதில் விழும்படி. "பட்ட கட்டையில் பகல் குருடு ஏகுதல் பாரீர்" என்று உரைத்தார். (பட்ட கட்டை - மரப் பல்லக்கு; பகல் குருடன் - பகலில் தீவட்டி) உமாபதிசிவமும், அவர்பால் ஈர்க்கப்பட்டு பல்லக்கிலிருந்து இறங்கி, அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவருடைய சிஷ்யரானார்.

இவருடைய செயலை ஏற்றுக்கொள்ளாத தில்லைவாழ் அந்தணர்கள் ஒன்றுகூடி, இவரைப் பூஜை செய்ய அனுமதிக்கவில்லை. ஆகையால், அவர் அருகிலுள்ள கொற்றவன்குடி (அண்ணாமலை நகர் ஆசிரியர் குடியிருப்பு) என்ற ஊரில் ஒரு மடம் அமைத்துத் தங்கி, அங்கிருந்தவாறே ஆடல்வல்லானை வழிபட்டு வந்தார்.

ஒருநாள் சிதம்பரம் சபாநாயகர் கோயிலில் பூஜை நேரத்தில் இறைவனைக் காணவில்லை. தீட்சிதர்கள் அனைவரும் பதறி, "இறைவா! எங்கே சென்றீர்? ஏன் சென்றீர்?" என்று கேட்டவாறு மனக்கவலையுற்றனர். அப்பொழுது அசரீரியாக, "யாம் கொற்றவன்குடி உமாபதிசிவத்தின் பூஜைப்பெட்டகத்தில் உள்ளோம்" என்று ஒலித்தது. அனைவரும் சகல மரியாதைகளுடன் சென்று, அவரை வணங்கித் தமது செயல்களுக்கு மன்னிக்குமாறு வேண்டினர். உமாபதிசிவமும் பூஜைப் பெட்டகத்துடன் ஆடலரசர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். இறைவனும் திருக்கோயிலுக்குத் திரும்பினார். உமாபதிசிவமும் தமது மடத்திற்குத் திரும்பி, தனது சீடர்களுடன் வாழ்ந்துவந்தார்.

ஒருமுறை சிதம்பரம் கோயில் திருவிழாவில் கொடியேற்றத்தன்று, ஏற்ற முடியாத கொடியை ஏற்ற உமாபதிசிவம் கொடிக்கவி பாட, கொடி தானாகவே கம்பத்தில் ஏறத்துவங்கியது.

பின்னர், உமாபதிசிவம் ஆடல்வல்லான் அனுப்பிய ஓலையின் உத்திரவின்படி, பெற்றான் சாம்பான் என்ற பக்தர் முத்தியடையும்படிச் செய்தார்.

சைவசித்தாந்த ஆசிரியர்கள் நால்வரில், இவர் ஒருவர். அவர்கள் புறச்சந்தான குரவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

1. மெய்கண்ட தேவர்;
2. அருணந்தி சிவாசாரியார்;
3. மறைஞான சம்பந்தர்;
4. உமாபதி சிவாசாரியர்.

உமாபதிசிவாசாரியர் இயற்றிய நூல்கள்: 1. சிவப்பிரகாசம்;
2. திருவருட்பயன் 3. வினா வெண்பா; 4. போற்றிப் ப∴றொடை;
5. கொடிக்கவி 6. நெஞ்சிவிடு தூது; 7. உண்மை நெறி விளக்கம்;
8. சங்கற்ப நிராகரணம்

என்ற எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் என்றழைக்கப்படுகிறது. அவர் இயற்றிய இதர நூல்கள்: கோயிற் புராணம்; திருமுறை கண்ட புராணம்; திருத்தொண்டர் புராணம்; திருப்திகக் கோவை; குஞ்சிதாங்கிரிஸ்தவம்; சதரத்ன சங்கிரகம்; நடராஜத்வன மந்திரஸ்தவம் முதலியனவாகும்.

## மதுரை

பாண்டிய நாட்டைக் குலசேகரபாண்டியன் என்ற மன்னர் ஆட்சிபுரிந்துகொண்டிருந்தான். அவர் காலத்திலிருந்த கபிலருடைய நண்பரான இடைக்காடர் என்ற புலவர் ஒருநாள் தாம் இயற்றிய நூலுடன் அரசரைக் காணச்சென்றார். அரசர் முன்பு தமது நூலைப் படித்தார். அதன் சுவையை மன்னர் அறிந்திருந்தும், பொறாமையால் மகிழ்ச்சி காட்டாமலும், ஒன்றும் கூறாமலும் இருந்தான். மனம் வருந்திய புலவர் கோயிலுக்குச் சென்று, அரசன் தன்னை அவமதித்ததைக் கூறி, "மன்னன் என்னை மட்டுமல்லாமல், சொற்பொருளாக உள்ள உன்னையும் அவமதித்தான்'' என்று முறையிட்டு நகரைவிட்டுச் சென்றார்.

அதைக்கேட்ட இறைவனும், தனது சிவலிங்க உருவத்தை மறைத்து, அம்மையுடன் நகருக்கு வெளியே சென்று ஒரு கோயிலை உண்டாக்கி, அதில் வீற்றிருந்தார். சங்கப் புலவர்களும் சிவபெருமான் நீங்கியதை அறிந்து, அக்கோயிலுக்குச் சென்று தங்கினர்.

மறுநாள் காலை இறைவனைக் காணாமல், கோயில் அர்ச்சகர்கள் அரசரிடம் செய்தியைக் கூறினர். இறைவன் புதிய கோயிலில் வீற்றிருப்பதையும், சங்கப் புலவர்கள் அங்கிருப்பதையும் கேள்வியுற்ற மன்னன், விரைந்து சென்று இறைவனை வணங்கிப் போற்றி,

பாதமலர் இணை போற்றி! பன்னிரண்டு கையானைப் பயந்தாய் போற்றி
வேதமுடி கடந்த பரஞானத்தில் ஆனந்த விளைவே போற்றி!
போதவடி வாய்நால்வர்க்கு அசைவுஇறந்து நிறைந்த பரம் பொருளே போற்றி!
மாதவள நீறுஅணிந்த மன்னா அங்கயற்கண்ணி மணாளா போற்றி!

என்று போற்றி, அவ்வாறு இடம் பெயர்ந்து வந்ததற்கு யான் செய்த பிழை யாது? என்று விண்ணப்பித்தான்.

அப்பொழுது இறைவனது அருளால் ஓர் அசரீரி, "சிவபதிகளில் எட்டு பதிகள் சிறந்தவை. அவற்றுள் ஒன்று இப்பதி. இப்பொழுது நாம் வந்து வீற்றிருக்கின்ற சிவலிங்கம் குபேரனால் வழிபட்டது. அது இன்றுமுதல் வட திருவாலவாய் என்று அழைக்கப்படுவதாக! நீ ஒரு பிழையும் செய்யவில்லை. ஆயினும், இடைக்காடரின் நூலை அவமதித்ததால் இங்கு வந்து வாழ்கின்றோம்" என்று கூறியது. (அக்கோயில் மதுரை - சிம்மக்கல் அருகில் ஆதி சொக்கநாதர் கோயில் என்ற பெயருடனுள்ளது.)

மன்னன் தன் பிழையைப் பொறுத்து அருளுமாறு ஏத்தி வணங்க, இறைவனும் மீண்டும் மதுரைக் கோயிலில் எழுந்தருளினார். புலவர் இடைக்காடரை பாண்டியன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, உரிய சிறப்புக்களையும் செய்து, அவ்ருடைய நூலை வாசிக்கச் செய்து கேட்டு மகிழ்ந்ததாகத் திருவிளையாடல் புராணம் - இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் மூலம் அறிகின்றோம்.

உ
சிவமயம்

# சைவமும், சைவநெறியும்

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு),M.A.

## சைவம்

சிவனை முழுமுதலாகக் கொண்டு வவழிபடும் சமயம், சைவம். சைவம் சிவசம்பந்தமானது; சைவம் சிவபரத்துவம் கூறுவது. சைவம் சிவானந்த மயமானது. சைவ நெறிநின்று கிடைக்கப் பெறுவது சிவனோடு இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தி; அது சாயுச்சியப் பேறான பேரானந்த முத்தி என்பர் திரு மந்திரத்தைத் தந்த திருமூல நாயனார்.

**“சைவம் சிவனுடன் சம்பந்தமாவது**
**சைவந் தனையறிந்தே சிவஞ்சாருதல்**
**சைவஞ் சிவந்தனைச் சாராமல் நீவுதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே”** (1512)

என்பது அவரது அருள்வாக்கு.

சிவம் என்பது அன்பு மயமானது. சைவம் அன்பை விதைப்பது. அன்பினில் விளைவது பக்தி. அன்பின் உயர் நிலை பக்தி. பக்தி தருவது முத்தி.

**“முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.”** (8.51.1)

என்று மணிவாசகப் பெருமான் தான் முத்தியடைய இறைவன் காட்டிய நெறி பக்தி நெறியே என்று உறுதிபடக் கூறுகிறார்.

**“பக்தியால் யானுனைப் பல காலும் பற்றியே மாதிருப் புகழ்பாடி**
**முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற் கருள்வாயே.”**

என்று அருணகிரிநாதர், மாணிக்கவாசகர் வாக்குக்கு உரம் சேர்க்கிறார். அன்பைப் பற்றிப் பேசவந்த பொய்யா மொழிப்புலவர்,

**“அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள்”** என்றும், **“அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு”** என்றும் கூறுகிறார். (71, 72)

அன்பு ஊற்றெடுத்துப்பாய வல்லது; அது தன்னலம் கருதாதது. சிவனும் அன்பே உருவானவன்; உயிர்கள் மீது பெருங்கருணை கொண்டவன்; நின்மலன்; சங்கரன். சலமும் இல்லாத நடுநிலையாளன். தன்னை நாடுபவர்களுக்கு அருள்மழை பொழிபவன்.

"நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்." (9)

எனத் திருவருட்பயன் கூற, அப்பர் பெருமான்,

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமிலராகினும் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே." (4.11.6)

எனத் தேவாரப் பாடலில் அதை மேலும் தெளியச் செய்கிறார். அன்புதான் இன்ப ஊற்று என்பது ஆன்றோர் வாக்கு. அந்த இன்பம் சிவ இன்ப அன்பினின் விளைந்த இன்பம். அந்த அன்பையே சிவமெனக் காட்டுகிறார் திருமூலர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே." (720)

அன்பு முதிர்ந்து பக்தியாகி அது கனியாகிப் பிரபக்தியாகச் சுவைதருகிறது. அப்பிரபக்தி **"என் செயலாவ தொன்றில்லை இனித் தெய்வமே உன் செயலென்று உணரப்"** பெறுகின்ற கையறு நிலை. அது பூரண சரணாகதி. எல்லாம் அவன் செயல் என்று இறைவனைத் தஞ்சமடைவது. **'அவனின்றி ஓர் அணுவும் அசையாது'** என்று உறுதியாக நம்பித் தன்னைச் சிவனிடம் ஒப்புவிக்கும் நிலை. திரௌபதி தனது இருகைகளையும் உயர்த்திக் கண்ணா நீயே எல்லாம் என்று தன்னை மறந்து, தன் சேலை களையப்படுவதையும் மறந்து கண்ணனை முற்றுமுழுதாக நம்பினாளே, அந்த நிலை கைவரப்படும் போது இறைவன் தானாக ஆட்கொண்டு அருள் பாலிப்பதைப் பிரபக்தி எடுத்துக் காட்டுகின்றது. அந்த நிலையினைச் 'செத்தாரைப் போல இரு' என்று கூறப்படும் நிலையாகச் சைவசமயம் புடம்போட்டுக் காட்டுகின்றது. அகங்கார மம காரமின்றி, தற்போதமின்றி, தன் முனைப்பின்றி நாம் இறைவனால் தாங்கப்படும் நிலையைக் குறித்து நிற்கின்றது. பற்றற்றானாகிய சிவனைப் பற்றிப்பிடிக்கும் தன்மையைக் காட்டுகின்றது. ஆசையெல்லாம் அறுந்து துன்பம் தொலைந்து எல்லாம் இன்பமயமான நிலையாக அமைகின்றது. ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் நிலைக்களன்.

"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே." (2615)

என்ற திருமந்திரவாக்கைச் சிரமேற் கொண்டால், இறையருள் நிச்சயம் கிடைக்கும்.

"புன்புலால் யாக்கைப் புரைபுரை கனியப்
பொன்னெடுங்கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசன்." (8.37.10)

மாணிக்கவாசகரின் கூற்றுப்படி

**"இரும்பு தருமனத் தேனை ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கிக்**
**கரும்பு தரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்."** (8.38.1)

என்றவாறான பெரும் பேறு நம் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் கிடைக்கும்.

## சைவநெறி

"நாம் இப்பிறவியெடுத்ததன் நோக்கம் இறைவனை மெய்யன்போடு வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற ஆறுமுகநாவலர் பெருமானின் கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முற்பட்டால் நாம் ஒவ்வொருவரும் சைவநெறிப்படி வாழ வேண்டும்.

"...... மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்தோங்குக
செய்ய வெண்திரு நீறு சிறக்கவே."

என்ற பெரியபுராணப் பாடல் சைவநெறி பற்றிப் பேசுகிறது. "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்றும் அப்புராணம் சைவத்தை வாழ்வியல் வழி முறையாகக் குறிப்பிடுகின்றது. 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்' என்று கந்தபுராண வாழ்த்துப்பா கூறுகின்றது. 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்கின்ற தாராளமனப் பான்மையைச் சைவநெறி என்றும், சைவத்துறையென்றும், சைவநீதி என்றும் ஆன்றோர் திருவாய் மலர்ந்தருளினர்.

அட்டாங்கயோகங்களில் முதல் இருபடிகளாகிய இயமம், நியமம் ஆகியன முறையே செய்ய வேண்டியவற்றை முறைப்படி செய்தல் ச்சைவநெறியின் பாற்படுவன. கொல்லாமை, கள்ளாமை, புறங்கூறாமை, வெஃகாமை, புலால்மறுத்தல், பிறன்மனை நயவாமை, நிலையாமை முதலியவற்றை இயமம் எனவும், அன்புடைமை, உண்மை பேசுதல், நன்மை செய்தல், தானதருமஞ் செய்தல் ஐங்குரவரை மதித்தல், ஒழுக்கமுடைமை போன்றவற்றை நியமம் என்றும் சைவநெறியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவ நாற்பாதங்களில் சைவநெறியனைத்தும் நிறைந்து விளங்குகின்றன.

சைவ சமயத்தவர்கள் பிறப்பினால் சைவ சமயிகளாயினும் சமய தீட்சை பெறாதவர்கள் உண்மைச் சமயத்தவர்களல்லர். நல்ல குரு மூலம் சமய தீட்சையும், உபதேசமும் பெற்றுச் சைவ வாழ்வு வாழ்பவர்களே சைவநெறியினர். இவர்கள் சந்தியாவந்தனம் செய்து அனுட்டானங்களை மேற்கொள்வர். சிவமந்திரமான நமசிவாய (தூல பஞ்சாட்சரம்) சிவாயநம (சூக்கும பஞ்சாட்சரம்) என்பவற்றை முறைப்படி ஓதியவண்ணமிருப்பர். விபூதி, உருத்திராக்கம் அணிந்திருப்பர். விரதங்களைச் சிறப்பாக மேற்கொள்வர். சிறந்த குருவின் மூலம் இவற்றை மேற்கொள்ளாதவர்களைக் குருடர்கள் இருவரும் குருட்டாட்டமாடிக் குழியில் விழும் நிலைக்குத் தள்ளப்படுவர் என்பார் திருமூலர்.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டமாடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே." (1680)

மேலான 'குருவருள் இன்றித்திரவருள் இல்லை' என்பது மெய்யுணர்ந்தோர் திருவாக்கு குருவின் பெருமையை

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே." (139)

எனத் திருமந்திரம் அருமையாகச் சொல்கிறது. குருமூலம் மும்மல இருளகன்று, திருவருளாகிய ஒளியேற்படும் தெளிந்த பக்குவமான இறையுணர்வு நிலையேற்படும். இத்தகையோர் சிவ பூசை செய்து, சிவனடியார்களைச் சிவனென மதிக்கும் நிலையைப் பெற்றுக் கொண்டு விடுவர்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே." (12)

என்று கூறும் சிவஞானபோதம் இக்கருத்தை நிலை நாட்டுகின்றது.

சைவநெறி நிற்போர் பின்வரும் பத்துச் செயல்களை மேற்கொள்பவர்களாக விளங்குவர்.

1) விபூதி, உருத்திராக்கம் அணிந்திருப்பர்.
2) குருவை அறிந்து அவர் உபதேசப்படி நடப்பர்.
3) சிவபெருமானைப் பற்றிய தோத்திரங்களைப் பண்ணோடு பாடுவர். உதாரணம்:- பஞ்சபுராணம்.
4) பஞ்சாட்சர மந்திரத்தை எண்ணி ஓதிக்கொண்டிருப்பர். (108, 1008தடவைகள்)
5) தம்மாலியன்ற வகையில் தானதருமஞ் செய்வர்.
6) சிவனின் திருவிளையாடல்கள் பற்றிக் கூறும் புராணக் கதைகளைப் படிப்பர் அல்லது கேட்பர்.
7) சிவாலயங்களைப் பராமரிப்பர். சமய உண்மைகளை எடுத்துரைப்பர்.
8) சிவனடியார்களுடன் சேர்ந்து உணவு உண்பர். (மாகேஸ்வர பூசை)
9) சிவ பூசை செய்வர்.
10) சிவனடியார்களின் அடியவராயிருப்பர்.

எனவே, சைவ சமயம் அன்பைப் போதித்துப் பக்தி, பிரபக்திக்கு இடமளித்து பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திக்குவழி காட்டும் சமயம்; சைவநெறி வாழ்வாங்கு வாழ்ந்து, அது காட்டும் சைவத்திறன்களைக் கைக்கொண்டு பேரின்பமான இறையடி நிழலை அடையும் நெறி என்பது மெய்யுணர்ந்தோரின் அனுபவ உண்மையாகும்.

உ
சிவமயம்

# முதலாவது மலேசிய ஆன்மிகப் பயணம்

திருவாவடுதுறை ஆதீன திருமுறை, சைவசித்தாந்த பயிற்சி மையத்தினர் (கொழும்பு, இணுவில்) திருவெம்பாவையுடன் கூடிய நாட்களைத் தெரிவு செய்து, மலேசிய ஆன்மிகப் பயணம் ஒன்றை மேற்கொண்டோம்.

பயிலுனர்கள் விரிவுரையாளர்கள் உட்பட, மொத்தம் 14 பேர்கள் திருவெம்பாவைக்கு முதல் நாளாகிய 13.12.2018 வியாழக்கிழமையன்று, இரவு 9.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டோம்.

எமது பயிற்சிமைய இயக்குனர் சித்தாந்தச்செம்மணி சைவப்புலவர் செ.நவநீதகுமார் M.A. அவர்கள் 13 ஆண்டுகளாக மலேசியா அருள்நெறித் திருக்கூட்டத்தில் திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணபடனம் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார். இந்த ஆன்மிக நிகழ்வாகிய புராணபடனத்தில் நாமும் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலுடன் அங்கு செல்ல ஆயத்தமானோம். இத்துடன் மலேசிய நாட்டிலுள்ள கோவில்களைத் தரிசிக்கும் அவாவும் எம்மைத்தூண்ட, மலேசிய நாட்டையும் பார்க்கலாமே என்ற விருப்புடன் புறப்பட்டோம்.



14.12.2018 இரவு 12.40 மணிக்கு கோலாலம்பூரை நோக்கி எமது விமானப் பயணத்தை ஆரம்பித்து, 3மணி 45நிமிடப் பயணத்தை முடித்து கோலாலம்பூர் நேரப்படி காலை 6.55க்கு விமானத்தை விட்டு இறங்கினோம். இலங்கை நேரத்துடன் 2மணி 30 நிமிடங்களைக் கூட்டி கோலாலம்பூர் நேரத்தைக் கணிக்க வேண்டும். அவ்வாறாயின், இலங்கை நேரம் 4.25க்கு அங்கு சேர்ந்துள்ளோம் என்பது நேரக் கணிப்பாகும்.

அருள்நெறித் திருக்கூட்டத்ினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட 2 வாகனங்கள் எம்மையும், எமது பிரயாணப் பொதிகளையும் ஏற்ற வசதியாக வந்து, விமான நிலையத்தில் காத்து நின்றன.

குடிவரவு குடியகல்வு திணைக்கள, சுங்கத்திணைக்கள சட்டநடைமுறைகளைப் பூர்த்தி செய்து, பொதிகளை பொருட்பட்டியிலிருந்து (Luggage Belt) மீளப்பெற்று, விமானநிலையத்தை விட்டு வெளியேறி காலை 9.30 மணியளவில் எமக்கு ஒதுக்கப்பட்ட தங்குமிடத்தை அடைந்தோம்.

விமான நிலையத்திலிருந்து நாம் தங்கும் இடம் வரும்வரை, வீதியின் இருபக்கமும் அடுக்கடுக்காக ஓலைகள் காற்றில் அசைந்தாட நின்ற மரங்களைப் பார்த்தபோது,

நம்மூர் தென்னந்தோப்புகளைப் பார்த்த காட்சி போலக் காணப்பட்டது. ஓலைகளின் வடிவத்தில் இருந்த வேறுபாடுகளை அவதானித்த போதுதான், அவை மலேசிய நாட்டு பாம் மரங்கள் (Palm Trees) எனத் தெரிந்து கொண்டோம். அந்நாட்டு எண்ணெய்த் தேவைகளை அம்மரங்களினூடாகவே பெற்றுக் கொள்வதாக அறிந்தோம். நிரையாக நாட்டப்பெற்ற தென்னை மரங்கள் போல பாம் மரங்கள் குளுகுளுப்பாகப் பச்சையாக அழகாகக் காட்சியளித்தன.

பிறிக்பீல்ட் (Brick Field) என்னுமிடத்திலுள்ள M. Joy என்ற (Hotel) ஹோட்டலில் எமக்குத் தங்குவதற்கென அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. விரிவுரையாளர்கள், பயிலுநர்கள் உட்பட 12 பேர் ஹோட்டலில் தங்கினோம். சிரேஷ்ட விரிவுரையாளரும், இயக்குனரும் அருள்நெறித் திருக்கூட்டத்தில் தங்கினர். எமது ஹோட்டலுக்கும் அருள்நெறித் திருக்கூட்டத்திற்கும் இடைத்தூரம் ஏறத்தாழ ஏழு கிலோமீட்டராகும்.



தினமும் மாலையில் 7.30 மணிக்கு அருள்நெறி திருக்கூட்டத்தில் புராணபடனம் ஆரம்பித்து இரவு 9.00 மணிக்கு நிறைவு பெறும். அதன் விளக்கவுரைகள் பற்றிக் கலந்துரையாடிய பின்னர், இரவு உணவையும் அங்கேயே முடித்துக்கொண்டு எமது தங்குமிடத்திற்கு நாம் திரும்புவோம்.

எமக்கென போக்குவரத்துக்கு வசதியாக ஒரு வான் வாகனத்தை ஒதுக்கி சாரதியுடன் தந்துதவி, எமது வசதிகளை அருள்நெறித் திருக்கூட்டமும், எமது இயக்குநரும் கவனித்துக் கொண்டனர். சனி ஞாயிறு தினங்களில் மட்டும் பிற்பகல் 3.00 மணியளவில் புராணபடனம் ஆரம்பித்து, இடைவேளையுடன் இரவு 7.00 மணிக்கு நிறுத்தப்படும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

முதலாம் நாளாகிய 14.12.2018 வெள்ளிக்கிழமை பகல் முழுநாளும் ஓய்வு எடுத்துக் கொண்டோம். நாம் தங்கிய (M.Joy Hotel) எம். ஜோய் ஹோட்டலுக்கு மிக அண்மையில் (Chat Masala) "சட் மசாலா" என்ற இந்தியப்பாணியில் அமைந்த சைவ உணவகத்தில், எமது இயக்குநரின் அறிவுறுத்தலின்படி, உணவு ஏற்பாடுகளைச் செய்து கொண்டோம்.

நாம் தங்கிய இடம், உணவருந்திய ஹோட்டல், சுற்றியுள்ள கடைத்தெருக்களைக் கொண்ட சூழலை, அந்தப் பகுதியை "லிட்டில் இந்தியா" (Little India) என்று அழைப்பர். இந்தியக் கடைகள் நிறைந்த இடம் அதுவாகும். அந்தச் சூழலில் நிற்கும்போது, இந்தியாவில் நிற்பது போன்ற உணர்வுதான் எமக்கு ஏற்பட்டது. பொட்டு வைத்தபடி தமிழில் கதைத்துக் கொண்டே செல்பவர்களை நிறையக் காணலாம்.

மலேசியாவிலுள்ள தமிழர்கள் பொட்டு வைத்தபடியே நடமாடுவகைக் காண மகிழ்வாயிருந்தது. இளம் சமுதாயம் கூட பொட்டுக் கலாசாரத்தைக் கைவிடாமல் கடைப்பிடித்தது மனதுக்கு இதமாக இருந்தது. (Hand Bag) கைப்பையை

இழுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஓடும் கள்ளர் இங்கும் உள்ளனர் என்ற எச்சரிக்கையும் போன அன்றே எமக்குக் கிடைத்தது. எங்களுக்கு இறையருளால் எந்த அசம்பாவிதமும் நிகழாது பயண அனுபவங்கள் இனிமையாகவே அமைந்தன.

மலேசிய நாட்டு நகரங்களின் கட்டமைப்பு, வீதிகளின் ஒழுங்கமைப்பு, வீதிஓரங்களில் நீண்டு செல்லும் பூமரங்கள், ஒழுங்காகக் கத்தரித்து விடப்பட்ட தாவர மர அழகமைப்பு, வீதிச் சுத்தம் எல்லாம் எம் மனத்திற்குக் கவர்ச்சியை அளித்தவண்ணமே இருந்தன. நாம் தங்கிய லிட்டில் இந்தியாப் பகுதியில் வீதி ஓரங்களில் வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தமை, நகரின் அழகுக்கு மேலும் வனப்பூட்டிக் கொண்டிருக்கும் காட்சியாகும்.

பயணத்தின் முதலாம் நாளாகிய வெள்ளியன்று (14.12.2018) காலை உணவையும், மதிய போசனத்தையும் அருகிலுள்ள சட்மசாலாவில் (Chat Masala) முடித்துக்கொண்டு பிற்பகல் 6.30 மணியளவில் அருள்நெறித் திருக்கூட்டத்திற்குப் புராணபடனத்தைக் கேட்டுப் பயன்பெறும் ஆவலுடன் சென்றோம்.



இச் சந்தர்ப்பத்தில் அருள்நெறித் திருக்கூட்டம் பற்றிய ஓர் அறிமுக விளக்கம் கூறாது என்னால் மேலே தொடர முடியவில்லை.

இந்த அருள்நெறி நிலையம் 17, ஜலான் செகோர், 3ஆவது மைல் ஜாலன் கெலாங்லமா, கோலாலம்பூரில் (17, Jalan Checor, 3rd Mile Jalan Kelang Lama, Kula Lumpur.) அமைந்துள்ளது. மலேசியத் திருநாட்டிலே வேதம், ஆகமம், புராணங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள் ஆகிய இவற்றைப் போற்றிப் பாதுகாக்கும் ஒரு அருள் பெட்டகமாக இந்நிலையம் மிளிர்கின்றது என்றுதான் கூறவேண்டும். குருபூசைகள், விழாக்கள், கருத்தரங்குகள், மாநாடுகள், நூல் வெளியீடுகள், சமூக சேவைகள் என பன்முகப்பட்டுச் செயலாற்றி "**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகெலாம்**" எனப் பணியாற்றி வருகின்ற அருள் நிலையம், 2005 ஆம் ஆண்டில் பொன்விழாவும், 2016ஆம் ஆண்டில் மணிவிழாவும் கொண்டாடிய நிகழ்வை அவர்களிடம் நான் பெற்றுக்கொண்ட "விழா மலர்கள்" மூலம் அறிந்து பெருமையும், அந்நிய நாட்டில் சைவமும் தமிழும் போற்றப்படுவது கண்டு வியப்பும் அடைகின்றேன்.

சைவசமயத்தின் புனிதத் தன்மையையும், மகிமையையும், பக்திப்பரவச நிலையையும் புலப்படுத்துவது 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறாகும். இத்தகைய நாயன்மார்களின் பக்தி நிலையும், தம்மை மறந்து சிவத்துடன் ஒன்றுபட்டு வாழ்ந்த வாழ்வுத் தத்துவத்தையும் இளம் தலைமுறையினரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டிய களங்களை இளஞ் சமுதாயத்தினருக்கு அமைத்துக் கொடுத்துப் பணியாற்றும் அவ்வருள்நெறி நிலையத்தின் சேவை நீண்ட காலம் நிலைக்க வேண்டும் என்பதும், அதற்கு இறையருள் என்றும் இருக்க வேண்டும் என்பதும் எமது வேண்டுதலாகும்.

இத்தகையதொரு அருள்நிலையத்தைத் தரிசிக்கவும், அங்கு நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்கவும், எமக்கு ஏற்பட்ட வாய்ப்பு இறைவன் திருவருளாலும், குருவருளாலும்தான் கிடைத்தது என்று கூறவேண்டும்.

**"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ."**

எனச் சிவஞானபோதம் 12ஆம் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க, எப்போதும் அடியார்களைத் தாங்கும் எம்பெருமானின் திருவடிகளை அடைய, மலவாசனையைக் கழுவி, பாசநீக்கம் பெற்று, சிவனடியார்களாகிய அன்பர்களோடு கூடியிருந்து, இறைவழிபாட்டில் ஈடுபட எமக்குக் கிடைத்த வாய்ப்பு என்றே நாம் எண்ணிக் கொண்டோம்.



திருவெம்பாவை 1ஆம் நாள் இரவு 7.30 மணிக்கு எமது இயக்கநர் திரு.செ.நவநீதகுமார் அவர்களது தலைமையில் திருவாதவூரடிகள் புராணபடனம் ஆரம்பிக்கப்பட்டது. அருள் மன்றத்து வழமையான அடியார்கள் புராணம் ஓதி முடிவுற, பின்னர் இலங்கையிலிருந்து வந்த விரிவுரையாளர்கள் பயிலுநர்கள் புராணம் ஓதினர். எல்லோரது பாடலுக்கும் பொருள் விரித்து இசையுடன் நயம்பட எமது இயக்குநர் புராணபடனத்தைக் கருத்துறப் பக்தியுணர்வுடன் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து, இராப் போசன விருந்தை முடித்து, எமது வாகனத்தில், இரவொளியில் மலேசிய நாட்டின் அழகைச் சுற்றிப்பார்த்து இரசித்தபடி இரவு 10 மணியளவில் எமது தங்குமிட அறைகளை அடைந்தோம்.



தொடரும்.

திருக்குறட்கதை

உ
சிவமயம்

# ஊழ்வினை

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்**

திருக்குறள் - 319

**அடுத்தவருக்குத் துன்பத்தை முற்பகலில் செய்தால், அப்படிச் செய்தவருக்குத் துன்பங்கள் பிற்பகலில் பிறர் ஏவாமல் தாமாகவே வந்து சேரும்.** இந்தச் சீரிய கருத்தைச் சித்திரிக்கும் வரலாறு வருமாறு:

கலிங்கம் என்ற அரிய நாடு ஒன்று உண்டு. அதற்குத் தலைநகரங்கள் இரண்டு; சிங்கபுரம், கபிலபுரம் என்ற பேருடைய அந்த இரு நகரங்களும் வளமையுடையவை. அம் மாநகரங்கள் இரண்டினையும் இரு அரசர்கள் அரசு புரிந்தார்கள். அவர்கள் பங்காளிகள். பங்காளிகளுக்குள் மாறுபாடு இருப்பது இயல்புதானே!

கபில புரத்தில் சங்கமன் என்ற உத்தமன் இருந்தான். நீதிநெறி மாறாதவன். இனிய குணமுடையவன். நற்குணசீலனான அவன் தன்பால் சரக்கு வாங்குபவர்களையும் தானாக நினைத்துச் சரக்குகளின் நலந் தீங்குகளைக் கூறி வியாபாரம் புரிவான். உலகத்திலே அருமையிலும் அருமையானவர் ஐவர் உளர்.

1) தன்னுடைய சரக்கின் கெடுதியைக் கூறும் வியாபாரி.
2) புகழை விரும்பாத கொடையாளி
3) மாற்றைக் குறைத்துக் கூறாமல் பொன் வாங்கும் வாணிபன்.
4) எவ்வித லஞ்சமும் வாங்காத உத்யோகஸ்தன்.
5) தண்டனையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளுகின்ற குற்றவாளி.

நமது சங்கமன் தனது சரக்குகளின் குணதோஷங்களை உள்ளதை உள்ளவாறு உரைத்து வியாபாரம் புரிபவன்.

அவனுடைய இல்வாழ்க்கைத் துணைவி நீலி என்பவள். அம்மாதரசி உயர்ந்த கற்பு நெறியுடையவள். கணவனாரைக் கடவுளாகக் கருதிக் காதல் பூண்டவள். இருவரும் ஈருடம்பு ஒருயிராக உள்ளம் உணர்வு ஒன்றி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

மாறுபட்ட மன்னர்களாதலின் கபிலபுரத்திலிருந்து சிங்கபுரத்திற்கும், சிங்கபுரத்திலிருந்து கபிலபுரத்திற்கும் யாரும் போக்கு வரவு கூடாது என்று தடை விதித்திருந்தார்கள். தடையை மீறி வந்தவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

சங்கமன் வியாபார நிமித்தம் கபிலபுரத்திலிருந்து சிங்கபும் போனான். ஏற்கனவே இவன்பால் பரதன் என்பவன் பகை கொண்டிருந்தனன். வியாபாரத்தில் பகை மூள்வது இயல்புதானே.

பரதன் தன் அரசனிடம் போய் "மன்னரே! கபிலபுரத்திலிருந்து நமது நகரத்தில்

உளவு அறிய ஓர் ஒற்றன் வந்து ஊருக்குள் இருக்கின்றான். அவன் பெர் சங்கமன்" என்று பொய்யாகக் கூறினான். அரசன் அவன் சொல்லை உண்மையெனக் கருதிச் சங்கமனைப் பிடித்துக் கொல்லுமாறு கட்டளையிட்டனன். குற்றம் புரியாத குணங்கொண்ட உத்தமனான சங்கமனைக் கொன்றுவிட்டார்கள்.

சங்கமன் மனைவி நீலி தன் கணவன் மாண்ட செய்தியை அறிந்து திடுக்கிட்டாள்; இடியேறுண்ட நாகம் போல் நடுநடுங்கினாள். "அந்தோ! பிராணேசா! என் அன்பே! அன்பில் விளைந்த அமுதே! ஆ! தங்கள் மலர்முகத்தை என்று காண்பேன்? இனி, தங்கள் இனிய செஞ்சொற்களைக் கேட்கநாள் உளதோ! தாங்கள் எங்கு சென்றீர்கள்? என் உள்ளம் துடிக்கிறதே! 'என் அருமை மானே! நான் சிங்கபுரம் போய் வருகிறேன்' என்று கூறி விடை பெற்றுச் சென்றீர்! சிங்கபுரம் சென்று அப்படியே எமபுரஞ் சென்று விட்டீரே! தங்களைப் பிரிந்து நான் எங்ஙனம் வாழ்வேன்? இனி, எனக்கு என்ன வாழ்வு இருக்கிறது? மணமில்லாத மலருக்கும் சுவையில்லாத கனிக்கும் என்ன பெருமை இருக்கின்றது? தாங்கள் சென்ற உலகிற்கு அடியேனும் வருகின்றேன்" என்றெல்லாம் கூறி அழுதாள். கணவன் சென்ற திசை நோக்கித் தொழுதாள். இங்கும் அங்கும் பேய் பிடித்தவள் போல் விரித்த கூந்தலுடன் அலைந்தாள். இரவு பகலாக அவள் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வந்த வண்ணமாகவேயிருந்தது. அவளைக் கண்டார் அனைவரும் பரிதாபமுற்றார்கள். அப்பெண்மணியின் ஆறாத் துயரை நோக்கிக் கருங்கல்லுங் கரைந்தது. "ஆ! இப்பெண்ணரசி தன் கணவனை இழந்து கொழுகொம்பில்லாத கொடிபோல் வாடி வருந்துகின்றாளே! இவள் துன்பம் கடலினும் பெரிது. தெய்வமே! இவளுக்கு ஆறுதல் தரக்கூடாதா?" என்று கூறி வருந்தினார்கள்.

நீலி இவ்வண்ணம் பேய் பிடித்தவள் போலவும், பித்துப் பிடித்தவள் போலவும் அலைந்தாள். பதினான்காவது நாளின் முடிவில் ஒரு மலை உச்சியின் மீது நின்றாள். "எங்கும் நிறைந்த கடவுளே! என் கணவனுக்கும் எனக்கும் இடர் புரிந்தார், மறுபிறப்பில் இத்துன்பத்தை அடையக்கடவது" என்று கூறி மலை உச்சியினின்றும் வீழ்ந்தாள். அவள் ஆன்மா சாந்தியடைந்தது.

சங்கமன் மீது கோள் சொல்லிக் கொலை புரிவித்த பரதன் மறுபிறப்பில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் கோவலனாகப் பிறந்தான். இவன் மனைவி கண்ணகியாகப் பிறந்தாள். முற்பிறப்பில் குற்றம் பரியாத சங்கமனை, மன்னவனைக் கொண்டு கொல்வித்த ஊழ்வினை வந்து உருத்து ஊட்டியது. அதனால், பொற்கொல்லன் சூழ்ச்சியால் மதுரையில் கோவலன் கொல்லப்பட்டான். நீலியைப்போல் கண்ணகி 14நாள் துன்புற்று, இறுதியில் உறுதியான கற்பின் மாண்பினால் கணவனுடன் நற்கதி பெற்றாள்.

நாம் புரிந்த வினை மறு பிறப்பில் இறைவன் ஆணையால் நம்பால் வந்து பொருந்தும். எனவே, மன வாக்குக் காயங்களால் யாருக்கும் எந்தவகையான கெடுதியும் அணுத்துணையேனும் புரியக்கூடாது.

தெய்வத்திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

பெரியபுராணத் தொடர்......

உ
சிவமயம்

# அமர்நீதி நாயனார்

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா

**படையறை வணிகர் அமர்நீதியார் பால்**
**பாவுசிறு முடிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்**
**குழைகாதர் வன்தொருகோவணத்தை வைக்கக்**
**கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்து வந்து**
**தொழிலாரும் அது வேண்டி வெகுண்டு நீர்இத்**
**துலையிலிடுங் கோவணநேர் துக்கம் என்ன**
**எழிலாரும் பொன்மனைவி இளஞ்சேய் ஏற்றி**
**ஏறினர் வானுலகு தொழ ஏறினாரே**

(திருத்தொண்டர் புராண சாரம்)

சோழநாட்டிலே, பழையாறை என்னும் ஊரிலே, வைசியர் குலத்திலே, பெருஞ் செல்வமுடையவரும், சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து அவரவர் குறிப்பறிந்து, கந்தை, கீழ்கோவணம் என்பவைகளைக் கொடுப்பவருமாகிய அமர்நீதி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்.

திருநல்லூர் என்னுந் திருப்பதியிலே நடைபெறும் திருவிழாவைக் கண்டு இன்புற அடியவர்கள் பலர் அங்கே போவது வழக்கம். அவ்விடத்தில் அடியவர்களுக்குத் திருவமுது செய்விக்கும் பொருட்டு, நாயனார் ஒரு திருமடங்கட்டினார். நாயனார் சுற்றத்தவர்களுடன் அத்திருமடத்தில் தங்கித் தொண்டுகளைக் குறைவற ஆற்றி வரலானார்.

சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு பலசெய்யும் அமர்நீதிநாயனாரின் உயர்ந்த பண்பினை - பக்திப்பெருக்கினை உலகறியச் செய்யத் திருவுளம் கொண்டார் சிவபெருமான். அந்தணப் பிரமசாரி வேடம் பூண்டு, இரண்டு கோவணமும், விபூதிப்பையும், ஒரு தண்டைக் கையிலும் பிடித்துக்கொண்டு, அத்திருமடத்திற்கு எழுந்தருளினார்.

அவரைக் கண்ட நாயனார் மனமகிழ்ச்சியுடன் முறைப்படி வழிபட்டார். வேதியர் பெருமான் நாயனாரை நோக்கி "நீர் அடியவர்கட்குத் திருவமுது செய்வித்தும், கந்தை, கீள், அழகிய வெண்மையான கோவணம் முதலியனவும் தருகின்றீர் என்று கேள்வியுற்றுத்தான் உம்மைப் பார்த்துவிட்டுப் போகவந்தேன்" என்று பதிலுரைத்தார். அது கேட்ட அமர்நீதி நாயனார் "இந்தத் திருமடத்தில் பிராமணர்கள் போசனம் பண்ணும் பொருட்டுப், பிராமணர்கள் பாகம் பண்ணுவதுமுண்டு. தேவரீரும் இங்கு திருவமுது செய்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

வேதியரும் அதற்கு உடன்பட்டு, "காவிரியில் நீராடி வருகிறேன். ஒருவேளை மழை வரினும் வரும். இவ்வுலர்ந்த கோவணத்தை வைத்திருந்து கொடும்" என்று தண்டிலுள்ள ஒரு கோவணத்தை அவிழ்த்து, இந்தக் கோவணத்தின் மகிமையை உமக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நான் ஸ்நானம் பண்ணிவிட்டு வரும்வரை இதனை வைத்திருந்து தாரும்" என்று அவர்கையில் கொடுத்துவிட்டு காவிரியில் நீராடச் சென்றார். நாயனார் அக்கோவணத்தை ஒரு தனியிடத்தில் சேமித்து வைத்தார்.

இறைவனின் திருவருளால் அக்கோவணம் மறையலாயிற்று. வேதியர் நீராடிவிட்டு மழையில் நனைந்து வந்தார். நாயனாரிடம், "ஈரத்தை மாற்றல் வேண்டும், தண்டில் உள்ள கோவணமோ ஈரமாயிருக்கிறது. ஆதலால் உம்மிடம் அளித்த கோவணத்தைக் கொண்டுவாரும்" என்றார்.

அமர்நீதி நாயனார் சீக்கிரம் உள்ளே பார்த்து கோவணத்தைக் காணாதவராகி, திகைத்து, எங்கும் தேடியும் காணாமையினால், மிகவும் துக்கத்துடன், வேறொரு கோவணத்தை எடுத்து வந்து வேதியரிடம் "சுவாமீ! தேவரீர் தந்த கோவணத்தைக் காணவில்லை; இது கிழிக்கப்பட்ட கோவணம் அல்ல, நெய்யப்பட்ட கோவணமே, தேவரீர் நனைந்த கோவணத்தைக் களைந்து, இதனைச் சாத்தி, அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

"அடியவர்கட்கு நல்ல கோவணங் கொடுப்பதாகக் கூறி என் கோவணத்தைக் கவருவதற்கே போலும்! உமது வாணிபம் நன்று! நன்று! மிகநன்று!" எனக் கூறினார். நாயனார் நடுநடுங்கி ஐயரைப் பணிந்து "இப்பிழையைத் தெரிந்து செய்தேனில்லை, இக்கோவணமன்றி நல்ல பட்டாடைகளையும், மணிகளையும் கொடுக்கிறேன் ஏற்று அருளல் வேண்டும்" என வேண்டினார்.

அடிகள் தணிவுற்று "எமக்கு வேறொன்றும் வேண்டாம் எமது கோவணத்திற்கு ஒத்த நிறையுள்ள கோவணம் இது" என்று தண்டில் கட்டப்பட்டிருந்த கோவணத்தை அவிழ்த்துக் காட்டினார். அமர்நீதி நாயனாரும் அதற்கு இணங்கி, ஒரு தராசைக் கொண்டுவந்து நாட்டினார். அத்தணர் தமது கோவணத்தை ஒரு தட்டில் இட்டார். நாயனாரும் தாம் கொண்டு வந்த கோவணத்தை மற்றொரு தட்டில் இட்டார். நிறை ஒத்துவரவில்லை. நாயனார் அடியார்கட்கு கொடுப்பதற்காக வைத்திருந்த கோவணங்கள் யாவற்றையும் கொண்டுவந்து தட்டில் வைத்தார். அப்பொழுதும் நிறை சரிவரவில்லை. தம்மிடம் உள்ள பொன், வெள்ளி, உலோகங்கள். பிற பொருள்களையும் குவியல் குவியல்களாகக் கொண்டுவந்து தட்டில் சேர்த்தார். தட்டு நேர்நிற்கவில்லை. அதைக்கண்ட நாயனார், "அடிகளே என்னிடம் உள்ள எல்லாவற்றையும் கொண்டுவந்து வைத்துவிட்டேன்; இனி அடியேனும், மனைவியும், புதல்வனும்தான் எஞ்சி நிற்கின்றோம் திருவுளமிருப்பின் நாங்களும் தட்டில் ஏறுகின்றோம்" என்றார். ஐயரும் அதற்கு இசைந்தார். அமர்நீதி நாயனார் பெரிதும் மகிழ்ந்து, மனைவியுடனும், மைந்தனுடனும் தராசை வலம் வந்து, "இதுகாறும் நாங்கள் நிகழ்த்திவந்த தொண்டு தவறுதலில்லையானால் நாங்கள் ஏறியதும் இத்தராசு நேர் நிற்பதாக" எனக் கூறி ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு தட்டிலேறினார். ஏறியதும் தட்டுகள் நேர் நின்றன.

மண்ணவர் வாழ்ந்தினர். விண்ணவர் மலர் சொரிந்தனர். பிரமசாரியாக வந்த சிவபெருமான் உமாதேவியாருடன் மழவிடைமேல் தோன்றினார். தட்டிலே நின்ற நாயனாரும், அவர்தம் மனைவியாரும், புதல்வரும் ஆண்டவன் திருக்கோலத்தைக் கண்டு பரவசமடைந்தார்கள். சிவபெருமான் மூவர்க்கும் தம்மை என்றுந் தொழுதுகொண்டு இருக்கும் வான்பதம் அருளி எழுந்தருளினார். திருவருளினால் அத்தராசு விமானமாகி மேலே சென்றது. அமர்நீதி நாயனார் தம் மனைவியுடனும், மைந்தருடனும் சிவலோகம் சேர்ந்தார்.

"அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்"

(சுந்தரர்)

உ

சிவமயம்

# ஆறுமுகமான பொருளும் ஒன்றே

"செந்தமிழ்ச்செம்மல்", கலாபூஷணம், புலவர். M.S. ஸ்ரீதயாளன்
முன்னாள் இலங்கை இ.ச.க. அமைச்சு, உதவி இயக்குநர்

**"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில்சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம்இல்லை எனும் நான்மறைச்செம்பொருள் வாய்
மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே."**

## சைவ, கௌமார ஐக்கியம்

சைவம், வாழ்வின் முதற்பொருளாய், முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் அற்புதமான, பழஞ்சமயம். ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியானவர் நம் சிவப்பரம்பொருள். அருவமும் உருவுமாகி, அநாதியாய், பலவாய் ஒன்றாய், பிரம்மமாய் நின்றசோதிப்பிழம்பல்லவா அப்பரம்பொருள்? மேலான பிரம்மம், பிரபஞ்சத்தின் அடிமுடிதேடிச்சென்று அங்கலாய்த்து நின்ற அரிபிரமனுக்கு மாத்திரமல்ல தேவாதிதேவர்களெல்லோருக்கும் காணவொண்ணாதவனாக விளங்குபவன். அந்த அளவிடமான சோதியே சு+பிரம்மம்; சுப்பிரமணியனாக, குமரனாக, கந்தனாக, நம் முருகனாக ஆறுமுகனாக வந்து தோன்றியதே எனக்காட்டுவார் சைவசித்தாந்த நெறியைக் கந்தபுராணப் பனுவல்வழி எமக்குணர்த்திய கச்சியப்பசிவாசாரியப் பெருமான்.

**"அருவமும் உருவுமாகி அனாதியாய் பலவாய்ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்றசோதி பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒரு திருமுருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம்உய்ய."**

இங்கே வரும் உதித்தனன் என்ற சொல் எத்துணை அழகானது. பொருளும் தத்துவமும் பொதிந்தது. சைவம் அவதாரத்தை வைஷ்ணவம் போல பேசுவதில்லை!

என்றுமுள்ள சூரியன் கிழக்கிலே உதிப்பது போலதோன்றுவதும், மேற்கில் மறைவது போல தோன்றுகின்றமை என்ற நிலையிலே சனாதனனான சிவமாம் பரம்பொருளே தேவர்கள் சிறைமீட்கவும், தம்பக்தர்கள் குறையெல்லாம் தீர்த்தருளவும், சோதிமயமாய், பிரகாசமாய் கருணைபொங்கும் ஆறுதிருமுகங்களுடனும், பன்னிரண்டு திருக்கரங்களுடனும் ஒரு திருமேனிதாங்கி, முருகன் என்ற பெயரோடு உதித்தது. முருகன் அவதரிக்கவில்லை. அவனே சிவன். சிவனே அவன்; அவனே பிரம்மம். பரம்பொருள் எனும் பேரொளியாய், ஷண்முகனாய் ஆனவன் என்கின்ற தன்மையில் விளங்குபவன்.

சூரபன்மன் முதலாம் அசுரர்கள் கொடுமைகள், அநீதிகளையும் அட்டகாசங்களையும் மேலும் மேலும் பொறுக்கமுடியாது, தமக்கு இனிச் சிவபிரானே துணை புரியவேண்டுமென்று இறைஞ்ச, சரியான வேளையிலே தானே முருகன், அவனே

தானெனும்படி; ஷண்முகனாக வந்துதித்து குறை நீக்கி, வடிவேலினால் சூரனை சம்காரம் செய்த அருட்கதையை, சித்தாந்த முடிவை அழகாகத் தரும் கந்தபுராணப் பனுவல் முருகன் உதித்த நோக்கையும், போக்கையும் தத்ரூபமாக தெளிவுறுத்துமிடம் நோக்கிமகிழலாம்.

**"மறைகளின் முடிவால் வாக்கால், மனத்தினால் அளக்கொணாமல்**
**நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி**
**அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்**
**வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினான்"**

என்பது அவ்வினிய கந்தபுராணச் செய்யுளாகும். "சரவணபவ"க்கடவுளாக பொற்றாமரைக் குளத்தே வந்து கார்த்திகேயனான முருகன் சிவமைந்தனென்றும், சிவனேயவனென்றும் கொண்டகாட்சி அற்புதமாகப் படம் பிடித்துக் காண்பிக்கப்படுகிறது.

சிவனுக்குரிய ஐந்து திருமுகங்களோடு, ஆறாவது முகமாகிய அதோமுகத்தையும் கொண்டவனாக ஷண்முகப்பெருமானாக அறுமுகவேள் தோற்றமளிக்கிறார். ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன சிவபெருமானுடைய ஐந்து முகங்கள். தொல்லைத் திருமுகம் என்று சொல்லப்படும் அம்பிகைக்குரிய ஆறாவது வதனமே அதோமுகம். "ஐந்துமுகத்தோடு அதோமுகமும், தந்து திருமுகங்கள் ஆறாகி" என்பது கந்தர்கலிவெண்பா.

'ஐம்முகச் சிவமே அறுமுகச்சிவமாகியது. மேலும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் முதலிய நான்கு திருமேனியும் உருவம் எனவும், சதாசிவமேனி அருவுருவத் திருமேனி எனவும் கூறும் சித்தாந்த நூல்கள் இந்த ஐந்துக்கும் மேலாக உள்ள குடிலைப்பரம்பொருளையே பூரணப்பிரம்மம், சு+ பிரம்மம் (மணியம்) என்றும் சித்திரிக்கிறது.

அருணகிரிநாத சுவாமிகள், பிற்காலத்து பாம்பன் சுவாமிகள் போன்ற முருகனடியார்கள் தம் அருட்பாடல்களில் அநேக இடங்களில் ஐம்முகச்சிவனும் அறுமுக முருகனும் ஒருவரே என்ற தத்துவத்தை குறித்துச் சொல்வதை அவதானிக்கலாம். முருகப்பெருமானே அருணகிரிப் பெருமானுக்கு முன்னே தோன்றி "அருணகிரிநாதா" எனப்பெயர் சூட்டினார்; திருப்புகழைப் பாடுமாறு பணித்தார்; "முத்தைத்தரு" என முதலடியெடுத்துத் தம்மைப் பாடு எனக் குருவுபதேசம் செய்தார். அப்படியான, தவயோகி அருணகிரி; பின்னர் வாக்குக்கு அருணகிரி எனப்போற்றப்படுகிறார்.

கல்லாலமரத்தின் கீழமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்த சிவபெருமானே, முருகனாக வடிவுகொண்டு தனக்கும் பிரம்மரகசியத்தைச் சொல்லாமற் சொல்லி ஞானம் உபதேசித்தார் என்கிறார் அருணகிரியார்.

**"பரம குருநாத கருணை உபதேச**
**பதவிதரு ஞானப் பெருமாள்காண்..."**

எனத் தொடங்கும் திருப்புகழிலே, "**கனகசபைமேவி அனவரதம் ஆடும்**
**கடவுள் செகசோதிப் பெருமாளே**" என அப்பாடலை முடிக்கும் இடம் காணத்தக்கது.

இவ்வாறே திருவண்ணாமலைத் தலத்துக்கண் வீற்றிருக்கும் இறைவனை "சிவயநம", "நமசிவய" என்ற பஞ்ச அட்சரவடிவில் கண்டு, தியானித்து வழிபடும் அருணகிரிநாதர் அஞ்செழுத்தால் ஆன அரன் உருவை அவ்வஞ்செழுத்தை ஓதியே வழிபட்டுப் பாசநீக்கம் பெற்றதாகவும் பாடலில் குறித்துச் செல்கிறார்.

கௌமாரநெறி முருகனை முழுமுதலாகக் கொள்ளும் நெறி. சைவம் சிவனையே ஒருபெருந்தெய்வமாகக் கொள்வது. எனினும் பாம்பன் சுவாமிகளும், அருணகிரியும் முருகனூடாக சிவனையே முழுமுதலாகவும், சிவனூடாக முருகனையே பரம்பொருளாகவும் தரிசித்து முத்திபெற்றனர்.

பேரானந்த நிலையில் தம்மை வாழ்விக்க வந்த தெய்வமே! மெலியாத தத்துவ சிவஞானிகளின் அகம்தோறும் மிளிருகின்ற பரஞ்சோதி வடிவமாக அமைந்த திருவேரகத்து முருகப்பெருமானை, சைவசித்தாந்த தத்துவப் பொருளாகவே கண்டு பாம்பன் சுவாமிகள் பாடி வழிபடுமிடம் எம்மைப் பரவசப் படுத்துவதாகும்.

**"நிஜ நிலையில் என்னை வாழ்விக்கவருதெய்வமே**
**நிபிட இன்பப் பிழம்பே**
**மெலியாத தத்வசிவஞானிகள் அகந்தோறும்**
**மிளிர் பரஞ்சோதி வடிவே**
**வீரம்உள தேவர்தவமே உறுவர் தொழுத திரு**
**ஏரகம் அமர்ந்த வேளே"**

என்று நெஞ்சுருகிப் பாடுவது பாம்பன் சுவாமிகளின் பாடலாகும்.

இதே கருத்தில் முருகனால் ஆட்கொள்ளப்பட்டு பதினாயிரம் பாடல்களை எமக்களித்த தவயோகி அருணகிரிநாதரும் எமக்குக் (பதினாயிரம் பாடல்களில்) கிடைத்த ஆயிரத்து முந்நூற்று இருபத்து நான்கு பாடல்களில் பல இடங்களில், தமக்கு திருநீறு அளித்து அருணையில் ஆட்கொண்ட ஐயன் முருகனையும் சிவனாகவே கண்டு அரகர, சிவசிவ எனப் போற்றி வழிபடுகின்றமை நோக்கற்பாலது.

**"கந்தச்சடைமுடி கனல்வடிவு அடல் அணிஎந்தை"**
**"அமுதமதை அருளி எமை ஆளும் எந்தை"**,மற்றும்
**"சந்தித்து அரகர சிவசிவ சரண் என**
**கும்பிட்டு இணையடி அவையென தலைமிசை**
**தங்கப் புளகிதம் எழ இருவிழி புனல் சிந்த .....**"

என அமையும் திருப்புகழ்ப் பாடல்கள் அவற்றை வெளிப்படுத்துவன.

## திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமையம் - 2017

### கொழும்பு - பயிலுநர்கள்

1. திருமதி. மா. இந்திராதேவி
2. திருமதி. சு. சற்சொரூபவதி
3. திரு. சி. மயூரன்
4. திருமதி. து. அருள்மொழிதேவி
5. செல்வி. ரா. அன்னலட்சுமி

### இணுவில் - பயிலுநர்கள்

1. திருமதி. சத்தியதேவி நிரஞ்சன் - கோண்டாவில்.
2. செல்வி. கஸ்தூரி சற்குணநாதன் - கோண்டாவில்.
3. திருமதி. பாலசுசிரோன்மணி அமிர்தலிங்கம் - கோண்டாவில்.
4. திரு. குமாரசாமி கோபாலலிங்கம் (ஓய்வுநிலை கணக்காளர்) - ஊர்காவற்துறை
5. திரு. வைத்திலிங்கம் கனகநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்) - இணுவில்.
6. திரு. ஜெயராசா அருள்தாஸ் - குப்பிளான்
7. இசைக்கலைமணி. திலகவதியார் பொன்குணரத்தினம் (ஆசிரியர்) - சுழிபுரம்
8. திரு. பத்மராசா பத்மநிருபன் B.Sc., (தாதிய உத்தியோகத்தர்) - சங்கானை
9. திருமதி. தவேந்திராதேவி சிவகுருநாதன் B.Sc., M.A. (ஆசிரியர்) - இளவாலை
10. திரு. கணேசமூர்த்தி மோகனதாசன் B.A. (ஓய்வூதியர்) - சாவகச்சேரி
11. திரு. இரத்தினசபாபதி இரத்தினேஸ்வரன் (ஓய்வூதியர்)- யாழ்நகர்
12. திரு. நடராசா கணேசமூர்த்தி (ஆசிரியர்) - யாழ்நகர்
13. பாலபண்டிதர். நாகலிங்கம் தில்லைநாதன் - இணுவில்
14. திரு. பொன்னம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா B.A., Dip. (ஓய்வுநிலை அதிபர்) - சுழிபுரம்
15. திரு. ஆ. விஸ்வமகாதேவன் B.A., Med (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்) -சுழிபுரம்
16. செல்வி. கயல்விழி குபேரன் - பூநகரி
17. இளஞ்சைவப்புலவர் கந்தசாமி கௌசிகன் B.F.A. - தேற்றாதீவு
18. பாலபண்டிதர், இளஞ்சைவப்புலவர் ஜெனனி சந்திரகுமார் - கல்வியங்காடு
19. திரு. நாராயணமூர்த்தி சுஜீவன் B.A. - வவுனியா
20. திரு. மகாதேவன் ஜெயசுதன் M.Sc. (மருத்துவ பௌதிகவியலாளர்) - உரும்பிராய்

## திருவாவடுதுறை ஆதீனம் சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமையம் - 2017

### கொழும்பு - பயிலுநர்கள்

1. திரு. ந. ஸ்ரீதரன்
2. திரு கு. கனகரட்ணம்
3. செல்வி. மு. புனிதச்செல்வி யோகீஸ்வரி
4. திருமதி. த. நிர்மலா
5. திருமதி. தி. அழகேஸ்வரி
6. திருமதி. ஜெ. புனிதவதி
7. திரு. ச. கார்த்திகைக்குமரன்
8. திருமதி. பா. நந்தினி
9. திருமதி. இ. பத்மினி
10. திருமதி. ந. நரேந்திரதிலகை
11. திருமதி. இ. சந்திரகாந்தா
12. திருமதி. சி. ஜெயலோஜனா
13. திருமதி க. செல்வதி
14. திருமதி ம. இராசகுமாரி
15. திருமதி. பொ. இந்திராணி
16. திருமதி. சி. சகுந்தலாதேவி
17. திருமதி. சி. பிரேமளாசக்தி
18. திருமதி. ச. புஷ்பராணி.

### இணுவில் - பயிலுநர்கள்

1. திருமதி. சிறீஸ்வரி புஷ்பராசா B.Ed. - சாவகச்சேரி
2. திருமதி. சற்குணேஸ்வரி தபேந்திரன் B.A., M.A ( ஆசிரியர்) - கைதடி
3. திருமதி. சங்கமித்தா ஜெயக்குமார் B.A. (உளவள ஆலோசகர்) - அளவெட்டி
4. திருமதி. சிவகலா பஞ்சாயுதன் (ஓய்வுநிலை ஆசிரியர்) - இணுவில்
5. திருமதி. பாலசரஸ்வதி சந்திரகுமாரன் - மல்லாகம்
6. திருமதி. பரமேஸ்வரி சிவனொளிபாதம் (ஆசிரிய ஆலோசகர்) - கிளிநொச்சி
7. திருமதி. விக்னேஸ்வரி சுந்தரமூர்த்தி (ஆயுர்வேத வைத்தியர்) - கிளிநொச்சி
8. திருமதி. கணேஸ்வரி லிங்கேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்) - இணுவில்
9. சைவப்புலவர் பொன்னுத்துரை சந்திரவேல் M.A. (கலாசார உத்தியோகஸ்தர்) - ஏழாலை
10. சங்கீதவித்துவான் மணிவதனம் திருஞானசம்பந்தர் (ஓய்வுநிலை ஆசிரியர்) - இணுவில்
11. திரு. சோமசுந்தரம் நடராசா B.A., M.A. - பண்டத்தரிப்பு
12. திரு. சிவகுருநாதன் சுபந்தன். - இளவாலை

# திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமையம் -2018

## கொழும்பு பயிலுநர்கள்

1. திரு. ஸ்ரீ கார்த்திகைக்குமரன்
2. திரு. ந. ஸ்ரீதரன்
3. திருமதி. தி. அழகேஸ்வரி
4. திருமதி. ஆ. இராஜேஸ்வரி
5. திரு. த. இரவீந்திரன்
6. திரு. இ. சசீந்திரன்
7. திரு. கு. கனகரட்ணம்
8. திருமதி. செ. ஜெகதீஸ்வரி
9. திருமதி. ம. இராசகுமாரி
10. திருமதி. ந. நரேந்திரதிலகை
11. திரு. வ. வேலுஜயா
12. திருமதி. ப. சிவகுமாரி
13. திருமதி. ப. பத்மலதா
14. செல்வி. ஐ. மனோறா
15 திருமதி. நி. குஞ்சரா
16. செல்வி. சி. உமாதேவி
17. செல்வி. செ. உதயகௌரி

## இணுவில் பயிலுநர்கள்

1. திரு. தங்கவேலு தயாபரன் - கரவெட்டி
2. இளஞ்சைவப்புலவர் கலாமோகன் பிரசான்
(பல்கலைக்கழக மாணவன்) - சுன்னாகம்
3. பாலபண்டிதர் பத்மலோஜினி ஸ்ரீராமன் (பதில் ஆசிரியர்) -. நல்லூர்
4. திரு. கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் B.A.
(ஓய்வுநிலை ஆசிரியர்) - மிருசுவில்
5. திரு. வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்
(ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்) - இணுவில்
6. பாலபண்டிதர் துரைசிங்கம் பிரபாசன் N.D. B.E-Dip.
(பிரதம முகாமை உதவியாளர்) - மானிப்பாய்
7. செல்வி. சுபாஷினி சிவலிங்கம் B.A. (முன்பள்ளி ஆசிரியர்) - திருநெல்வேலி
8. திரு. கோணேசபிள்ளை நந்தகுமார் B.Sc. - திருநெல்வேலி
9. திரு. தவராசா அஜித்குமார் B.A.(அபிவிருத்தி உத்தியோகத்தர்) - கோப்பாய்
10. சைவப்புலவர் லீலாவதி அருளையா B.Com., Dip.(ஓய்வுநிலை அதிபர்)-தெல்லிப்பழை
11. இளஞ்சைவப்புலவர் சுசீலாதேவி கிருஷ்ணராஜன் B.Ed. (ஆசிரியர்)- வவுனியா

# திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமையம் - 2018

## கொழும்பு பயிலுநர்கள்

1. செல்வி. மு. புனிதச்செல்வி யோகீஸ்வரி
2. திருமதி. பொ. இந்திராணி
3. அ. இந்திராதேவி
4. திருமதி. சி. பிரேமளா சக்தி
5. திருமதி. இ. பத்மினி
6. திருமதி. சி. சகுந்தலாதேவி
7. திரு. அ. நடராஜா
8. திரு. க. ஜெகதீசன்
9. திருமதி. ஜெ. புனிதவதி
10. திருமதி. ச. புஸ்பராணி
11. திரு. கி. வெள்ளைச்சாமி
12. திருமதி. க. செல்வதி
13. திருமதி. மா. இந்திராதேவி
14. திருமதி. சு. சற்சொரூபவதி
15. திருமதி. பா. நந்தினி
16. திரு. வ. உதயசீலன்
17. திருமதி. சி. தனலட்சுமி
18. திருமதி. சி. மல்லிகா

## இணுவில் பயிலுநர்கள்

1. திருமதி. கணேஸ்வரி லிங்கேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்) - இணுவில்
2. திருமதி. நிமலா சசிகரன் B.A. - மானிப்பாய்
3. திருமதி. மனோன்மணி நாகராஜா (ஓய்வுநிலை போதனாசிரியர்) - கோண்டாவில்
4. திருமதி. கிருஷ்ணானந்தி இராசேந்திரன் - வயாவிளான்
5. திரு. ஜெயராசா அருள்தாஸ் - குப்பிளான்
6. இளஞ்சைவப்புலவர், பாலபண்டிதர் கந்தசாமி கௌசிகன் B.F.A. - தேற்றாதீவு
7. திருமதி. சத்தியவதி நிரஞ்சன் - கோண்டாவில்
8. இளஞ்சைவப்புலவர் மகேஸ்வரி விஜயரட்ணம் - சாவகச்சேரி
9. திரு பொன்னம்பலம் சிறீஸ்கந்தராசா B.A.Dip. (ஓய்வுநிலை ஆதிபர்) - யாழ்நகர்

உ
சிவமயம்

# திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை/சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய கொழும்பு/இணுவில் கிளையினரால் மேற்கொள்ளப்பட்ட திருத்தல யாத்திரைகள்

**தென்னிந்தியத் திருத்தலங்கள்**
**(26.01.2012 - 02.02.2012)**

26.01.2012
1. விராலிமலை
2. அழகர்மலை
3. பழமுதிர்சோலை (ஆறுபடைவீடு)
4. திருவாதவூர்
5. திருப்பரங்குன்றம் (ஆறுபடைவீடு)

27.01.2012
6. மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
7. பிள்ளையார் பட்டி
8. திருப்பெருந்துறை

28.01.2012
9. தஞ்சைப் பெருங்கோயில்
10. திருவையாறு
11. திருக்கண்டியூர்
12. சுவாமிமலை (ஆறுபடைவீடு)
13. திங்களூர்
14. திருவிடைமருதூர்
15. திருவாவடுதுறை

29.01.2012
16. திருவாரூர்
17. திருநள்ளாறு
18. திருக்கடவூர்
19. திருவெண்காடு

30.01.2012
20. சிதம்பரம்
21. சீர்காழி
22. புள்ளிருக்குவேளூர்

31.01.2012
23. திருச்சத்திமுற்றம்
24. திருப்பட்டீச்சரம்
25. திருநல்லூர்
26. திருமுதுகுன்றம்

01.02.2012
27. திருவண்ணாமலை
28. திருவெண்ணெய்நல்லூர்
29. மெய்கண்டார் கோயில்

02.02.2012
30. உறையூர்
31. உச்சிப்பிள்ளையார்
32. தாயுமானவர் சுவாமி

**தென்னிந்தியத் திருத்தலங்கள்**
**(14.01.2013 - 23.01.2013)**

14.01.2013 1. திருஏடகம்

15.01.2013
2. திருவாவினன்குடி(பழநி ஆறுபடைவீடு)
3. திருவாவடுதுறை ஆதீனம்(பட்டமளிப்பு)

16.01.2013
4. சுவாமிமலை (ஆறுபடைவீடு)
5. திருவலஞ்சுழி
6. திருநாகேச்சுரம்
7. திருவீழிமிழலை
8. மயிலாடுதுறை

17.01.2013
9. திருக்கோலக்கா
10. திருநல்லூர்
11. திருநாரையூர்

18.01.2013
12. தருமபுரம்
13. திருமணஞ்சேரி
14. சிதம்பரம்
15. திருமறைக்காடு
16. திருக்கடவூர்

19.01.2013
17. திருப்பெருந்துறை
18. திருப்புனவாசல
19. திருக்கானப்பேரூர்
20. திருஉத்தரகோசமங்கை

20.01.2013
21. இராமேஸ்வரம்
22. திருச்செந்தூர் (ஆறுபடைவீடு)

21.01.2013
23. கன்னியாகுமரி
24. சுசீந்திரம்
25. திருக்குற்றாலம்
26. திருநெல்வேலி

22.01.2013

27. திருவாலவாய்
28. திருப்பரங்குன்றம். (ஆறுபடைவீடு)

23.01.2013

29. திருப்பூவணம்
30. திருக்கடவூர்
31. திருவெண்காடு

**தென்னிந்தியத் திருத்தலங்கள்**
**(31.01.2014 - 07.02.2014)**

01.02.2014

1. திருவொற்றியூர் (ஆதிபுரி)
2. திருவலிதாயம்
3. திருவடமுல்லைவாயில்
4. திருமயிலாப்பூர்
5. மாமல்லபுரம்
6. திருக்கழுக்குன்றம்
7. அச்சிறுபாக்கம்

02.-2.2014

8. சிதம்பரம்
9. திருவேட்களம்
10. திருநெல்வாயில்
11. திருக்களிப்பாலை
12. திருப்பாதிரிப்புலியூர்
13. திருவதிகை வீரட்டானம்
14. திருப்பெண்ணாகடம் (தூங்கானைமாடம்)

03.02.2014

15. திருவிடைமருதூர்
16. கும்பகோணம்
17. குடந்தைக்கீழ்க்கோட்டம் திருக்காரோகணம்
18. நாகேச்சரம்
19. நடுக்கோட்டம், குடமூக்கு
20. திருவாவடுதுறை
21. மெய்கண்டார் ஜீவசமாதி
22. திருவெண்ணைய் நல்லூர் திருவருட்டுறை (அரையணி நல்லூர்)

04.02.2014

23. சுவாமிமலை (திருவேரகம்) (ஆறுபடைவீடு) அறையணி நல்லூர்
24. திருக்கோவலூர் வீரட்டம்
25. திருவண்ணாமலை

05.02.2014

26. திருக்காளத்தி
27. திருத்தணிகை (ஆறுபடைவீடு)
28. காஞ்சிபுரம்
29. கச்சிமயானம்

06.02.2014
30. திருப்பாசூர்
31. இலம்பயங்கோட்டூர்
32. திருவாலங்காடு
33. பழையனூர்
34. திருவேற்காடு
35. திருவான்மியூர்

**தென்னிந்தியத் திருத்தலங்கள்**
**(03.01.2016 - 10.01.2016)**

03.01.2016
1. திருவஞ்சைக்களம்

04.01.2016
2. திருப்புக்கொளியூர்
3. திருமுருகன்பூண்டி
4. திருச்செங்கோடு (திருக்கொடிமாடச்செங்குன்றூர்)

05.01.2016

5. திருநணா (பவானி)
6. திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுந்தி)
7. வெஞ்சமாக்கூடல்
8. கரூர் ஆநிலை

06.01.2016

9. கடம்பன்துறை (குளித்தலை)
10. திருஈங்கோய்மலை
11. திருவாட்போக்கி
12. திருப்பராய்த்துறை
13. திருப்பாச்சிலாச்சிராமம்

07.01.2016
14. திருப்பைஞ்ஞீலி
15. திருப்பட்டூர்
16. அன்பிலாலந்துறை
17. திருவானைக்கா

08.01.2016
18. திருஎறும்பியூர்
19. திருநெடுங்களம்
20. திருப்பனந்தாள் (தாடகையீச்சரம்)
21. திருப்புகலூர்
22. திருச்செங்காட்டங்குடி
23. திருமருகல்
24. ஓமாம்புலியூர்

09.01.2016
25. சிதம்பரம்
26. திருப்புன்கூர்
27. திருவாவடுதுறை (பட்டமளிப்பு)

10.01.2016
28. மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
29. திருப்பரங்குன்றம் (ஆறுபடைவீடு)

**வட, தென்னிந்தியத் திருத்தலங்கள் காசித் தீர்த்த யாத்திரை (25.01.2017 - 31.01.2017)**

25.01.2017 1. திரிவேணி சங்கமம் அலகாபாத் மாளிகை
26.01.2017 2. அயோத்தி, சரயுநதி
27.01.2017
3. காசி (வாரணாசி, பனாரிஸ்) அனுமார்காட்(துறை) பிதிர்தர்ப்பணம்
28.01.2017 4. காசி காலபைரவர்கோயில்
5. காசி திருமால் கோயில்
29.01.2017 6. காயா
30.01.2017
7. ஹரித்துவார்(இறைவனின் இருப்பிடவாயில்) ஹரிக்கோ பௌமி
31.01.2017
8. ரிஷிகேஷ்

**சென்னை - திருத்தல யாத்திரை (02.02.2017 - 05.02.2017)**

02.02.2017
9. தென்குரங்காடுதுறை
10. திருமணஞ்சேரி
11. திருவாவடுதுறை சமாதிகள்
12. கோமுத்தீஸ்வரர்
03.02.2017
13. இராமேஸ்வரம் (22தீர்த்தங்கள்)
04.02.2017
14. சிதம்பரம்

**வடஇந்திய யாத்திரை (12.08.2018 - 22.08.2018)**

12.08.2018
1. காசி
13.08.2018
2. காசி தர்ப்பணம் கங்கை
3. திரிவேணிசங்கமம்
15.08.2018
4. கேதாரநாத்
5. அநேகதங்காவதம்
17.08.2018
6. உச்சிமாத்
7. பத்திரிநாத்
8. இந்திரநீலபர்வதம்

18.08.2018
9. மானாக்கிராமம் பிள்ளையார்கோயில்
10. வியாசர்குகை
11. மானசரோவர் தீர்த்தம்

20.08.2018
12. ஹரித்துவார்

21.08.2018
13. நேபாளம் பசுபதி நாதர் கோயில்

22.08.2018
14. ஜல நாராயணர் கோயில்

**மலேசியத் திருத்தல யாத்திரை (13.12.2018 - 24.12.2018)**

15.12.2018 கோலாலம்பூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

16.12.2018 பங்சார் இராமலிங்கேஸ்வரர் கோயில்

17.12.2018 செந்ரூல் ஆதீஸ்வரன் கோயில் செந்ரூல் கிழக்கு தண்டாயுதபாணி கோயில்

18.12.2018 பத்துமலை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயில்

20.12.2018 சம்போரெங் சீன பௌத்தகோயில் ஈபோ மகாகணபதி ஆலயம்

21.12.2018 தண்ணீர்மலை (பினாங்) பாலதண்டாயுதபாணி சுவாமி கோயில்

22.12.2018 பகோடா பௌத்த ஆலயம்

23.12.2018 கிளாங் சுப்பிரமணியர் கோயில் ஆறுவாசல் கோயில்

# ஈழத் திருத்தல யாத்திரைகள்

2012 திருக்கேதீச்சரம் தேர், தீர்த்தம்
முன்னேஸ்வரம் மாயவனாறு தீர்த்தம்
**13.07.2013 மட்டக்களப்பு** மயிலம்பாவெளி
ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயில்
திருக்கோயில்
ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமிகோயில்
மண்டூர் முருகன்
கிட்டங்கி பிள்ளையார்
கொக்கட்டிச்சோலை
தான்தோன்றீஸ்வரர்
14.07.2013 அமிர்தகழி
(மாமாங்கப்பிள்ளையார்)
கல்லடி (திருச்செந்தூர் முருகன்)
பொலநறுவை சிவாலயம்

**18.10.2013 யாழ்ப்பாணம் தலயாத்திரை**
வல்லிபுர ஆழ்வார்
மாவிட்டபுரம்
கீரிமலை - நகுலேஸ்வரம்,
திருவடிநிலை
பொன்னாலை
காரைநகர் சிவன்கோயில்
19.10.2013 நல்லூர் கந்தன்
வண்ணைவைத்தீஸ்வரன்கோயில்
11.10.2014 திருகோணமலை
கந்தளாய் சிவன்கோயில்
தம்பலகாமம் ஆதிசிவன்கோயில்
கன்னியா வெந்நீரூற்று
சிவானந்த தபோவனம்
12.10.2014 திருகோணமலை
பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
திருக்கோணேஸ்வரம்

**2015 கதிர்காமம் தலயாத்திரை**
26.07.2015 காலி சிவன்கோயில்
தெய்வேந்திரமுனை(தெவிநுவர)
செல்லக்கதிர்காமம்
மாணிக்கபிள்ளையார்
கதிர்காமக்கந்தன்
தெய்வானை அம்மன்
சிவன் ஆலயம்
கதிரமலை

**யாழ்ப்பாணம் தலயாத்திரை**
24.10.2015 நயினாதீவு
25.10.2015 கீரிமலை நகுலேஸ்வரம்
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
நல்லூர் கந்தசுவாமி கோயில்
தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
21.02.2016 இணுவில் கந்தசாமி கோயில்

**திருகோணமலை தலயாத்திரை**
14.05.2016 கன்னியா வெந்நீரூற்று
தம்பலகாமம் ஆதிசிவன் கோயில்
திருக்கோணேஸ்வரம்
பத்திரகாளி அம்மன் கோயில்
15.05.2016
திருக்கரைசையம்பதி, கங்குவேலி
மல்லிகைத்தீவு சிவன்கோயில்
16.09.2016 முன்னேஸ்வரம்
மானாவாரி சிவன்கோயில்
17.03.2017 கீரிமலை நகுலேஸ்வரம்
18.03.2017 வல்லிபுர ஆழ்வார்
புலோலி பசுபதீஸ்வரர்
செல்வச்சன்னதி முருகன்
காரைநகர் சிவன் (ஈழத்துச்சிதம்பரம்)
19.03.2017 இணுவில்
கந்தசாமி கோயில்
ஞானலிங்கேஸ்வரர்
05.08.2017 முறிகண்டி பிள்ளையார்
06.08.2017 மானிப்பாய் மருதடி விநாயகர்
ஜம்புகோளப் பட்டினம் சிவன்
இணுவில் கந்தசுவாமி
நல்லூர்க் கந்தன்
07.08.2017 இணுவில் பரமானந்தவல்லி
மாதம்பை முருகன்
18.10.2017 வல்லிபுர ஆழ்வார்
செல்வச்சந்நிதி முருகன்
மாவிட்டபுரம் கந்தன்
கீரிமலை - நகுலேஸ்வரம்
காரைநகர்ச் சிவன்கோயில்
19.10.2017 நல்லூர் கந்தன், ஆதீனம்
20.10.2017 முறிகண்டிப் பிள்ளையார்
ஒட்டுசுட்டான்
வவுனியா கோயிற்குளம் சிவன்

2005 - 2009 மலேசியா
புராணபடனம் - திருவாதவூரடிகள் புராணம்
ஸ்கொட்றோட் கந்தசாமி கோயில்.
ஆதீஸ்வரன் கோயில்.
அருள் நெறித் திருக்கூட்டம்.
பரஞ்சோதி விநாயகர் ஆலயம்.
படிப்பு:- மலேசியா திரு. கணேஸ்வரன்
பயன்:- இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார்.
2010 படிப்பு: ஏ. அனுசாந்தன்
பயன்: இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார்.
2011-2012 படிப்பு: சு. பத்மநாதன்
பயன்: இயக்குநர் சைவப்புலவர் செ நவநீதகுமார்.
09.12.2013 - 18.12.2013 படிப்பு: வே. கனகசபாபதி
பயன்: இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார்.
27.12.2014 - 05.01.2015 படிப்பு: வே. கனகசபாபதி
பயன்: இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார்.

**அவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோயில்**

29.08.2014 - 31.08.2014 **சைவ நெறி மாகாநாடு.** உலகசைவப்பேரவை ஏற்பாட்டில் இலங்கையிலிருந்து எமது இயக்குநர் உட்பட ஐவர் அழைக்கப்பட்டனர்
30.08.2014 சிட்னி முருகன் கோயில், மகாநாடு ஆரம்பம்
01.09.2014 சிட்னி சிவன் கோயில்
வெங்கடேசப்பெருமாள் கோயில்
04.09.2014 மெல்போன் திருவள்ளுவர் அறக்கட்டளை அமைப்பு ஏற்பாட்டில் சொற்பொழிவு "**கந்தபுராணமும் தமிழும்**" சைவப்புலவர் செ. நவநீதகுமார்
05.09.2014 மெல்போன் சிவாலயம் சொற்பொழிவு "**மகோற்சவம்**" சைவப்புலவர் செ. நவநீதகுமார்
06.09.2014 சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் சொற்பொழிவு "**பாடும்பணியே பணியாய் அருள்வாய்**" சைவப்புலவர் செ. நவநீதகுமார்
07.09.2014 புராணபடனம் - அருள்நெறித்திருக்கூட்டம், மலேசியா.
2015 படிப்பு: கு. பாலசண்முகன்
பயன்: இயக்குநர் சைவப்புலவர் செ. நவநீதகுமார்
16.09.2016 திருவாசக பெருவிழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்
07.08.2017 திருமுறைப் பெருவிழா இணுவில் பயிற்சிமையம்
17.12.2017 முன்னேஸ்வரம் திருவாசகப்பெருவிழா
22.07.2018 கதிர்காமம்
25.12.2018 **முன்னேஸ்வரம்** பிரதம குரு பிரம்ம ஸ்ரீ ச. பத்மநாபன் அவர்களின் ஒழுங்கமைப்பில் திருவாசக முற்றோதல்
கொழும்பு பயிற்சிமையத்தினர் 33 பேர்
இணுவில் பயிற்சிமையத்தினர் 37 பேர்

போயா தோறும் **இரத்மலானை** நந்தீஸ்வரம் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்
மார்கழித்திருவாதிரை விசேட பூசை
சிவராத்திரி லிங்கோற்பவர் பூசை

உ
சிவமயம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

## அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்
## சுந்தரமூர்த்திநாயனார் - திருப்புன்கூர்

7ஆம் திருமுறை பண் : தக்கேசி

திருவடிகள்
திருச்சிற்றம்பலம்

1. **அந்தணாளனுன் அடைக்கலம் புகுத**
**அவனைக் காப்பது காரண மாக**
**வந்த காலன்றன் ஆருயி ரதனை**
**வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்**
**எந்தை நீயெனை நமன்தமர் நலியில்**
**இவன்மற் றென்னடி யானென விலக்கும்**
**சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) அந்தணாளன் - அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டன், உன் அடைக்கலம்புகுத - தேவரீரைச் சரணடைய, அவனைக் காப்பது - அவனைப் புரப்பது, காரணமாகக் கொண்டு, வந்தகாலன்தன் - எதிர்த்துவந்த கூற்றுவனது, ஆருயிர் அதனை - அரிய உயிரை, வவ்வினாய்க்கு உன்றன் - கவர்ந்த தேவரீருக்கு இயல்பாயுள்ள, வண்மைகண்டு - வள்ளன்மையை அறிந்து, அடியேன் - அடியவனும், எந்தைநீ - எம் தந்தையாகிய தேவரீர், எனை - என்னையும், நமன் தமர் நலியில் - எமது தூதுவர் வருத்துவதாயின், இவன் என் அடியான்என - இவனும் என் அடியனென்று, விலக்கும் - விலக்கி யருளுகின்ற, சிந்தையால் - எண்ணத்தால், வந்து உன் திருவடி அடைந்தேன் - வந்து தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - வளவிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய இறைவனே என்றவாறு.

2. **வையகம் முற்று மாமழை மறந்து**
**வயலில் நீரிலை மாநிலந் தருகோம்**
**உய்யக் கொள்கமற் றெங்களை என்ன**
**ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்**
**பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்**
**பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்**
**செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) வையகம் முற்றும் - உலகம் முழுவதும், மாமழை மறந்து - சிறந்த மழை மறத்தலினால், வயலில் நீர்இலை - வயலில் நீர் இல்லை யாயிற்று, மாநிலம் தருகோம் - அதிக நிலம் கொடுப்போம், எங்களை - அடியோங்களை, உய்யக் கொள்க என்ன - மழை பெய்வித்து உய்யக் கொண்டருள்க என்று வேண்ட, ஒளி

கொள் - ஒளியைக் கொண்ட, வெண்முகிலாய் - வெண்ணிறமாகிய மேகங்களாகி, எங்கும் பரந்து - எவ்விடத்தும் பரவி, பெய்யும் - பெய்கின்ற, மாமழை - பெரிய மழையினாலாகிய, பெரு வெள்ளம் தவிர்த்து - பெரிய வெள்ளத்தை ஒழித்து, பெயர்த்தும் - மறுபடியும், பன்னிருவேலி கொண்டருளும் - பன்னிருவேலி நிலங் கொண்டருளிய, செய்கை கண்டு - திருவருட் செய்கையைப் பார்த்து, நின் திருவடி அடைந்தேன் - தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும் - கொழுமை வாய்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரை இடமாக உடையவனே என்றவாறு.

3. **ஏத நன்னிலம் ஈரறு வேலி**
**ஏயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்**
**கோத னங்களின் பால்கறந் தாட்டக்**
**கோல வெண்மணற் சிவன்தன்மேற் சென்ற**
**தாதை தாளற எறிந்தசண் டிக்குன்**
**சடைமி சைமலர் அருள்செயக் கண்டு**
**பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்**
**பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) நல்நிலம் - நல்ல நிலம், ஈரறுவேலி - பன்னிரண்டு வேலி கொடுத்த, ஏயர்கோன் உற்ற - ஏயர்கோன் கலிக்காம நாயனார் எய்திய, ஏதம் - துன்பத்தைச் செய்யும், இரும் பிணி தவிர்த்து - பெரிய நோயினை ஒழித்து, கோதனங்களின் - பசுக் கூட்டங்களினது, பால் கறந்து ஆட்ட - பாலைக் கறந்து திருமஞ்சனஞ் செய்ய, கோலம் - அழகிய, வெண்மணற் சிவன்மேல் - வெண்ணிறமாகிய மணலினாற் செய்த சிவ அருட்குறியின் மேல், சென்ற - சிதைக்கும் பொருட்டுச் சென்ற - தாதை தாளற - தந்தையின் கால்கள் அறும்படி, எறிந்த - துணித்த, சண்டிக்கு - சண்டேச நாயனாருக்கு, உன் சடைமிசை மலர் - தேவரீரது சடையிற்றரித்த கொன்றைமலர்மாலையை, அருள் செயக்கண்டு - அருளியதைப் பார்த்து, பூதஆளி - பூதநாதரே, பூம் - பொலிவினையுடைய, பொழில் திருப்புன்கூர் உளானே - சோலை சூழ்ந்த திருப்புன்கூரை உடையவனே, நின் - தேவரீரது, பொன் அடி அடைந்தேன் - பொன்னடியைச் சரண் அடைந்தேன் என்றவாறு.

4. **நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்**
**நாவினுக் கரையன் நாளைப்போ வானும்**
**கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி**
**கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்**
**குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) நல் தமிழ் வல்ல - நல்ல தமிழ்ப் பாடலில் வன்மையுற்ற, ஞானசம்பந்தன் - திருஞான சம்பந்தரும், நாவினுக்கரையன் - திருநாவுக்கரசரும், நாளைப் போவானும் - திருநாளைப் போவாரும், கற்றசூதன் - கற்றுவல்ல மூர்க்க நாயனாரும், நல்சாக்கியன் - நல்ல சாக்கிய நாயனாரும், சிலந்தி - சிலந்திப் பூச்சியும், கண்ணப்பன் - கண்ணப்ப நாயனாரும், கணம்புல்லன் - கணம்புல்ல நாயனாரும், என்று இவர்கள் - என்று கூறும்

இவர்கள் யாவரும், குற்றம் செய்யினும் - பலவிதமாகிய குற்றஞ் செய்தாலும், குணமெனக் கருதும் - அவற்றைக் குணமாகக் கொண்டருளின, கொள்கை கண்டு - தேவரீரது திருவருட் கொள்கையைப் பார்த்து, பொன் திரள் - பொற்றிரளும், மணி - மணிகளும், கமலங்கள் - தாமரைகளும், மலரும் - பரந்து விளங்கும், பொய்கைசூழ் - தடாகங்கள் சூழப்பெற்ற, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய பெருமானே, நின் - தேவரீரது, குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடியை, அடைந்தேன் - சரணடைந்தேன் என்றவாறு.

5. **கோல மால்வரை மத்தென நாட்டிக்**
**கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த**
**ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய**
**அமரர் கட்கருள் புரிவது கருதி**
**நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு**
**கண்டத் தேவைத்த பித்தநீ செய்த**
**சீலம் கண்டுநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) கோலம் மால்வரை - அழகிய பெரிய மந்தர மலையை, மத்தென நாட்டி - மத்தாக நிறுத்தி, கோள் அரவு சுற்றி - அம் மலையிடத்துத் துன்பஞ் செய்கின்ற வாசுகியாகிய பாம்பினைத் தாம்பாகச் சுற்றி, கடைந்து - பாற்கடலைக் கடைதலால், எழுந்த - அதில் தோன்றிய, ஆலம்நஞ்சு கண்டு - ஆலகால விடத்தைப் பார்த்து, அவர் - கடைந்த தேவர்களும் அசுரர்களும், மிக இரிய - மிகவும் அஞ்சித் திசைகள் தோறும் ஓட, அமரர்கட்கு - அவருட் டேவர்கட்கு, அருள்புரிவது கருதி - அருள் புரிந்து காத்தல் கருதி, நீலமார்கடல் விடந்தனை - நீல நிறம் பொருந்திய கடலில் எழுந்த விடத்தினை, உண்டு - பானம் பண்ணி, கண்டத்தே - திருமிடற்றிலே, வைத்த - தரித்தருளிய, பித்த - பித்தரே, நீ செய்த - தேவரீர் செய்தருளிய, சீலம் கண்டு - அருளிரக்கமுள்ள குணத்தைப் பார்த்து, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - அடைக்கலம் புகுந்தேன் என்றவாறு.

6. **இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்**
**இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்கம் இல்புலி வானரம் நாகம்**
**வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்**
**அயர்ப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்**
**அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு**
**திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) இயக்கர் - கந்தருவர்கள், கின்னரர் - கின்னரர்கள், யமனோடு - இயமனோடு, வருணர் - வருணர், இயங்குதீ - விளங்குகின்ற அக்கினி, வளி - வாயு, ஞாயிறு - சூரியன், திங்கள் - சந்திரன், மயக்கமில் புலி - மயக்கமில்லாத புலி, வானரம் - குரங்கு, தானவர் - அசுரர்கள், எல்லாம் - ஆகிய இவர் எல்லாரும்,

அயர்ப்பு ஒன்று இன்றி - சோர்வு சிறிதுமின்றி, நின் திருவடி அதனை - தேவரீரது திருவடிகளை, அர்ச்சித்தார் - வழிபட்டவராய், பெறும் - அவர் பெற்ற, ஆர் அருள் கண்டு - பெறுதற்கரிய திருவருளைப் பார்த்து, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

7. **போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்**
**பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து**
**பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்**
**தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட**
**ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை**
**நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்து**
**தீர்த்த னேநின்றன் திருவடிய டைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) போர்த்த - பொத்தின, நீள் - நண்ட, செவியாளர் - செவிப்பலனை யுடையவர்களாகிய, அந்தணர்க்கு - மறையவர்களுக்கு, பொழில் கொள் - சோலையினது தன்மையைப் பெற்ற, ஆல்நிழல்கீழ் - கல்லாலின் நீழலில், அறம் புரிந்து - தருமத்தை உபதேசித்து, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, அன்று - அந்நாளில், பாசுபதம் - பாசுபதக் கணையை, கொடுத்தருளினாய் - கொடுத்தருளினீர், பகீரதன் வேண்ட - பகீரதன் இரந்து வேண்ட, ஆர்த்து வந்து இழியும் - ஆரவாரித்து வானினின்று இறங்கும், புனற்கங்கை நங்கையாளை - புனலுருவாகிய கங்கை நங்கையை, நின் சடைமிசை - தேவரீரது சடையில், கரந்து - ஒளிக்கச்செய்த, தீர்த்தனே - புனிதனே, செழும் பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திரப்புன்கூ ருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

8. **மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்**
**இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்**
**காவ லாளரென் றேவிய பின்னை**
**ஒருவ னீகரி காடரங் காக**
**மானை நோக்கியோர் மாநட மகிழ**
**மணிமு ழாமுழக் கவருள் செய்த**
**தேவ தேவநின் திருவடிய டைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) மூ எயில் - மூன்று புரங்களையும், செற்றஞான்று - எரித்த நாளில், உய்ந்த மூவரில் - சாவாது பிழைத்த மூவர்களில், இருவர் - இரண்டுபேர், நின் திருக்கோயிலின் வாய்தல் - தேவரீரது திருக்கோயிலின் திருவாயிலில், காவலாளர் என்று - வாயிற் காப்பாளரென்று, ஏவிய பின்னை - நியமித்த பிற்பாடு, ஒருவன் - மற்றொருவன், நீ - தேவரீர், கரிகாடு அரங்காக - கருநிறமுள்ள் சுடுகாடே திருவம்பலமாக, மானை நோக்கி - உமாதேவியாரைப் பார்த்து, மகிழ - அவர் மகிழுமாறு செய்யும், ஓர் மாநடம் - ஒப்பற்ற பெரிய திருக்கூத்தில், மணிமுழா முழக்க - அழகாகிய முழவு

வாத்தியத்தை முழங்கும்படி, அருள் செய்த - இரங்கியருளிய, தேவதேவ - தேவ தேவரே, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் - தேவரீரது, திருவடி அடைந்தேன் - திருவடியைச் சேர்ந்தேன் என்றவாறு.

**9.** **அறிவி னான்மிக்க அறுவகைச் சமயம்**
**அவ்வவர்க் கங்கே ஆரருள் பரிந்து**
**எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்**
**துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்**
**குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்**
**கோல வாளொடு நாளது கொடுத்த**
**செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில் திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) அறிவினால் மிக்க - மெய்யறிவினால் மேம்பட்ட, அறுவகை சமயம் - அறுவகைச் சமயங்களிலும், அவ் வவர்க்கு - அவ்வச் சமயங்களை யுடையவர்க்கு, அங்கே - அவ்வச் சமயத்தே, ஆர்அருள் புரிந்து - அரிய திருவருளைச் செய்து, எறியும் மா கடல் - அலை யெறிகின்ற பெரிய கடல் சூழ்ந்த, இலங்கையர் கோனை - இலங்கையர்க்கரசனான இராவணனை, துலங்க - நடுங்குமாறு, மால் வரைகீழ் - பெரிய கைலாய மலையின் கீழ், அடர்த்திட்டு - நசுக்கி, குறிகொள் - இரங்கியருளல் வேண்டு மென்னும் குறிப்பினையுடைய, இன்னிசையின் - இனிய இசையோடு கூடிய, பாடல் கேட்டு - பாட்டினைக் கேட்டு, கோலம் - அழகிய, வாள் ஒடு நாள் அது கொடுத்த - வாளோடு ஆயுளையும் கொடுத்தருளிய, செறிவு கண்டு - திருவருட் செய்தியைப் பார்த்து, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூ ருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - சரண் புகுந்தேன் என்றவாறு.

**10.** **கம்ப மால்களிற் றின்னுரி யானைக்**
**காமற் காய்ந்ததொர் கண்ணுடை யானைச்**
**செம்பொ னேயொக்கும் திருவுரு வானைச்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானை**
**உம்பர் ஆளியை உமையவள் கோனை**
**ஊரன் வன்தொண்டன் உள்ளத் தாலுகந்து**
**அன்பி னாற்சொன்ன அருந்தமி டைந்தோ**
**டைந்தும் வல்லவர் அருவினை இலரே.**

(ப-ரை) கம்பம் - அசைதலையுடைய, மால்களிற்றின் - மதமயக்கத்தையுடைய யானையினது, உரியானை - தோலையுடையவனை, காமன் காய்ந்தது - மாரவேளை எரித்தாகிய, ஓர் கண்ணுடையானை - ஒப்பற்ற நெற்றிக்கண்ணை யுடையவனை, செம்பொன் ஏ ஒக்கும் - செந்நிறத்தையுடைய பொன்னையே ஒப்பாகின்ற, திருவுருவானை - திருமேனி யுடையானை, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திரப்புன்கூ ருளானை - திருப்புன்கூரில் எழுந்தருளியவரை, உம்பர் ஆளியை - தேவர்களிற் சிறந்தவனை,

உமையவள் கோனை - உமாதேவியாரின் தலைவனை, ஊரன் வன்தொண்டன் - ஊரனாகிய வன்றொண்டன், உள்ளத்தால் உகந்து - மனத்தால் விருப்பங்கொண்டு, அன்பினால் சொன்ன - அன்பினால் உரைத்த, அரும் தமிழ் - அருமையாகிய தமிழ்ப் பாட்டுக்கள், ஐந்து ஒடு ஐந்தும் - பத்தும், வல்லவர் - கற்று ஓதவல்லவர்கள், அருவினை இலர் - நீங்குதற்கரிய வினைகளை இல்லாதவராவர் என்றவாறு.

திருசிற்றம்பலம்

உரைக்குறிப்பு : கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்
உதவியவர் : வ. பேரிந்பநாயகம்.

உ
சிவமயம்

# முப்புரம் எரித்த விளக்கம்

சிவபெருமான் மூன்று புரங்களைச் சிரித்து எரித்தார். அவர் மேருமலையாகிய வில்லை வளைத்தார். அம்பு கோத்து எய்யவில்லை. அதற்கள் அம்பாக இருந்த திருமாலுக்கு அகங்காரம் வந்தது. அதை எண்ணிச் சிரித்தார் சிவபெருமான். அந்தச் சிரிப்பே திரிபுரங்களை அழித்தது. தாரகாட்சன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் இரும்பு, வெள்ளி, பொன் ஆகியவற்றாலான மூன்று பறக்கும் கோட்டைகளை உடையவர்களாகி, மக்களுக்குத் துன்பத்தைச் செய்து வந்தார்கள். திரிபுரங்களையும் பறக்கச் செய்து எங்கேனும் இறக்கிப் படியச்செய்தார்கள். இவ்வாறு அவர்கள் தமக்குக் கிடைத்த கோட்டைகளின் வலிமையால் யாவருக்கும் துன்பம் உண்டாக்கியதை அறிந்த இறைவன் அக்கோட்டைகளை அழித்தான். அசுரர்களை அழிக்கவில்லை. அவர்கள் இறைவனைப் பணிந்து தொண்டு செய்தனர். தாரகாட்சனும், வித்தியுன்மாலியும் வாயில் காவலர்களாகவும், கமலாக்கன் குடமுளவு வாசிப்பவனாகவும் இறைவன் திருத்தொண்டில் ஈடுபட்டார்கள்.

புராணக்கதைகளுக்கு உட்பொருள் உண்டு. இறைவனுடைய திருவருட்செயல்கள் சில உண்மைகளை எடுத்துக்காட்டுபவை; மூன்று புரங்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களைக் குறிப்பவை. இறைவன் ஞானசொரூபி. அவன் புன்முறுவலாகிய ஞானத்தால் மும்மலங்களும் அழிந்தன. அவற்றோடிருந்த அசுரர்கள் மும்மலத்தோடு உள்ள ஆன்மாக்கள். மலம் நீங்கிய ஆன்மாக்கள் பேரின்பப் பெருவாழ்வை அடையும். அவ்வாறு அடைந்ததைக் காட்டுவது மூன்று அசுரர்களும் இறைவன் திருத்தொண்டில் ஈடுபட்டு இன்பத்தை அடைந்த செயல். இக்கருத்தை திருமந்திரச் செய்யுள் கூறுகிறது.

**அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்**
**முப்புரம் செற்றனன் என்பார்கள் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறிவாரே.**

நன்றி சைவநீதி

சென்ற இதழின் தொடர்ச்சி.

உ
சிவமயம்

# சைவசமயம்
# மாணவர் அறிவுப் பெட்டகம்
## (வினா விடை)

**107. மெய்கண்ட சாத்திர நூல்கள் எத்தனை? அவை யாரால் இயற்றப்பட்டன?**

மெய்கண்ட சாத்திர நூல்கள் 14. அவையாவன,

| நூல்களின் பெயர் | இயற்றியோர் பெயர் |
|---|---|
| 1) திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார். |
| 2) திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார். |
| 3) சிவஞானபோதம் | மெய்கண்டதேவர். |
| 4) சிவஞானசித்தியார், 5) இருபாவிருப.்.து | அருணந்திதேவர். |
| 6) உண்மைவிளக்கம் | திருவதிகை மனவாசகம் கடந்தார் |
| 7) சிவப்பிரகாசம், 8) திருவருட்பயன், 9) வினாவெண்பா, 10) போற்றிப்ப.்.றொடை, 11) கொடிக்கவி, 12) நெஞ்சுவிடுதூது, 13) உண்மைநெறிவிளக்கம், 14) சங்கற்ப நிராகரணம் | உமாபதிசிவாசாரியார் (இவர் இயற்றிய நூல்கள் எட்டும் சித்தாந்தஅட்டகங்கள் எனப்படும்) |

**108. i) குமரகுருபரர் எத்தனையாம் வயதில் யாருடைய அருளால் பேசும் திறன் பெற்றார்? ii) அப்போது அவர் பாடிய நூல் யாது?**

i) தனது ஐந்தாவது வயதில் திருச்செந்தூர் முருகன் அருளால்.

ii) கந்தர்கலி வெண்பா.

**109. குமரகுருபரர் அருளிச் செய்த நூல்கள் எவை?**

கந்தர்கலி வெண்பா, கயிலைக்கலம்பகம், மதுரைமீனாட்சி பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம், திருவாரூர்நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம், சிதம்பரமும்மணிக்கோவை, சகலகலாவல்லிமாலை, காசித்துண்டிவிநாயகர் பதிகம், மறைத்தமிழ்நூல், சிதம்பரச் செய்யுள்கோவை, திருச்செந்தூர்கலிவெண்பா, மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரை மீனாட்சிகுறம் என்பன.

**110. குமரகுருபரர் என்ன காரணத்திற்காகச் சகலகலாவல்லிமாலை பாடினார்?**

டில்லி பாதுஷாவான ஷாஜகானிடமும், காசிப்பிரதேச ஆளுநரிடமும் உதவிபெறுவதற்கு, ஹிந்துஸ்தானி மொழி தெரியாதிருந்தமை தடையாக இருந்ததால் பன்மொழிப்புலமை வேண்டிச் சகலகலாவல்லிமாலைபாடி அவ்வாற்றலைச் சரஸ்வதி கடாட்சத்தால் பெற்றுக்கொண்டார்.

**111. 'தூக்கும் பனுவல் துறைதோய்ந்த' என்னும் சகலகலாவல்லி மாலைப் பாடலை அடிமுறை பிறழாமல் எழுதுக.**

"தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வி சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே! சகலகலாவல்லியே!"

**112. i) பராபரக்கண்ணி யாரால் பாடப்பட்டது? ii) அது எத்தனைஅடிகளால் ஆன எத்தனை பாடல்களைக் கொண்டது?**

i) தாயுமானவர்

ii) இரண்டு அடிகளால் ஆன நூறு பாடல்களைக் கொண்டது.

**113. கந்தரலங்காரம் யாரால் எப்போது ஏன் பாடப்பட்டது?**

அருணகிரிநாதரால், சாவின்விளிம்பில் அருணகிரிநாதர் இருந்த போது அவர்கண்ட அருள்வடிவையே கந்தரலங்காரமாகப் பாடப்பட்டது.

**114. கந்தபுராணம் யாரால் எவ்விடயங்களைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டது?**

கச்சியப்பசிவாசாரியரால் பாடப்பட்டது. முருகனின் பிறப்பு, வளர்ப்பு, திருவிளையாடல், சூரபத்தனுடன் நடத்திய போர், தெய்வயானை - வள்ளி திருமணம் முதலான விடயங்களைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டது.

**115. i) இந்நூலின் சிறப்புக்காரணம் யாது? ii) இதில் எத்தனை பாடல்கள் இடம் பெற்றுள்ளன?**

i) 'திகடசக்கரச் செம்முக மைந்துளான்..." என்று முருகனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட சிறப்படையது.

ii) 10345 பாடல்களைக் கொண்டது.

**116. கந்தசஷ்டி விரதகாலங்களில் முருகன் கோயில்களில் கந்தபுராணத்தின் எப்படலம் 'புராணபடனம்' செய்யப்படுகின்றது?**

சூரபத்மன் வதைபடலம் முதல் மீட்சிப்படலம் வரையாயனபகுதிகள்.

**117. சைவசமயத்தின் முதனூல்கள் எவை?**

வேதம் - பொது நூல்
ஆகமம் - சிறப்பு நூல்.

**118. வேதங்களை எழுதாமறை, சுருதி, அபௌருஷய நூல்கள் எனவழங்கக் காரணம் என்ன?**

எழுதாமறை - எழுதப்படாத நூல்.
சுருதி - செவிவழியாகப் பேணப்பட்ட நூல்.
அபௌருஷய - மனிதரால் ஆக்கப்படாத நூல்.

**119. i) வேதங்கள் யாரால் நான்காக வகக்கப்பட்டது?**

**ii) அவை ஒவ்வொன்றும் எவ்வெவற்றைக் கூறுகின்றன?**

i) வேதவியாசரால்.

ii) இருக்கு - இதன் பொருள் பாட்டு. அக்கினி, இந்திரன், வருணன் முதலிய தெய்வவழிபாடு பற்றிக் கூறுகிறது.

யசுர் - யாகத்தை (வேள்வியை) அடிப்படையாகக் கொண்டு யாக முறைகள் பற்றிக் கூறுகிறது

சாமம் - இதன் பொருள் இசை. இசைப்பாடல்களால் அமைந்தது. வேள்வியின்போது சாமவேதம் ஓதப்படும்.

அதர்வணம்- உலகியல் வாழ்க்கை, கிரியைகள், மந்திரங்களின் பிரயோகம் பற்றிக் கூறுகிறது. உரைநடையிலும் செய்யுள் நடையிலும் ஆக்கப்பட்டது.

**120. வேதத்தின் நான்கு பிரிவுகளும் எவை?**

1) சங்கிதைகள் - பாடல் தொகுப்புக்கள்.
2) பிராமணங்கள் - வேள்விக்கான விதிமுறைகள்.
3) ஆரணியங்கள் - மானசீக வேள்விகளைப் பற்றிய விளக்கங்கள்.
4) உபநிடதங்கள் - ஞானம் பற்றிய விளக்கங்கள். இவை வேதத்தின் இறுதிப் பகுதியாதலால் வேதாந்தங்கள் எனப்படுகின்றன.

**121. முத்தி இன்பம் நாடுவோரும், உலகியல் இன்பம் நாடுவோரும் எவ்வகை பஞ்சாட்சரத்தை ஓதுவர்?**

முத்தியை நாடுவோர் - சிகராதி பஞ்சாட்சரம். இது சூக்கும பஞ்சாட்சரம் எனப்படும் சி வா ய ந ம என்பது.

சி - சிவம் வா - திருவருட்சக்தி
ய - ஆன்மா ந - திரோதானசக்தி
ம - மலம்

உலகியலை நாடுவோர் - நகராதி பஞ்சாட்சரம். இது தூல பஞ்சாட்சரம் எனப்படும், ந ம சி வா ய என்பதாகும்.

**122. சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சரத்தில் குறிக்கப்பட்டுள்ள ஞான நடனம், ஊன நடனம் என்பவை யாவை?**

ஞானநடனம் - சி வ. ஊனநடனம் - ந ம.

**123. தீட்சை என்றால் என்ன?**

இறைவன் குருவினிடமாக நின்று ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுப்பது என்பது தீட்சை என்பதன் பொருள். தீஷா என்னும் வடசொல் தீட்சை எனவந்தது.

**124. சைவசமயத்தில் இடம்பெறும் மூவகைத் தீட்சைகளும் எவை?**

1) சமயதீட்சை - சைவாசாரத்தை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கும் தீட்சை. சரியை நெறியாளர்க்குரியது.

2) விசேடதீட்சை- சிவபூசை செய்வதற்கும், சிவாகமங்களை ஓதுவதற்கும், யோகசாதனை மேற்கொள்வதற்கும் அதிகாரமளிக்கும் தீட்சை. கிரியை, யோகம் ஆகிய இரு நெறியாளர்க்குரியது.

3) நிர்வாணதீட்சை - ஞான நெறியாளர்க்குரியது.

**125. தீட்சாகுருவால் வழங்கப்படும் தீட்சை முறைகள் ஏழும் எவை?**

1) நயனதீட்சை - குரு தனது அருட்பார்வையால் சீடனின் ஆணவ மலத்தைக் கெடுத்தல். (கருடபாவனையால் விஷம் நீங்குவது போன்றது)

2) பரிசதீட்சை - குரு தனது கரத்தாரல் சீடனைத் தொட்டு அவனது மாயாமலத்தைக் கெடுத்தல். (பறவை முட்டையில் பரிசித்து குஞ்சாக்குவது போன்றது)

3) மானசதீட்சை - குரு சீடனின் மனதில் பிரவேசித்து ஆன்மபோதத்தை நீக்கி, சிவபோதத்தை உண்டாக்குதல். (ஆமை எண்ணத்தால் முட்டையில் குஞ்சு பொரிக்கச் செய்வது போன்றது.)

4) சாத்திரதீட்சை - வேத, ஆகம உண்மைகளையும் ஆசார அநுட்டானங்களையும் விளக்குதல்.

5) மந்திரதீட்சை - (வாசகதீட்சை) திருவைந்தெழுத்தையும், பதினொரு மந்திரங்களையும் முறைப்படி உபதேசித்தல்.

6) யோகதீட்சை - குரு சீடனின் இதயத்தில் பிரவேசித்து ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தல்.

7) ஔத்திரிதீட்சை - குண்டம், மண்டலம் அமைத்து ஓமம் வளர்த்து (அக்கினிவளர்த்து) முறைப்படி கிரியை செய்தல். இது கிரியாவதி, ஞானாவதி என இருவகைப்படும்.

கிரியாவதி - குண்ட, மண்டலங்களை புறத்தே அமைத்துச் செய்வது.

ஞானாவதி - குண்ட, மண்டலங்களை அகத்தே அமைத்துச் செய்வது.

**126. ஆதாரதீட்சை, நிராதாரதீட்சை எனறால் என்ன?**

ஆதாரதீட்சை - குருவைஆதாரமாகக் கொண்டு நயனம் முதலிய ஏழுவகைத் தீட்சைகளும் சகலருக்குச் செய்வது.

நிராதாரதீட்சை - இறைவனே நேராக நின்று பிரளயாகலருக்கு நயனம், பரிசம், மானசம் ஆகிய தீட்சைகளைச் செய்வது.

**127. i)தானம் என்பதன் பொருள் என்ன?**

**ii) அன்னதானம் எவ்வகைக்குள் உட்படுத்தப்படுகிறது?**

i) தானம் என்பது கொடை. எவ்வித பிரதியுபகாரமுமின்றி பொருளை ஒருவர் மற்றவருக்கு வழங்குதலே உண்மையான தானம்.

ii) அன்னதானம் நித்தியதானம் என்னும் வகையுள் உட்படுத்தப்படுகிறது.

தொடரும்..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு) M.A.

சென்ற இதழின் தொடர்ச்சி

# யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்)

## உறுப்பியலில் தளை

சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி.

**67. ஆசிரியத் தளையையும் ஆசிரியச் சீரையும் ஆராய்க?**

ஆசிரியத் தளை

ஆசிரியத்தளையில் தளை காணும் பொழுது,

1) நின்ற சீர் மாச்சீராக இருக்க, இதனை அடுத்து வருஞ் சீரின் முதலசை நேரசையாகவும் (மாமுன் நேர்) ஒன்றுதலாகிய முறையும்,
2) நின்ற சீர் விளச் சீராகவும் வருஞ் சீரின் முதலசை நிரையாகவும் (விள முன் நிரை) ஒன்றுதலாகிய முறையும் ஆசிரியத் தளை ஆகும்.

இங்கு மேலே முதலிற் கூறப்பட்டது நேரொன்றாசிரியத்தளை எனவும், இறுதியிற் கூறப்பட்டது நிரையொன் றாசிரியத் தளை எனவும் ஆசிரியத்தளை 2 வகைப்படும்.

குறிப்பு:- "மாமுன் நேரும் விளமுன் நிரையும் வருவதாசிரியத்தளை யாமே" என்று மனனஞ் செய்து கொள்ளவும்.

ஆசிரியச் சீர்

ஆசிரியச் சீரில் 2 அசைகள் ஒவ்வொரு சீரையும் உண்டாக்கும். இப்படி அமையுஞ் சீரைக் கவனிக்கவும். இங்கே நின்ற சீர் வருஞ் சீர் என்ற பேச்சையோ, தளை பற்றியோ பேசுவதற் இடமில்லை.

| | | |
|---|---|---|
| நேர் நேர் - தேமா | | மாச்சீர் 2 |
| நிரை நேர் - புளிமா | | |
| நிரை நிரை- கருவிளம் | | விளச்சீர் 2 |
| நேர் நிரை - கூவிளம் | | |

இவ்விதம் 2 அசைகள் ஒவ்வொரு சீரிலும் இடம்பெற்று ஈரசைச் சீரை உண்டாக்கும். இப்படிப் பெறப்படும் மாச்சீர் 2, விளச்சீர் 2உம் ஆசிரியச் சீர் என்று கூறப்படும். இவை இயற்சீர் எனவும் அகவற் சீரெனவும் பெயர் பெறும்.

குறிப்பு:- "நேர் நேர் தேமா
நிரை நேர் புளிமா
நிரை நிரை கருவிளம்
நேர் நிரை கூவிளம்
எனுமிவை நான்கும் ஈரசைச் சீரே"
இவ்வாறு 2 அசையுள்ள சீரே ஆசிரியச் சீராகுமென மனனஞ் செய்க.

**68. பின்வரும் குறள் வெண்பாவிற்குத் தளை காண்க?**

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

குறிப்பு:- வெண்பாவில் 'மாமுன் நிரையும் விளமுன் நேரும்' என்ற இயற்சீர் வெண்டளையும் 'காய் முன் நேர்' என்ற வெண்சீர் வெண்டளையுமே தளை காணும்பொழுது கவனித்தல் வேண்டும். மேலும் ஒவ்வொரு செய்யுளிலும் எல்லா அடிகளிலும் இறுதிச் சீரின் இறுதி அசைக்கும் இதனை அடுத்து வரும் அடியின் முதற்சீரின் முதலசைக்கும் தளை காணவேண்டுமென்பதையும்

மறந்துவிடாதீர்கள். இவற்றைக் கருத்திற் கொண்டு மேற் கூறப்பட்ட குறள் வெண்பாவிற்குத் தளை காண்போம்.

| நின்றசீர் | வருஞ்சீர் | தளை |
|---|---|---|
| மனத்துக் கண் | மா சிலன் | வெண்சீர் வெண்டளை (காய் முன் நேர்) |
| மா சிலன் | ஆ தல் | இயற்சீர் வெண்டளை (விளமுன் நேர்) |
| ஆ தல் | அனைத் தறன் | இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை) |
| அனைத் தறன் | ஆ குல | இயற்சீர் வெண்டளை (விளமுன் நேர்) |
| ஆ குல | நீ ர | இயற்சீர் வெள்டளை (விளமுன் நேர்) |
| நீ ர | பி ற | இயற்சீர் வெண்டளை (மாமுன் நேர்) |

**69. தளை தட்டுதல் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வ தென்ன?**

உதாரணமாக வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வரவேண்டு மென்பது வெண்பாவின் இலக்கணம் கூறுமிடத்துக் கூறுவர். இதற்கு மாறாக வேறுதளைகள் வெண்பாவில் வருவதில்லை. பிறதளை வருமாயின் தளை தட்டுதல் என்பர்.

தட்டுதல் - தவறுதல் - வேறுதளை வருதல் எனப்படும்.

**70. “ஐ காரம் நைவேல் ஓரும் குறிலியல்பு” என்ற கூற்றை விளக்குக?**

நைவு என்பதன் கருத்து, குறுகிய தென்பதாகும். ஐ காரமானது சீர் சிதைவு படும்படியாகக் குறுகிய ஐகாரமாக வரின் அது குற்றெழுத்தைப் போல (குறில்) 1 மாத்திரையாக அலகிடப்படு மென்றறிக. ஐகாரக் குறுக்கம் 1½ மாத்திரையாக அலகிடப்பட்டாலும் சீர் சிதைவு ஏற்படுமிடத்து மெலிதாக உச்சரிக்கப்பட்டுக் குறில் போலவும், சீர் சிதைவு ஏற்படாத விடத்துவலிதாகச் (சற்றுஒலங்கி) உச்சரிக்கப் பட்டு நெடில்போலவும் கொள்ளப்படும் என்பதாகும்.

**71. பின்வரும் பாடல் மூலம் ஐகாரத்தின் நிலைப்பாட்டை விளக்குக?**

“வாதவர்கோன் **பின்னையென்றான்** வந்தவர்கோன் **னாளையென்றான்**
யாதவர்கோன் யாதொன்று **மில்லையென்றான்** - ஆதலால்
வாதவர்கோன் **பின்னையினும்** வந்தவர்கோன் **னாளையினும்**
யாதவர்கோன் சொல்லே யினிது.” (ஔவை பாடல்)

இப்பாடலை நன்கு அவதானிப்போமாயின்

1ஆம் அடியிற் பின்னையென்றான், நாளையென்றான்

2ஆம் அடிளில் இல்லையென்றான்

3ஆம் அடியிற் பின்னையினும், நாளையினும் என இடம்பெற்ற சீர்களில் **ஐகாரம் குறில் இயல்பாகக்** கொள்ளப்படும். நெடிலாகக் கொள்ளப்படின், பூச்சீர், கனிச்சீர் களுக்குரிமை பூண்டு வெண்பாவிற் றளைதட்டும்(வெண்பாவிதியைச் சிதைத்துவிடும்) என விளங்கிக் கொள்க.

குறிப்பு:- ஐகாரமென்னும் (ஐ) ஆனது கை, ஙை, சை, ஞை, டை, ணை, தை, நை, பை, மை, ரை, லை, வை, ழை, ளை, றை, னை என்னும் எழுத்துக்களை

உச்சரிக்கும் போது அவ்வெழுத்துகளுக் குரிமை பூண்டு ஒலித்தலை அவதானிக்கவும். மொழிக்கு முதலில் வரும் ஐகாரம் ஐகாரக் குறுக்கமானாலும் அதற்கு மாத்திரை 1½ எனக் கொள்க. இவ்வாறு ஐகாரக் குறுக்கம் 1½ மாத்திரையாக வந்தாலும் இங்கே "ஐ" என்பது "அய்" என்பதுபோல ஒலிக்கும் ஆதலாற் செய்யுளில் "அ"வுக்கு 1 மாத்திரை "ய்"க்கு ½ மாத்திரை என 1½ மாத்திரையாக ஐ காரத்தைக் கருத்திற் கொண்டு நேரசையாகக் கணித்தல் வேண்டும்.

**72. ஆய்தம் தளைதட்டு மிடத்து எவ்விதம் நடந்துகொள்ளு மென்பதை உதாரண மூலம் விளக்குக?**

தளை தட்டுமிடத்தில் **ஆய்தம் குறிலே போல** அலகு பெறும். தளை தட்டாத விடத்து **ஒற்றுப் போல** இருக்கும்.

"அற்றா ரழிபசி தீர்த்தல் **அ.ஃ.தொருவன்**
பெற்றான் பொருள்வைப் புளி."

என்ற திருக்குறளின் வெண்பா ஒன்றை நோக்குவோமாயின், இக் குறள் வெண்பாவின் முதல் அடியின் இறுதியில் அமைந்திருக்கும் இரண்டு சீர்களையும் அவதானிக்கவும். அதாவது தீர்த்தல், அ.ஃ.தொருவன் என்ற இரண்டு சீர்களையும் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்விரண்டு சீர்களுக்கும் இடையில் தளைகாணும் பொழுது தீர்த்தல் என்பதை நின்றசீராகவும் அ.ஃ.தொருவன் என்பதை வருஞ்சீராகவும் வைத்துக் கொள்வோம். தளை காணும்பொழுது நின்ற சீர், காய்ச்சீரா, கனிச்சீரா, மாச்சீரா, விளச்சீரா என்பதை அறியவும். இச் சீருடன் தளை காணவரும் அடுத்து வரும் சீரின் முதலசை என்ன என்பதையும் அறியவும். வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையுமே தளை காணும்பொழுது பொருந்தும். எனவே மேற்கூறிய குறள் வெண்பாவின் முதல் அடியின் இறுதியில் அமைந்த இருசீர்களையும் கவனத்திற் கெடுத்தால், இங்கே நின்றசீர் "தீர்த்தல்" என்பது மாச்சீராகவும் வருஞ்சீரின் "அ.ஃ.தொருவன்" என்பதில் முதலசை "அ" நேரசையாகவும் வந்துள்ளது. இப்படி எடுத்தால்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தீர்த் | தல் | x | அ.ஃ. | தொரு | வன் | |
| நேர் | நேர் | x | நேர் | நிரை | நேர் | எனவந்து |

அதாவது நேர்முன் நேர் வந்து தளை தட்டும்.

இவ்வாறு தளை தட்டமிடத்தில் ஆய்தத்தைக் குறிலாகக் கொண்டால், அ.ஃ. என்பது "அகு" என்பது போலக் குறிலிணையாய் நிரையாசையாகிப் பின்வருமாறு அமைதலைப் பாருங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீர்த் | தல் | x | அ.ஃ. | தொரு | வன் |
| நேர் | நேர் | x | நிரை | நிரை | நேர் |
| தே | மா | x | கரு | விளங் | காய் |

என மா முன் நிரை வந்து இயற்சீர் வெண்டளையாகும். இவ்வாறு ஆய்தம் தளை தட்டுமிடத்துக் குறில் (குற்றெழுத்து) போல அலகு பெறும்.

மேலும், "நடுவின்றி தன்பொருள் **வெ.ஃ.தின்**" என்ற குறள் அடியினை நோக்கவும். இங்கே தளை தட்டாமையால், ஆய்தம் ஒற்றுப்போல (மெய்யெழுத்தாக) நின்றதையும் அவதானித்துக் கொள்ளவும். மேலும்,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு **ம.ஃ.தொப்ப** தில்." (திருக்குறள்)

இந்தக் குறளை நோக்குவோமாயின் இங்கே அய்தவெழுத்து(ஃ) **குறில்போன்று மிக்கொலித்து** தனக்கு முன்னே நின்ற குறிலுடன்(ம) சேர்ந்து, மஃ என்பது, "மகு" என்பது போலக் குறிலிணையாய் நிரையசை பெற்றுத் தளை தட்டாமல் நடந்த கொள்ளும்.

**73. தளை தட்டுமிடத்தில் ஒற்றுநீக்கி அலகிடுதலை உதாரணங் காட்டி விளக்குக?**

தளை தட்டுமிடத்தில் ஒற்று நீக்கி அலகிடுதலைப் பின்வரும் உதாரணச் செய்யுள் மூலம் விளங்கிக் கொள்வோம்.

"எண்டிசையு மன்னு மெழில்வா விளங்கதிரோன்
கொண்டல் பொழிலேழ் குலவரையோ - **அண்டர்பதி**
**முட்டப்** பரந்ததே வின்னா ணொலிமுற்றும்
வட்டத் திகிரிசூழ் மண்." (பாரதவெண்பா)

இவ் வெண்பாவை நோக்குவோமாயின் "அண்ட**ர்**பதி" என்பது தேமாங்கனி வாய்பாடு ஆகும். வெண்பாவிற் கனிச்சீர் வருவதில்லை. ஆகையால் "அண்டர்பதி" என்பதில் "ர்" என்னும் ஒற்றெழுத்து நீக்கப்பட்டால் கூவிளங்காய் வாய்பாடு அமைந்துவிடும். இவ் வெண்பாவில் வெண்சீரான கூவிளங்காய் வாய்பாடு பெறப்படும் பொழுது இவ் வெண்பாவின் மூன்றாம் அடியின் முதற் சீரான "முட்டப்" என்ற சீர், தேமா வாய்பாடு பெற்றிருப்பதால் "அண்டர்பதி" என்னும் நின்றசீருடன் "முட்டப்" என்ற வருஞ்சீர், தளை கொள்ளும் பொழுது, தளைதட்டாதிருக்கக் காணலாம்.

இவ்வாறு தளை தட்டுமிடத்து, ஒற்று நீக்கி அலகிடுவதை அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு:- இங்கே ஒற்றெழுத்து (ர்) நீக்கப்படும் பொழுது "அண்டர்பதி" என்ற சீரில் "ர்" என்ற ஒற்றெழுத்துக்கு முன்னால், "ட" என்ற குறிலும் "ர்" என்ற ஒற்றெழுத்துக்குப் பின்னால் "ப" என்ற குறில் எழுத்துக்களும் இடம் பெறுதலை அவதானிக்கவும். இவ்வாறு ஒற்றெழுத்தினைத் தேவை கருதி நீக்கும் முறையையே செய்யுளியலில் தளை தட்டுமிடங்களில் ஒற்று நீக்கி அலகிடுதல் என்று கூறுவர். மேலும் இன்னுமொரு செய்யுளைக் கலித்துறையிலே உதாரணத்திற் கெடுத்துக் கொள்வோம்.

"ஆடுங் கடைமணி யையே யணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யார்மாய மோநெடுந் **தூரத்திலே**
கோடுங் குளமும் குளக்கரை மேவிய குன்றுகளுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே." (அசதிக் கோவை)

இச் செய்யுளிலே "தூரத்திலே" என்ற சீரிலே இடம் பெற்றிருக்கும் தகரவொற்று (த்) நீக்கிக் கூவிளங்காய் வாய்பாடு வரும்படியாகக் கொள்ள வேண்டும்.

"கடையொரு சீரே விளங்கா யாகி" என்பது கட்டளைக் கலித்துறை விதியாகும். எனவே "தூரத்திலே" என்ற தேமாங்கனி வாய்பாடு தகரவொற்று(த்) நீக்கப்பட்டுத் "**தூரதிலே**" என்று கூவிளங்காயாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**74. மெய்யெழுத்துக்கள் யாப்பிலக்கணத்தில் அலகு பெறாமல் இருப்பது போலக் குற்றியலிகரமும் அவசியமான போது அது அலகு பெறாமல் நிற்கும் என்ற கூற்றினை உதாரணந் தந்து விளக்குக?**

"அருளல்ல **தியாதெனில்** கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூண் தினல்."

என்ற திருக்குறளில் முதலாவது அடியின் இரண்டாஞ் சீரில் "தியாதெனில்" என்பதில்லுள்ள "தி" (குற்றியலிகரம்) இதற்கு அலகு உண்டெனக் கொண்டால், இச்சீர் கருவிளம் ஆகும். முதலாம் அடியின் முதற்சீர் "அருளல்ல" என்பது புளிமாங்காய் வாய்பாடாகும். எனவே நின்ற சீரின் காய் முன் வருஞ்சீரின் (தியாதெனில் என்பதில் உள்ள முதலசை "தியா") நிரையசை ஒன்றுவதால் அது கலித்தளையாகி விடுமன்றோ? வெண்பாவிற் கலித்தளை வருவதில்லை. ஆகையால் "தி"என்றே எழுத்தைக் கணக்கிகற் சேர்க்காமல் இதற்குப் பதிலாக "த்" என்ற மெய்யெழுத்து நிற்பது போல வைத்து "தி"இருக்கும் இடத்தில் "த்" என வருவித்துப் பார்த்தல் அருளல்லத் யாதெனில் என்று வந்து "யாதெனில்" என்பது கூவிளமாகி விடுமென்று அறியவும். குற்றியலிகரம் மெய்யெழுத்துக்குரிய ½மாத்திரையே உடையதாக இருப்பதால், உச்சரிக்கும் போது அந்த எழுத்து மெய்யைப் போலவே ஒலிக்கும்.

"அருளல்லத் யாதெனில்" என்று சொல்லிப் பார்த்தால் "அருளல்லதியா தெனில்" என்பதும் அதேபோல ஒலிப்பதைக் காணலாம். எனவே மெய்யெழுத்துக்கள் யாப்பிலக்கணத்தில் அலகு பெறாமல் இருப்பது போலக் குற்றியலிகரமும் அவசியமானபோது அது அலகு பெறாமல் மேற்கூறப்பட்ட குறள் வெண்பாவில் அருளல்ல என்ற நின்ற சீர் தேமாங் காயாகவும், குற்றியலிகரத்தை நீக்கி அடுத்து நின்ற வருஞ்சீரை "யாதெனில்" எனவும் எடுத்துக் கொண்டால், வருஞ்சீரின் முதலசை "யா" நேரசை ஆகும். நின்றசீர் காய்ச் சீராகவும் வருஞசீரின் முதலசை (யாதெனில் என்ற சீரின்) "யா" நேரசை ஆகும். காய்முன் நேர் வந்து வெண்பாவில் ஒன்றி நிற்பது வெண்சீர் வெண்டளை ஆகும். இது வெண்பாவிற் குரியதாகுமென் றறிக.

**75. குற்றியலிகரம் தளை சிதையாவழி (தளைதட்டாதவிடத்து) அலகு பெற்று நிற்றலை விளக்குக?**

உதாரணம்:-

"நாக வரவுயர்த்தோ னங்கட் கரசுரிமைப்
பாக மளியாத பான்மையனை - வேகத்தால்
சேதிபர்கோன் வீழத் திறவாழி முன்னுயர்த்தாய்
யாதியாஞ் செய்ய தியம்பு." (பாரதவெண்பா)

இங்கே "யாதியாம்" எனவந்துள்ள சீரில் குற்றியலிகரம் அலகு பெற்றுள்ளதைக் காண்க யா - நேரசை, தியா - நிரையசை எனக் கூவிளம் வாய்பாடு பெற்று, இதனை அடுத்து வருஞ்சீரின் முதலசை "செ" உடன் சேர்ந்து இயற்சீர் வெண்டளையைத் தோற்றுவித்து வெளண்பாவுக்குரித்தாகி நிற்கிறது.

(தொடரும்..)

சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி

உ

# திருக்கயிலாய பரம்பரை - திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்த, சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமையம் இணுவில் - கொழும்பு

## சித்தாந்தரத்தினம் - திருமுறைநெறிச்செல்வர் பட்டமளிப்பு விழா

காலம்:- விளம்பி வருடம் மாசி மாதம் 19ஆம் நாள்
03.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

இடம்:- இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை மண்டபம்

### முன்னிலை

நல்லை ஆதீனம் **சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

சித்தாந்தரத்தினம் **சிவஸ்ரீ ந. குமாரராசக் குருக்கள்** அவர்கள்

### தலைவர்

சைவப்புலவர் சித்தாந்தச் செம்மணி. **செல்லையா நவநீதகுமார்** M.A, அவர்கள்.
(பயிற்சி மைய இயக்குநர்)

### முதன்மை விருந்தினர்கள்

பேராசிரியர் **இ. விக்னேஸ்வரன்** அவர்கள்

(உபவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

கலாநிதி, செஞ்சொற்செல்வர் **ஆறு. திருமுருகன்** அவர்கள்

(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

### கௌரவ விருந்தினர்கள்

பேராசிரியர் **க. தேவராசா** அவர்கள்

(தலைவர் - சுற்றுலாத்துறை, வடமாகாணம்)

சித்தாந்தரத்தினம் **வே. கனகசபாபதி** அவர்கள்
(யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)

**அன்பர்கள் யாவரையும் வந்து கலந்து, மகிழ்ந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

**விழாச்சபையினர்**

## நிகழ்வுகள்

- இணுவில் கந்தசுவாமி கோயில் வழிபாடு
- விருந்தினரை வரவேற்றலும் ஊர்வலமும்
- இளந்தொண்டர் சபை மண்டப வாயிலில் இடபக் கொடியேற்றல் முதன்மை விருந்தினர்.
- கொடிக்கவி பாடல் - பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்
- பாதபூசையும் ஆலாத்தி எடுத்தலும்
- மங்கல விளக்கேற்றல் - விருந்தினர்கள்
- நடராஜர், சமயகுரவர், சந்தானகுரவர் பூசை வழிபாடு
- சமயகுரவர், சந்தானகுரவர் துதிபாடல் - பயிலுனர்கள்
- வரவேற்புரை: இளஞ்சைவப்புலவர் த. மனோஜ்குமார் B.A.
  (இளந்தொண்டர்சபை செயலாளர்)
- **திருமுறைப் பண்ணிசை விருந்து:**
  - திருநெறிய தமிழிசை வாணி ஹம்சானந்தி தர்மபாலன் தலைமையில் கொழும்புப் பயிற்சி மையத்தினர்.
  - திருமுறைநெறிச்செல்வர் சித்தாந்தரத்தினம் ஜெயராசா அருள்தாஸ் அவர்கள் - இணுவில் பயிற்சி மையம்
  - திரு. அழகேசன் அமிர்தலோசனன்
  - திரு. அழகேசன் அமிர்தசிந்துஜன் - இளந்தொண்டர் சபை

  **அணிசெய் கலைஞர்கள்**

  வயலின் - திரு. சு. ஜெயராமன்
  மிருதங்கம் - திரு. க. கஜன்
  கெஞ்சிரா - அ. சண்முகப்பிரியன்
- **ஆசியுரை:** ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
- **தொடக்கவுரை:** ஞானஏந்தல் அ. பரமேஸ்வரன் அவர்கள்
- **தலைமையுரை:** தலைவர்
- **முதன்மை விருந்தினர் உரை**
- **பட்டமளிப்பு** பட்டம்பெறுவோர் : 2017, 2018 அணியினர்.
  (கொழும்பு - இணுவில்)

  **சைவநீதி சிறப்புமலர் நயவுரை**

  **விரிவுரையாளர்கள் கௌரவிப்பு**

  **சொற்பொழிவுகள் "முப்பொருள்"**


  சித்தாந்தரத்தினம் கலாமோகன் பிரகான் அவர்கள்

  **சிவத்தல யாத்திரைக் கவிதை**

  சித்தாந்தரத்தினம் வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன்
- **விருந்தினர் உரைகள்**
- **கலைநிகழ்வு: "சூரசம்காரம்"**
  இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்கள்.
- **மகிழ்வுரை:** சித்தாந்தரத்தினம் சி. நடராசா அவர்கள்.
- **மாகேஸ்வர பூசை**

# திருமூலர் திருமந்திரம் உரை இசை ஒலிப்பேழை வெளியீட்டுவிழா
















திருமந்திரப் பணிமன்றத்தினர் 18.11.2018 அன்று
கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடத்திய
திருமூலர் திருமந்திரம்
உரை இசை ஒலிப்பேழை
வெளியீட்டுவிழா













இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால் Sharp Graphics (Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.